T. 915.

உ

# சிவஞான போத

## உபந்நியாச பாடம்

வி. பி. காந்திமதிநாத பிள்ளை, B.A.,

வக்கீல், அம்பாசமுத்திரம்.

PALAMCOTTAH

The Palamcottah Printing Press

1918

# விஷய சூசிகை


பாடம் — சூத்திரம் I — பக்கம்

1. சுருதிப் பொருள்களை அனுமானப் பிரமாணத்தால் நிர்ணயிக்கவேண்டும் ... ... 3
2. இவ்வுலகம் பலவாய்ச் சடமாயுள்ளது ... ... 7
3. இவ்வுலகம் அவயவப் பகுப்புடையது ... ... 9
4. இவ்வுலகம் சுட்டியறியப்படுவது ... ... 10
5. இவ்வுலகம் ஒருசேர முத்தொழிற்படும் ... ... 11
6. இவ்வுலகம் உள்ளபொருள் ... ... 13
7. இவ்வுலகம் கர்த்தாவையுடையது ... ... 14
8. இவ்வுலகம் மாறிமாறி முத்தொழிற்படும்... ... 15
9. இவ்வுலகிற்குக் கர்த்தா அதன் சங்கார காரணனே ... 16
10. இவ்வுலகின் முதற்காரணம் மாயை ... ... 18
11. இவ்வுலகம் ஆணவமல நிவிர்த்தியின் பொருட்டு முத்தொழிற்படும் ... ... ... 20
12. இவ்வுலகின் முதற்கடவுள் அரனே ... ... 23

சூத்திரம் II

1. பெத்த உயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும் ... 26
2. பெத்த உயிர்கள் மாறிமாறி இறத்தல் பிறத்தல் புரியும்... 28
3. பெத்த உயிர்கள் தத்தம் இருவினைக் கேற்ப இறத்தல் பிறத்தல்களைப் புரியும் ... ... 29
4. உயிர்கட்கு இறத்தல் பிறத்தல் முதலியவற்றை நியதி செய்பவன் முதல்வனே ... ... 32
5. உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு ஒன்றாய் நிற்பன் ... 33

## விஷய சூசிகை


6. உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களின் வேருயும் நிற்பன ... 36

7. உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு உடனுயும் நிற்பன் ... 37

8. உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு அத்துவிதமாய் நிற்பன் ... 38

9. உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் தன் சத்தியோடு நீக்கமின்றி நிற்பன் ... 41


### சூத்திரம் III


1. உயிர் உண்டு ... ... ... 43
2. உயிர் தங்குவது உடலினுள் ... ... .. 45
3. உயிர் உடலின் வேறு ... ... ... 49
4. உயிர் ஐம்பொறிகளின் வேறு ... ... 50
5. உயிர் சூக்கும உடம்பின் வேறு ... ... 52
6. உயிர் பிராணவாயுவின் வேறு ... ... 54
7. உயிர் முதல்வனின் வேறு ... ... 55


### சூத்திரம் IV


1. உயிர் அந்தக்கரணங்களின் வேறு ... ... 57
2. உயிரின் அறிவை மறைப்பது ஆணவமலம் ... 59
3. உயிர் அந்தக்கரணங்களோடு கூடியறியும் ... ... 60
4. உயிர்க்கு அடுத்துநின்றுதவுவன அந்தக்கரணங்களே ... 61
5. உயிர் ஐந்துவிதமா யறியும் ... ... 62


### சூத்திரம் V


1. உயிரால் அதிஷ்டிக்கப்பட்ட கருவிகளே விஷயங்களை அளந்து அறியும் ... ... ... 6.

2. உயிராலதிஷ்டிக்கப்பட்ட கருவிகளும் அவ்வுயிரினையறியா. 69
3. முதல்வனால் அதிஷ்டிக்கப்பட்ட உயிர் அறியும் ... 70
4. முதல்வனால் அதிஷ்டிக்கப்பட்ட உயிரும் அம்முதல்வனை அறியாது ... ... ... 71
5. முதல்வன் உயிர்கட்கு உணர்த்தினும் விகாரியாகான் ... 72

## சூத்திரம் VI

1. சுட்டறிவால் அறியப்படும் பொருள் அசத்தாம் ... 74
2. ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் இல்லை ... 76
3. முதல்வன் சுட்டறிவினால் அறியப்படுபவனல்லன் ... 78
4. முதல்வன் எவ்வாற்றானும் அறியப்படானுமல்லன் ... 80
5. முதல்வன் சிவசத்தாம் ... ... 81

## சூத்திரம் VII

1. சிவம் அசத்தினை அறியாது ... ... 83
2. அசத்துப் பொருள்கள் ஒன்றனையும் அறியா ... 85
3. உயிர் சத்து அசத்துகளாகிய இருவகைப் பொருள்களையும் அறியும் ... ... ... 86
4. உயிர் சத்து அசத்துக்களின் உதவியால் அறியும் ... 87
5. உயிர் சத்தின்பால் நின்றும் அசத்தின்பால் நின்றும் அறியும் ... ... ... 88
6. உயிர் சத்துமன்று அசத்துமன்று ... ... 89

## சூத்திரம் VIII

1. உயிர் தன்னியல்பறியாது கருவிகளால் மயங்கி நிற்கும் ... 91
2. சிவம் உயிர்க்கு அதன் இயல்பை உணர்த்தும் ... 92
3. சிவம் உயிர்க்கு அதனியல்பைக் குருவுமாயுணர்த்தும் ... 93

4 சிவம் தவம் முற்றிய உயிர்க்கே அதன் சிறப்பியல்பை யுணர்த்தும் ... ... ... 95

5. தன் சிறப்பியல்புணர்ந்த உயிர், கருவிகளைநீங்கிச் சிவத்தை நாடிச் செல்லும் ... ... ... 97

## சூத்திரம் IX

1. தன்னியல்பு உணர்த்தப்பெற்ற உயிர், சிவத்தைத் தன்னுள்ளே சிவோகம்பாவனை செய்து நாடும் ... 99

2. சிவோகம்பாவனை செய்யும் உயிர்க்குப் பாசப்பொருள்கள் விரைந்து மறையும் ... ... ... 103

3. சிவோகம்பாவனையில் முற்றிய உயிர் சிவத்தின் ஞான சொரூபத்தைக் காணும் ... ... ... 104

4. சிவத்தின் ஞான சொரூபத்தைக் கண்ட உயிர், அக்காட்சியில் உறைத்து நிற்றற்கு முத்தி பஞ்சாக்கரத்தை யுச்சரிக்க வேண்டும் ... ... ... 105

## சூத்திரம் X

1. சிவஞான சொரூபம் விளங்கப்பெற்ற உயிர் அச்சிவத்தோடு ஒற்றித்து நிற்றல்வேண்டும். ... ... 107

2. சிவஞான சொரூபம் விளங்கப்பெற்ற உயிர், சிவபணியில் வழுவாது நிற்றலும் வேண்டும் ... ... 108

3. சிவத்தோடேகமாய் நிற்கும் உயிரை ஆணவமலம் தாக்காது ... ... ... 110

4. சிவத்தோடேகமாய் நின்று சிவபணி இயற்றும் உயிர்க்கு மாயா கன்மங்களுமில்லை ... ... ... 111

## சூத்திரம் XI

1. சிவம் உயிர்க்கு அறிந்தும் அறிவித்தும் உபகரிக்கும் ... 113

2. பாசம் நீங்கிய உயிர் சிவத்தின் இருவித உபகாரங்களையும் அறிந்து மறவாது அன்பு மீதூர்தல்வேண்டும் ... 116

3. சிவநிஷ்டையில் உறைந்து நிற்பவரே சிவத்தின் ஸ்ரீபாதம் அடைவர். ... ... ... 118

## சூத்திரம் XII

1. சிவப்பேற்றினை அடைந்த ஜீவன்முத்தன் மும்மலங்களையும் அறக்களைவன் ... ... ... 121

2. ஜீவன்முத்தன் சிவபத்தர்களோடு இணங்கி நிற்பன் ... 123

3. ஜீவன்முத்தன் பத்தர்தம் வேடத்தைச் சிவமெனக் கண்டு வழிபடுவன் ... ... ... 124

4. ஜீவன்முத்தன் சிவலிங்கங்களை சிவமென வழிபடுவன் ... 126

உ

# சிவஞான போதம்

## உபந்நியாச பாடம்

~~~~~~~~~~

## முன்னுரை

அன்பர்களே,

இவ்வுபந்நியாச விஷயம் தமிழ்ச் சிவஞான போதம். இச்சிவ ஞான போதம் தமிழ்ப் பாஷையிலுள்ள சைவ சாஸ்திரங்கட்கெல்லாம் முதனூலாக விளங்குவது. இந்நூல் ஒன்றே சைவ சாஸ்திரக் கருத்துக்களைச் சூத்திர ரூபமாக உணர்த்துவது. இதிலுள்ள சூத்திரங்கள் நூற்றுக்கணக்கானவைகளல்ல: பன்னிரண்டே. என்றாலும் இந்நூலில் சைவ சாஸ்திரக் கருத்துக்கள் யாவுமே வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வரையறைக் கருத்துக்களின் விபரங்களாய் அவற்றின் கண் அடங்குவனவே பிற. அன்றியும், இந்நூல் சைவ சாஸ்திரக் கருத்துக்களைக் கணக்கிட்டு மாத்திரம் கூறவுமில்லை. ஒவ்வொரு கருத்துமே தக்க முகாந்தரத்தால் தாபிக்கப்பட்டுமுள்ளது. இம் முகாந்தரமே தருக்க நூலில் 'ஏது' என்று சொல்லப்படும்.

இத்தகைய சிவஞான போதத்தைத் தமிழ்ப் பாஷையில் இயற்றி உபகரித்தவர் நம் தமிழ் நாட்டுச் சைவ சந்தான குரவர்களில் முதல்வரான மெய்கண்டதேவர். இவராலேயே நம் தமிழ்ப் பாஷைக்குச் சூத்திர ரூபமான சாஸ்திரமில்லாதிருந்த குறைவு நீக்கப்பட்டுள்ளது. இதுவன்றி இந்நூற்கு வார்த்திக உரையும் இவராலே கூறப்பட்டுள்ளது. இவ்வுரையில் ஒவ்வொரு சூத்திரமும் விஷயங்கட்குத் தக்கவாறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கூற்றிலுள்ள விஷயம் இன்னது, ஏது இன்னது என்பதும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இதுவுமன்றி, ஒவ்வொரு விஷயமும் அதற்குரிய ஏதுவினால் எவ்வாறு பெறப்படும் என்பதையுணர்த்தும் திருஷ்டாந்தமும் செய்யுள் ரூபமாய் விளக்கப்பட்டுள்ளது. என்றாலும், இவ்வுரை எல்லாராலும் எளிதில் அறியற்பாலதன்று. இதன்கண் அடங்கிய சாஸ்திர நுணுக்கங்களும் தருக்க நுணுக்கங்களும் பல. இந்நுணுக்கங்களனைத்தை
~~~~~~~~~~

யும் உணர்த்தும் நூல்களில் மிக ஆராய்ச்சியுடையார்க்கே இவ்வுணா நன்கு விளங்குவதாகும். இத்தகைய நூல்கள் நம் தமிழ்ப் பாஷை யில் மூற்காலத்திருந்து ஒழிந்தனவென்றும் இருந்திருப்பதில்லையென் றும் ஆராய்ச்சிக்காரர் பலதிறப்படுகின்றனர். எது எவ்வாறுயினும் ஒருகாலத்து இல்லாதிருந்தன என்பது நிச்சயம். இக்குறைவும் நீங்கி நம் தமிழ்ச் சிவஞான போதம் எல்லார்க்கும் நன்கு விளங்கும்படி யுபகரிக்கப்படவேண்டுவது மிக அவசியம். இவ்வுபகாரத்தைச்செய்த வர், நம் தமிழ்நாடு செய்த தவமே உருவாய் வந்த மாதவச் சிவஞான முனிவர்.

இச்சிவஞான முனிவர் நம் தமிழ்நாட்டிற்கும் தமிழ்ப் பாஷைக் குஞ் செய்துள்ள உபகாரத்திற்கு அளவின்று. ஆரிய பாஷையில் சூத்திர பாஷ்யங்களிருப்பனபோல், நம் தமிழ்ப் பாஷையிலும் இருத் தல் வேண்டுமென்பது இவரது முடிந்த கருத்து. இக்கருத்து நிறை வேறுதற்பொருட்டு இவர் இயற்றிய நூல் பல. தமிழிலக்கண நூல் கள் பலவற்றைச் சீர்பெறச் செய்தனர். பல சாஸ்திர நூல்களையும், முக்கிய தருக்க நூலொன்றையும் ஆரிய பாஷையினின்றும் மொழி பெயர்த்துதவினர். இச்சிவஞான போதத்திற்கே சிற்றுரை பேருரை யென இரண்டு பாஷ்யங்களும் இயற்றியருளினர். அவற்றுள் பேருரையே திராவிட மஹா பாஷ்யம் என இன்றும் வழங்கப்பட்டு வரும். இப்பாஷ்யம் முற்றும் வெளி வந்தவாறில்லை. இதன் உப காரத்தை நாம் முற்றும் அடைந்தவாறுமில்லை. இக்காலத்து நமக்கு உபகாரமாய் விளங்குவது இவரியற்றிய சிற்றுரையே. இச்சிற்றுரை யும் எல்லாராலும் அறிந்துகொள்ளும் விதத்தில் எழுதப்படவில்லை. விசேஷ அறிவும் தமிழ்ப் பாஷையிலுள்ள தருக்கம் இலக்கணமுதலிய கருவி நூற்பயிற்சியும் சாஸ்திரப் படிப்பும் உடையோரால் மாத் திரம் அறிந்துகொள்ளும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது. விசேஷக் கல்வியறிவு பெறுவதற்குத் தற்கால வர்த்தமானங்கள் இடங்கொடா என்பதையறிவோம். இத்தகைய கல்வியின்றிப் பொதுக் கல்வி யறிவு மாத்திரம் பெற்றுள்ளவர்கட்கும், தற்காலம் இச்சிவஞான போத ஆராய்ச்சியில் விருப்பம் உண்டாகிவருவதையும் அறிவோம். ஆத லால், இவர்களும் அறிந்துகொள்ளும் விதத்தில் இச்சிவஞான போதம் விளக்கப்படவேண்டுவது மிக அவசியம் என்பது என்னு

டைய கருத்து. இக்கருத்தே யானும் நூலியற்ற வல்லாத என்னை இவ்வுபந்நியாசம் இயற்றும்படி தூண்டியது.

இவ்வாறு தூண்டப்பெற்ற நான், இச்சிவஞானபோதத்திலுள்ள எல்லா விஷயங்களையும் விளக்கவில்லை. என் சிற்றறிவிற்கெட்டியவையும், பொது அறிவும் சிறிது தமிழ்ப் பாஷா ஞானமும் உடையோராலும் அறியற்பாலனவுமான விஷயங்களை மாத்திரம் விளக்கியுள்ளேன். இவ்விஷயங்களை விளக்குமுறையில், தற்கால அறிவிற்கேற்பச் சில மாறுதல்களையும் செய்துள்ளேன். பூர்வ ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்ட சில திருஷ்டாந்தங்களை விடுத்து வேறு திருஷ்டாந்தங்களாலும் விஷயங்களை விளக்கியுள்ளேன். சில திருஷ்டாங்களைத் தற்கால பூதசாஸ்திர ஆராய்ச்சிக்குத் தக்கவாறு மாற்றியுமுள்ளேன். என்றாலும், விஷயங்களில் யாதோர் மாறுதலும் செய்யவில்லையென்று நினைக்கிறேன். இம்மாறுதல்கள் யாவும் விஷய விளக்கத்தின் பொருட்டேயாதலால், அவைகள் பிழையாகாவென்றும் நினைக்கிறேன். பிழைகளேயாயினும் அப்பிழைகட்காக என்னை மன்னித்து இவ்வுபந்நியாசத்தை ஏற்றுக்கொள்ளும்படி சைவாபிமானிகள் தமிழபிமானிகளாகிய எல்லாரையும் மன்றாடி வேண்டுகிறேன்.

இவ்வுபந்நியாசத்தை யேற்றுக்கொள்ளும் உங்கட்கு இதனை யியற்றி முடித்ததற்கண் உதவிய பெரியார் நண்பர் பலர்களில் ஒருவரை எண்ணிச் சொல்லாதிருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. இந்நண்பர் திருநெல்வேலி இந்து கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள். இவர்களின் அறிவாற்றலும் தமிழ்க் கல்வியும் சாஸ்திரப் படிப்பும் எவராலும் வியக்கற்பாலன. இவ்வுபந்நியாசத்தை யியற்றுங்கால், அதிற்கண்ட விஷயங்களை இந்நண்பர் என்னோடு சம்பாஷித்துச் சீர்திருத்தங்கள் சொல்லியும், இதனை யியற்றி முடித்தபின் அசலெழுதியும் அச்சுப்பிழைகள் பார்த்தும் செய்துள்ள உபகாரம் என்றும் மறக்கற்பாலதன்று. இந்நண்பர்க்கும் இவ்வுபந்நியாசத்தை யியற்றுதற்கண் உதவிய மற்றும் நண்பர் பெரியார்கட்கும் என்னுடைய மனப்பூர்வமான வந்தனங்களை அளிக்கிறேன்.

V. P. காந்திமதிநாதன்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

# சிவஞான போத

## உபந்நியாச பாடம்

விநாயக வணக்கம்

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

ஸ்ரீ மெய்கண்ட தேவர் வணக்கம்

வேதத்தி னரும்பொருளை விமலனரு ணந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபால்
ஓதித்தேர்ந் தருந்தமிழா லெமக்குணர்த்தி யெம்மூனம்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம்.

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் வணக்கம்

குறியமுனி யருளியமெய் வாத்தினு
லவதரித்துக் கோதில் ஞானத்
துறைசைநமச் சிவாயகுரு வருட்கடலும்
வடமொழிதென் மொழிப்பேர்த் தூய
நிறைகடலு முண்டுபுனி தாத்துவித
சித்தாந்த நிலவப் பூமேல்
மறைமொழிமெய்ச் சிவஞான பாடியஞ்செந்
தமிழ்வகுத்த யோகி வாழி.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

# சிவஞான போத

## முதற் சூத்திரம்

அவன் அவள் அதுவெனும் அவை, மூ வினைமையின்
தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்துளதாம்;
அந்தம் ஆதி: என்மனர் புலவர்.

### முதற் பாடம்

சுருதிப் பொருள்களை அனுமானப் பிரமாணத்தால் நிர்ணயிக்கவேண்டும்.

உலகப் பொருள்களை மூன்று வேறு விதங்களால் அறிகிறோம். நேரிலும் அறிகிறோம். பிறிதொன்றன் மூலமாயும் அறிகிறோம். இவ்விருவிதங்களுமன்றி நூல்களாலும் அறிகிறோம். பொருள்களை நாம் நேரில் அறியும்போது, அவற்றின் தன்மைகளை நாம் அளந்தறிதற்கு உபகாரமாய் நிற்பது அவ்வவற்றின் பிரத்தியக்ஷரூபமே. இவ்வாறறியும் அறிவே பிரத்தியக்ஷப் பிரமாணம் எனப்படும். இப்பிரமாணத்தால் நாம் எல்லாப் பொருள்களையும் அறிய முடியாது. நமக்கு எல்லாப் பொருள்களும் பிரத்தியக்ஷமாதல் இல்லை. பிரத்தியக்ஷமாகக்கூடிய பொருளையும் வேறு விதத்தால் அறிவதுண்டு. மலையிலுள்ள தீயைப் பிரத்தியக்ஷமாக அறிதல் கூடும். ஆனால் அதனை எப்போதும் பிரத்தியக்ஷமாக அறிவதில்லை. அம்மலையினின்று கிளம்பிவரும் புகையைக் கண்டே அம்மலையில் தீயுண்டென்று ஊகித்தறிகிறோம். இனி பிரத்

தியக்ஷமாகமாட்டாத பொருளையும் இவ்வாறு ஊகித்தறிய லாம். அதாவது அதன் தன்மையைப் பிரத்தியக்ஷமாகும் வேறு பொருளினுதவியால் அளந்து அறியலாம். இவ்வறிவே அனுமானப் பிரமாணம் எனப்படும். இப்பிரமாணத்தால் ஒரு பொருளை நேரில் அறியவில்லையென்றாலும் வேறோர் பொரு ளில் அறியக்கிடக்கும் ஏதுக்கள் வாயிலாக அப்பொருளை நாம் ஊகித்தறிதற்கு இப்பிரமாணம் உதவும். இவ்வாறு ஊகித்தறி தலுமின்றி இன்னொரு விதத்தாலும் அறிவதுண்டென்றோம். அதுவே நூல்களால் அறிதலென்றும் சொன்னோம். ஈண்டுப் பொருள்களை நமக்கு அளந்தறிவிப்பன நூல்களே. இவற் றுள் கடவுளை யுணர்த்தும் நூல் சுருதி அல்லது ஆகமம் என் னும் பேரால் வழங்கப்படும். இவ்வாகமத்தைக் கொண்டறி யும் அறிவே ஆகமப் பிரமாணம் எனப்படும். ஆகவே பிர மாணங்கள் மூன்று வகையென முடியும். இப்பிரமாணங்களை உணர்த்தும் நூலே அளவைநூல் எனப்படும். இவற்றுள் சுருதிப்பொருளை நாம் அறிதற்கு உதவியாய் நிற்பது எது என்பதை ஆராய்வாம்.

சுருதிகள் கடவுளையுணர்த்தும் என்றோம். இக்கட வுளை நாம் கண்ணால் காணமுடியாது. காதால் கேட்க முடி யாது. வேறெந்த இந்திரியத்தாலும் அறியமுடியாது. இது பிரத்தியக்ஷப் பொருளன்று. என்றாலும் சுருதிகள் கடவு ளின் இயல்புகளைக் கூறுமென்றோம். ஆனால் இச்சுருதிகள் கூறுவதால் மாத்திரம் கடவுள் உண்டென்றேனும் அக்கடவு ளின் தன்மை இன்னதென்றேனும் துணிய ஒருப்படோம். இவ்வொரு காரணத்தால் மாத்திரம் நமக்குத் தெளிவு உண் டாவதில்லை. அன்றியும் ஆகமப்பிரமாணத்தால்மட்டும் கிடைக் கும் அறிவு கேவலம் நூல் அறிவு. அதனால் நமக்கு அனுபவ

அறிவு கிடைப்பதில்லை. இவ்வனுபவ அறிவே நமக்குப் பயன்தரும் அறிவு. இவ்வறிவு சிந்தனை செய்து ஆராய்தலினாலேயே கிடைப்பது. ஆதலால் ஆகமப் பிரமாணத்தால் நமக்குக் கிடைக்கும் அறிவு வேறு பிரமாணத்தாலும் வலியுறுத்தப்படல்வேண்டும். கடவுளைப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் அறிய முடியாதென்றோம். எனவே, ஆகமப் பிரமாணத்தால் நமக்குக் கிடைக்கும் அறிவை வலியுறுத்துவது அனுமானப் பிரமாணம் ஒன்றே. இவ்வனுமானப் பிரமாணத்தாலேயே கடவுளைப்பற்றிய அனுபவ அறிவு மாத்திரமன்றி, அக்கடவுளை யுணருமுகத்தால் உயிர் முதலிய வேறு பொருள்களைப்பற்றிய அனுபவ அறிவும் நமக்கு உண்டாகவேண்டுவது. இவ்வனுபவ அறிவைத்தர எழுந்ததே இச்சிவஞான போத நூல்.

இப்போதநூல் கடவுள் உண்டென்று இன்னசுருதி கூறுமென்றுவது, கடவுளின் தன்மையின்னதென்று இன்ன சுருதி கூறுமென்றுவது நமக்கு உணர்த்தாது. உலகிற் காணப்படும் இன்ன ஏதுக்களால் கடவுள் உண்டென்று உணரலாமென்றும், இன்ன ஏதுக்களால் கடவுளின் தன்மை இன்னதென்று உணரலாமென்றும் நமக்குக் குறிப்பாயும் வெளிப்படையாயும் உணர்த்தி, அக்கடவுளைப்பற்றிச் சுருதிகள் கூறும் கருத்துக்களைத் தெளிவுறுத்தும். சனகாதி நால்வர் இத்தகைய தெளிவு பிறவாது மயங்கியதினாலேயே நம் கடவுள் தக்ஷிணாமூர்த்தியா யெழுந்தருளியிருந்து இந்நூலின் கருத்துக்களை யுள்ளடக்கிய சின்முத்திரையால் உண்மை யுணர்த்தியருளினாரென்றும் இச்சின்முத்திரையே சிவஞான போத முத்திரை யெனப்படுமென்றும் உண்மைப் புராணங்கள் கூறும். இதுவுமன்றி, இந்நூலொன்றே எல்லாச் சுருதிப் பொருள்களையும்

எவ்வகை மயக்கமும் அற இனிது விளக்குவதால், இது நந்தி யெம்பெருமான் வழித்தாய் சனற்குமாராதி சைவாசாரிய பரம்பரையில் பண்டும் இன்றும் என்றும் உபதேசிக்கப்பட்டு வரும். இந்நூல் இவ்வாறு சுருதிப் பொருள்களை அளவை நூலின்படி தெளிவுறுத்துவதை உணர்த்தவே, இதன் முதற் சூத்திரம் 'என்மனார் புலவர்' என்று முடிவுகூறும். ஈண்டுப் 'புலவர்' என்றது அளவை நூல் உணர்ந்தாரையே. இம்முதற் சூத்திரமன்றி ஏனை ஒவ்வொரு சூத்திரமும் இப்படிச் சுருதிப் பொருள்களை உணர்த்துவதால் இவ்வாக்கியம் ஒவ்வொரு சூத்திரத்திறுதியிலும் இருப்பதாகக் கொள்ளல்வேண்டும். இக் கருத்தையே இந்நூல் ஆறுஞ் சூத்திரத்திறுதியிலுள்ள 'இசைக்குமன்னுலகே' என்பதும் உணர்த்தும். ஆண்டுள்ள 'உலகு' என்னும் சொல்லும் அளவை நூலுணர்ந்து மெய்யறிவில் நிலைபெற்ற பெரியாரையே உணர்த்தும். இந்நூல் ஆறுஞ் சூத்திரமுதல் சிறப்பியல்பு கூறுகின்றதாகலின் இக்கருத்து மற்றோர் முறையும் கூறப்பட்டது. இவ்வாறு பொதுவியல்பு சிறப்பியல்புகளாகிய இருவகை இயல்புகளையும் உணாதற்கு அளவை நூலுணர்ச்சி வேண்டப்படும் என்பதை யுணர்த்தவே இந்நூலின் வழிநூலாகிய சிவஞான சித்தியிலும் அளவையியல் முதற்கண் வைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை யுணர்த்தும் வாக்கியம் வடமொழி முதற் சூத்திரத்து இல்லையென்றாலும், அதன் இறுதிச் சூத்திரம் இந்நூற்குச் சிவஞான போதமென்னும் பெயரைத் தந்து, அது சைவார்த்த நிர்ணயம் செய்வதாய்க் கூறிற்றாகலின் அதன் கருத்தும் இதுவே. 'சிவஞான போதம்' என்னும் நூற்பெயரின் கருத்தும் இதுவே. 'சிவம்' எனப்படும் கடவுட்கு உண்டெனச் சுருதிகள் கூறும் இயல்புகளைத் தேர்ந்து தெளிதல்; அதாவது அவ்வியல்புகளை அளவை

நூலின்படி நிச்சயித்தல் என்பது பொருள். ஆகவே இந்நூலின் ஒவ்வொரு சூத்திரமும் சுருதிப் பொருள்களை அளவை நூலின்படி வலியுறுத்தியுணர்த்த எழுந்ததென்பது பெறப்படும். அவற்றுள் இம்முதற் சூத்திரம் கடவுளுண்டென்றும் அக்கடவுள் அரனே என்றும் கூறும் சுருதிகளை ஏதுக்கள் கொண்டு வலியுறுத்தும். அவ்வேதுக்களை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து மேற்செல்வாம்.

---

## இரண்டாம் பாடம்

### இவ்வுலகம் பலவாய்ச் சடமாயுள்ளது.

கடவுள் உண்டென்று அனுமானப் பிரமாணத்தால் நிர்ணயிக்கலாமென்றோம்†. அதனால் நிர்ணயித்தலாவது கடவுள் உண்டென்பதையுணர்த்தும் ஏதுக்களை நமக்குப் பிரத்தியக்ஷமாகும் வேறு பொருள்களிற் காணுதலென்றும் சொன்னோம்†. கடவுளையன்றி வேறு பொருள்கள் உலகப் பொருள்களே. உலகப் பொருள்களும் இருதிறத்தனவாயுள்ளன. அறிவுடைப் பொருள்களும் உள: அறிவில் பொருள்களும் உள. இவற்றுள் அறிவுடைப் பொருள் தனித்துக் காணப்படுவதில்லை: அறிவில் பொருளோடேயே சேர்ந்து காணப்படும். என்றாலும் இவ்விரண்டும் வெவ்வேறு பொருள்களே. இவை முறையே சித்து, ஜடம் எனப்படும்: சேதனம், அசேதனம் என்றும் சொல்லப்படும். இவற்றுள் சித்துப் பொருள்களின் தொகுதியைச் சித்துலகமென்றும், ஜடப் பொருள்களின் தொகுதியைச் சடவுலகமென்றும் சொல்லலாம். இவ்விரு வுலகங்களுள் சித்துலகம் நமக்குப் பிரத்தியக்ஷமாவதின்று. அதில் கடவுள் உண்டென்பதை யுணர்த்தும் ஏதுக்

† சூ. I பா. 1.

களை நாம் காணமுடியாது. அவ்வேதுக்களை நாம் காணு நற்குரிய உலகம் இச்சடவுலகமே.

இவ்வுலகின் இச்சடத்தன்மை யொன்றே கடவுள் உண்டென்பதை உணர்த்துமா? உணர்த்தாது. ஜடப்பொருள் கட்கெல்லாம் கருத்தா வேண்டப்படும் என்பதின்று. அவற்றின்கண் யாதானும் ஒரு தொழில் நிகழ்வதானால்மட்டும் அத்தொழிலினை இயற்றக் கருத்தாவேண்டுமென்று துணியலாம். யாதானும் ஓர் பொருள் ஜடமாயிருப்பினும் தனித்த ஒன்று யிருக்குமேல் அது என்றும் ஒரே நிலையில் நிற்கும். அதற்கு விளங்குதல் மறைதல் இல்லை: அதாவது தோற்ற ஒடுக்கங்கள் இல்லை: அதன்கண் யாதோர் தொழிலும் நிகழாது. ஆனால் அச்சடப்பொருள் பல பொருள்கள் சேர்ந்த ஒன்று யிருப்பின் அதற்குச் சேர்தல் பிரிதல் உளவாம்: அதாவது தோற்ற ஒடுக்கங்கள் உளவாம். இத்தோற்ற ஒடுக்கங்களாகிய தொழில்களை இயற்றுதற்குக் கர்த்தாவாகிய கடவுள் வேண்டுமென்றும் துணியலாம். என்றால் இச்சடவுலகம் தனித்த ஒரு பொருளா? அல்லது பல பொருள்கள் சேர்ந்த ஒன்றா? இவ்வுலகம் தனித்த ஒரு பொருளன்று. இது மண் முதலிய ஐந்து பூதங்களின் தொகுதி என்பதை யாரும் ஒப்புவர். இதுவேயன்றி ஒவ்வொரு பூதமும் அததன் காரியங்களும் மேற்கூறிய பல பொருள்களின் தொகுதியேயாமென்பதும் சற்று ஆராய்தலினால் தெரிந்துகொள்ளப்படும். எனவே இவ்வுலகம் பலவாய்ச் சடமாயுள்ளதென்பதில் யாதோர் சந்தேகமுமில்லை. இக்கருத்தினை யுணர்த்தவே இச்சூத்திரம் உலகினை 'அவை' என்னும் அஃறிணைப்பன்மைச் சொல்லால் ஓதியது.

---

## மூன்றும் பாடம்

### இவ்வுலகம் அவயவபபகுப்புடையது.

இவ்வுலகம் பலவாய் ஜடமாயுள்ளதென்றோம்†. அவ்வாறிருந்தால்மாத்திரம் அதற்குத் தோற்றக் கேடுகளும் அவையுளவாதல்பற்றிக் கருத்தாவும் உண்டென்றோம்†. ஆனால் அவ்வேது ஒன்றே போதுமா? போதாது. ஒரு பொருளிற் பல பகுதிகள் காணப்படலாம்; என்றாலும், அப்பகுதிகள் பிரிக்கப்படுந் தன்மையனவாயிருந்தாலன்றி, அவைகள் ஒருகாலத்துக் கூடின ஒருகாலத்துப் பிரிவன என்பன பெறப்படா. அக்கூடுதல் பிரிதல்களாகிய தொழில்களைச் செய்தற்குரிய கர்த்தா வேண்டுமென்பதும் பெறப்படாது. ஆடையானது பல நூல்களாகப் பிரிக்கப்படுந் தன்மைத்தாயிருத்தலினாலேயே அந்நூலகளை ஆடையாகத் தோற்றுவித்தான் ஒருவன் உண்டென்றும் இனி அதை நூல்களாக ஒடுக்குபவனும் வேண்டுமென்றும் துணிவோம். அதுபோல இச்சடவுலகமும் பிரிக்கப்படுந் தன்மைத்தாயிருப்பின் மாத்திரம் இதற்கும ஓர் கர்த்தா வேண்டுமென்று துணிய இடமுண்டு. ஆராய்ந்து பார்க்கில் இச்சடவுலகம் பிரிக்கப்படுந் தன்மையதே. இவ்வுலகிலுள்ள மண் முதலிய பூதங்கள் ரசாயன சாத்திர‡ விதிப்படி அவற்றின் சூக்குமகாரண பூதங்களாகப் பிரிக்கப்படுதலை நாம் அனுபவசித்தமாக அறிவோம். இப்பிரிக்கப்படுந் தன்மையே அவயவப்பகுப்பு எனப்படும்§. இத்தன்மையுள்ள பொருள்களால் ஆக்கப்பட்ட இவ்வுலகமும் அவயவப்பகுப்புடையது என்பது பெறப்படும். இக்கருத்

† சூ. I பா. 2   ‡ Chemistry.   §. சுவாமிகள் கூறிய இலம் மலை கடல் திருஷ்டாந்தம் பௌதிகநூல் ஆராய்ச்சியில்லாதாரும எளிதில் உணர்ந்து கொள்ளுதற் பொருட்டாம்.

தையுணர்த்தவே இச்சூத்திரம் உலகினை 'அவை' என்னும் ஒரு சொல்லால் ஓதி நிறுத்தாது உலகப் பொருள்களை மூன்று பிரிவுபடுத்தி 'அவன் அவள் அது எனும் அவை' எனப் பிரித்தும் தொகுத்தும் ஓதியது.

---

## நான்காம் பாடம்

### இவ்வுலகம் சுட்டியறியப்படுவது

இவ்வுலகம் பலவாய்ச் சடமாயுள்ளதென்றும் அவயவப் பகுப்புடையதென்றுஞ் சொன்னோம்*. இக்காரணங்களால் மாத்திரம் இவ்வுலகிற்குத் தோற்ற ஒடுக்கங்கள் உள என்பது பெறப்படாது. இவ்வுலகப் பொருள்களில் யாதானும் ஒன்று வியாபகமாயிருக்குமேல் அதன் இடத்திற்கு எல்லை யின்பதின்றும். எல்லையுள்ள பொருளே பிரத்தியக்ஷமாகற்பாலது. அதுவே தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் உரிய பொருள். அதுவன்றி யாதோர் எல்லையுமில்லாத வியாபகப் பொருள் எவ்வாற்றானும் பிரத்தியக்ஷமாதல் இல்லை. அது ஒருகாலத்துத் தோன்றிற்று என்று சொல்லவுமுடியாது. அதற்குக் கர்த்தா வேண்டும் என்பதும் பெறப்படாது. அது பல பகுதிகளையுடையதாயிருந்தாலும் பிரிவுபடக்கூடுவதாயிருந்தாலும் வியாபகமாயிருத்தலால் ஒரு கருத்தாவைவேண்டாது. வியாபகமல்லாத பொருட்கே கர்த்தா வேண்டப்படும். அதற்கு இடவரம்பு உண்டு. இவ்வரம்பு பெரிதாயுமிருக்கலாம்; சிறிதாயுமிருக்கலாம். என்றாலும் அது வரம்பினையுடையதே. உலகில் நாம் காணும் பொருள்கள் யாவும் இவ்வரம்பினையுடையனவே. அவையாவும் சுட்டியறியப்படுவனவே. அவற்றின் தொகுதியாகிய இவ்வுலகமும் சுட்டியறியப்படுவதே.

* சூ. I பா. 1, 2.

இக்கருத்தினை யுணர்த்தவே இச்சூத்திரம் உலகைப் பகுத்துக் கூறுதற்கு வேறுவகைச் சொற்களால் ஓதாது, 'அவன் அவள் அது' என்னும் சுட்டுச் சொற்களால் ஓதியது.

---

## ஐந்தாம் பாடம்

### இவ்வுலகம் ஒருசேர முத்தொழிற்படும்.

இவ்வுலகப் பொருள்கள் பல என்றும் அவை யாவும் அவயவப் பகுப்புடையன என்றும் சுட்டியறியப்படுவன என்றும் அதுபற்றி இவ்வுலகத் தொகுதியும் பலவாய்ச் சடமாய் அவயவப் பகுப்புடையதாய்ச் சுட்டியறியப்படுவதாயுள்ள பொருள் என்றுஞ் சொன்னோம்*. இவ்வேதுக்களால் இவ்வுலகிற்கு ஒரு கர்த்தா வேண்டுமென்பது பெறப்படுமா? யாதானும் ஓர் பொருளில் மேற்கூறிய மூன்று ஏதுக்களுமிருப்பினும் அதுபற்றி அப்பொருள் தோற்ற ஒடுக்கங்களாகிய தொழில்களைப் பொருந்தினும் அத்தொழில்களைச் செய்யக் கர்த்தாவேண்டும் என்பது அவசியமின்று. ஒரு பொருள் ஒடுங்க மற்றொரு பொருள் உண்டாவதைப் பார்க்கிறோம். விறகு ஒடுங்கச் சாம்பல் உண்டாவதைப் பார்த்துளோம். விறகில் நிகழ்ந்த ஒடுக்கத் தொழிலே சாம்பலைத் தோன்றச் செய்தது. அப்படியே இவ்விரு தொழில்களில் ஒன்று மற்றொன்றைச் செய்யலாம். அதாவது இவ்விரு தொழில்களில் யாதானுமொன்று இவ்வுலகப் பொருள்களிற் சிலவற்றில் மாத்திரம் நிகழுமாயின், அத்தொழில் மற்றொரு தொழிலைச் செய்தல் ஒருவாறு கூடும். இதுவன்றி எக்காலத்தேனும் இவ்வுலகப் பொருள்கள் யாவற்றினும் இவ்விரு தொழில்களில் ஒரு தொழில் ஒருசேர நிகழுமாயின், அக்காலத்தில் அத்தொழில்

* சூ I, பா. 2 4.

மற்றொரு தொழிலைச் செய்தல் சிறிதும் கூடுவதின்றாம். ஆதலால் அக்காலத்தில் அத்தொழிற்குக் கர்த்தா வேறுவேண்டும் என்றே பெறப்படும். இவ்வுலகப் பொருள்கள் யாவும் அதாவது இவ்வுலகத் தொகுதி முற்றும் எக்காலத்தேனும் ஒருசேரத் தொழிற்படுதல் கூடுமா என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது. அதனை ஆராய்வாம்.

இவ்வுலகில் ஒருஜாதிப் பொருள்களான நெல், ஈசல் முதலியன கால விசேஷத்தால் ஒருங்கே தோன்றி நின்றழிவதை யறிவோம். ஈண்டுப் பொருள்கள் ஒருங்கே தோன்றற்கும், நிற்றற்கும், அழிதற்கும் காரணங்கள் அவற்றின் ஜாதிப் பொதுத் தன்மையும் காலவிசேஷமுமே. இவ்வுலகப் பொருள்கள் யாவும் பலவாய்ச் சடமாய் அவயவப் பகுப்புடையனவாய் சுட்டியறியப்படுவனவாயிருத்தலால் ஒருஜாதிப் பொருள்கள்என்பதில் தடையில்லை. இவைகட்கு ஜாதிப் பொதுத் தன்மையுள்ளது. கால விசேஷமும் வரும்போது இவைகள் ஒருங்கே யழியவும் மீளவும் ஒருங்கே தோன்றவும் கூடும். எனவே இவ்வுலகம் ஒருசேரத் தோற்ற ஒடுக்கங்களாகிய தொழில்களைப் பொருந்துமென முடியும். இத்தோற்ற ஒடுக்கங்கள் உள எனவே இடைநிலையாகிய திதி அல்லது நிலைத்தொழிலும் உண்டென்பதாகி இவ்வுலகம் ஒருசேர முத்தொழிற்படுமென முடியும். இக்கருத்தினை யுணர்த்தவே 'அவன், அவள், அது' என்றபோதே பலவாய்ச் சடமாதலும் அவயவப் பகுப்புடைமையும் சுட்டியறியப்படுந் தன்மையும் பெறப்படுமாயினும் இச்சூத்திரம் உலகினை அச்சொற்களால் மாத்திரம் விளக்கி நிறுத்தாது, உலகப் பொருள்களுக்குள்ள ஜாதிப்பொதுத் தன்மையுமுணர்த்த ஒரே சொல்லாகிய

அவை என்னும் சொல்லையும் சேர்த்து 'அவன், அவள், அது எனும் அவை மூவினைமையின்' என்றோதியது.

---

## ஆறும் பாடம்

### இவ்வுலகம் உள்ள பொருள்.

இவ்வுலகமும் அதன் பூல பகுதிகளும் தோற்றம் நிலை ஒடுக்கமாகிய மூன்று தொழில்களையும் பொருந்தி நிற்கு மென்று கூறினோம்*. என்றாலும் இவ்வுலகிற்குக் கர்த்தா வேண்டுமென்பது பெறப்படுமோ? அன்று. இவ்வுலகம் இல் பொருளாகில் இல்பொருளுக்குக் கர்த்தா வேண்டுவதின்றாத லால் இவ்வுலகிற்கும் கர்த்தா வேண்டுவதின்றாய் முடியும். ஆனால் மேற்கூறிய முத்தொழில்களையுடைய உலகம் இல் பொருளாயிருக்க முடியாது. இல்பொருளாகிய முயற்கோட் டிற்கு முக்காலத்தும் தோற்றமுதலிய கிடையா. அது கேவ லம் வசனமாத்திரமே. நாம் ஆராய்ச்சிசெய்யும் இவ்வுல கிற்கோ தோற்றமுதலியன உள என்று முற்பாடத்தில் விளக் கியுள்ளேம். ஆதலால் அது இல்பொருளாகமாட்டாது: உள் பொருளே யாதல்வேண்டும். எக்காலத்தும் உள்பொருளாத லும் வேண்டும். ஒரு காலத்து உள்ள பொருள் மற்றொரு காலத்து இல்பொருளாவதில்லை. இல்பொருள் உள்பொரு ளாவதுமில்லை; உள்பொருள் இல்பொருளாவதுமில்லை. இதுவே சத்காரிய உண்மை. இவ்வுண்மையை உணர்த்தி வலி யுறுத்தவே இச்சூத்திரம் 'அவை—திதியே' என்று இயைபுற ஓதியது. (திதி=உள்பொருள்).

* சூ. I பா. 5.

## ஏழாம் பாடம்

### இவ்வுலகம் கர்த்தாவையுடையது.

இவ்வுலகம் உள்பொருளென்றோம்*. அது தோற்றம் நிலை இறுதியாகிய மூன்று தொழில்களையுமுடையதென்றும் கூறினோம்†. என்றாலும் தானே தோன்றி தானே நின்று ஒடுங்காதா? அதன் தோற்றம் நிலை ஒடுக்கங்களுக்கு ஒரு கர்த்தா ஏன் வேண்டும்? என்பதை ஆராய்வாம். உலகம் உள்ள பொருள்: ஒடுங்கியபோதும் உள்ள பொருள்; தோன்றியபோதும் உள்ள பொருள்; நிற்கும்போதும் உள்ள பொருள். அதாவது ஒரே உலகம் மூவேறு விதங்களாய் வடிவம் மாறும். ஒடுங்கியபோது காரண வடிவமாயிருக்கும்; தோன்றியபோது காரிய வடிவமாய் வரும்; நிற்கும்போது அக்காரிய வடிவில் வளரும். இவ்வாறு வடிவம் மாறும் உலகம் சித்தன்று: ஜடம். ஆதலால் இதுதானே தன் வடிவத்தை மாற்றிக்கொள்ளமாட்டாது. மண் தானே தன் வடிவத்தைக் குடமாக மாற்றிக்கொள்ளமாட்டாது. அதனை அவ்வாறு மாற்றக் குயவன் ஒருவன் வேண்டும். அவ்வாறே உலகின் காரண வடிவத்தைக் காரிய வடிவமாக மாற்றுதற்கும், அவ் வடிவில் அதனை வளர்ப்பதற்கும், மீள அதனைக் காரண வடிவமாக ஒடுக்குதற்கும், சேதனனாகிய கர்த்தா ஒருவன் வேண்டும். இக்கருத்தினை யுணர்த்தவே இச்சூத்திரம் 'அவை . . . தோன்றிய' என்னாது 'அவை . . . . தோற்றிய' எனப் பிற வினையில்ஓதியது.

* சூ. I பா. 6. † சூ. I பா. 5.

## எட்டாம் பாடம்

இவ்வுலகம் மாறி மாறி முத்தொழிற்படும்.

இவ்வுலகம் தோற்றம் நிலை ஒடுக்கமாகிய மூன்றுதொழில்களைப் பொருந்திநிற்குமென்றோம்*. இம்மூன்று தொழில்களையும் ஒரேமுறைதான் பொருந்திநிற்குமா? அன்றி மாறி மாறிப் பொருந்திநிற்குமா? என்பதை ஆராய்வாம். இவ்வுலகம் என்றும் உள்ள பொருள் என்றோம்†. இதன் தோற்ற நிலை யொடுக்கங்கள் வடிவமாறுதலே என்றோம்‡. இவ்வடிவ மாறுதல் கர்த்தாவாலன்றித் தானே நடைபெறுமேல் அதற்கு யாதும் பயன் வேண்டப்படுவதில்லை. இவ்வடிவமாறுதல் சேதனனாகிய கர்த்தாவாலேயே யுளதாக, அது யாதானும் பயன் கருதியே அக்கர்த்தாவால் செய்யப்படல் வேண்டும். இவ்வுலகினைத் தோற்றுமுன்னர் அது ஒடுங்கியன்றோ கிடந்தது. ஓர் பயன் கருதியன்றோ, அவ்வாறு ஒடுங்கிக்கிடந்த உலகம் தோற்றப்படுவதாயிற்று. அதுபோல் இனி ஒடுக்கப்படும் இவ்வுலகமும் மீளவும் அப்பயன் வேண்டப்படும்வரை தோற்றப்படவேண்டுமன்றோ. எனவே இம்முத்தொழிலாற் கருதப்படும் பயன் வேண்டப்படும்வரை ஒடுங்கின உலகம் ஒடுங்கியவாறே நில்லாது மீளவும் மாறிமாறித் தோன்றி நின்றொடுங்கிக்கொண்டு நிற்குமென முடியும். இக்கருத்தினை உணர்த்தவே இச்சூத்திரம் உலகினை உளதாய் ஒடுங்கும் என்றோதாது, ஒடுக்கத்தின் பின்னரும் உளதாம். என்னும் பொருளையும் அடக்கி 'ஒடுங்கி . . . . உளதாம்' என்றோதியது§.

---

* சூ. I பா. 5. †, ‡ சூ. I பா. 6. § சிவஞான போதம் II சூத்திரத்துப் 'போக்கு வரவு' என்னும் வாக்கியத்திற்குச் சுவாமிகள் எழுதிய விசேடவுரையைப்பார்க்க.

## ஒன்பதாம் பாடம்

இவ்வுலகிற்குக் கர்த்தா அதன் சங்கார காரணனே.

இவ்வுலகம் மாறி மாறி முத்தொழிற்படுமென்றோம்* அவ்வாறு தொழிற்படுத்துவது ஒரு சேதன கர்த்தா என்றும் சொன்னோம்†. இவ்வுலகில் சேதனப்பொருள்களும் அசேதனப்பொருள்களும் உளவென்றுஞ் சொன்னோம்‡. என்றால் இச்சேதனப்பொருள்களில் யாதானும் ஒன்றே உலகின் கர்த்தாவாதல் கூடுமா? என்பதை ஆராய்வாம். இவ்வுலகம் ஒருகாலத்து ஒருசேர ஒடுங்குமென்றோம்§. இவ்வொடுக்கமே சர்வசங்காரம் எனப்படும். இச்சர்வ சங்கார காலத்தில் இச்சடவுலகப்பொருள்கள் யாவும் ஒடுங்குமென்பது முன்னரே விளக்கப்பட்டது¶. இக்காலத்துச் சித்துலகப்பொருள்களாகிய சேதனர்கள் எவ்வாறுவர் என்பதை முதற்கண் ஆராய்வாம். இவ்வுலகிற் காணப்படும் சேதனப்பொருள்கள் யாவும் அசேதனப்பொருள்களோடு சேர்ந்தே காணப்படுமென்றோம்‖. என்றால் இவ்வுலகிலுள்ள அசேதனப் பொருள்கள் யாவும் ஒடுங்கிய காலத்து அவற்றோடு கூடிநின்ற சேதனப்பொருள்கள் யாவுமே காணப்படாது மறையுமென்பதாய் முடியும். அதாவது இச்சேதனப்பொருள்களும் ஒடுங்குமென்பதாய் முடியும். இவற்றின் ஒடுக்கமாவது என்பது பின்னர் விளக்கப்படும்††. இவ்வொடுக்கம் எவ்வாறாயினும் சர்வசங்கார காலத்தில் சேதனப்பொருள்களும் விளக்கமின்றி மறைவதால் ஒடுங்கிய இச்சடவுலகம் அவைகளால் தொழிற்படுமாறில்லை. இச்சர்வசங்கார காலத்தும் தான் ஒடுங்காது இச்சடவுலகத்தை ஒடுக்கியவனே மீள அதனைத் தோற்றுவித்தற்குரியன். இவனே சங்கார கார

* சூ. I பா. 8. † சூ. I பா. 7. ‡ சூ. I பா. 2. §, ¶ சூ. பா. 5.
‖ சூ. I பா. 2. †† சூ. I பா. 12.

ணான் எனப்படுவன். இவனே தனுகரண புவனபோகங்களாகிய எல்லா அசேதனப் பொருள்களையும் தோற்றுவித்துச் சேதனப் பொருள்களோடு கூட்டுவித்து, அச்சேதனப் பொருள்களை விளக்கமுறும்படி செய்பவன். தோற்றுதற் கருத்தாவையும் ஒடுக்கத்தினின்று மாற்றித் தோற்றத் தொழிலில் நிறுத்துபவன் இவனே. திதி கர்த்தாவையும் ஒடுக்கத்தினின்று மாற்றித் திதித் தொழிலில் நிறுத்துபவனும் இவனே. எனவே உலகின் தோற்றம் நிலை ஒடுக்கங்களாகிய மூன்று தொழில்களையும் செய்யும் கர்த்தா இவனே என முடியும். இதுவன்றி இவனுக்குத் தோற்றக் கேடுகளில்லை யென்பதும் இவன் அனாதிப் பொருளென்பதும் பெறப்படும். இக்கருத்தினையே இச்சூத்திரம் 'ஒடுங்கி . . . . . . . உளதாம்' என உணர்த்தும். இவ்வாக்கியத்தின் பொருள் ஒடுங்கியாகிய சங்கார காரணனினின்றும் உளதாம் என்பது.

சேற்றினின்றுண்டாகாது அதனை ஆதாரமாகக் கொண்ட கிழங்கினின்றுண்டாகிய தாமரை 'பங்கஜம்' எனப்படுவது போலச் சங்கார காரணனினின்று உண்டாகாது அவனை ஆதாரமாகக் கொண்ட மற்றொன்றினின்று உண்டாகிய உலகமும் சங்கார காரணனினின்று உண்டாவதாய்ச் சுருதிகள் கூறும். என்றால் சங்கார காரணன் இவ்வுலகின் காரணன் அல்லனோவெனின், கூறுதும். காரணம் மூன்று வகைப்படும். அவை முதல், துணை, நிமித்தமென்பன. குடத்திற்கு மண் முதற்காரணம்; தண்டசக்கரங்கள் துணைக்காரணம்; குயவன் நிமித்த காரணம். இவ்வுலகிற்கும் இவ்வாறே முதல், துணை, நிமித்த காரணங்கள் உள. அவற்றுள் சங்கார காரணன் இவ்வுலகின் நிமித்த காரணனாவன். இதன் முதற் காரணம் வரும்பாடத்திலும் துணைக்காரணங்கள் வருஞ்சூத்திரத்திலும் விளக்கப்படும்.

## பத்தாம் பாடம்

### இவ்வுலகின் முதற்காரணம் மாயை.

சங்கார காரணன் இவ்வுலகின் நிமித்த காரணனென்றும் அதன் முதற்காரணம் வேறொன்று என்றுஞ்சொன்னோம்*. அம்முதற் காரணந்தான் யாது என்பதை ஆராய்வாம். உலகம் எக்காலத்தும் உள்ளபொருள் என்றோம்†. தோன்றிய காலத்தும் ஒடுங்கிய காலத்தும் உள்ள பொருளென்றோம். தோன்றிய காலத்து நம்மாற் காணப்படும் இவ்வுலகமாய் விரிந்துள்ளதை அறிவோம். ஒடுங்கிய காலத்து எவ்வாறுள்ளது என்பதே நாம் ஆராயவேண்டுவது. உலகம் ஒடுங்கியபோது அதன் காரணவடிவமாக மாறும் என்றோம்‡. இக்காரணப் பொருளே 'மாயை' எனப்படும். இச்சொல்லிலுள்ள 'மா' தோற்றத்தையும் 'யா' ஒடுக்கத்தையும் உணர்த்தும். அதாவது இச்சொல்லின் பொருள் ஒடுங்கித் தோன்றுதற்கு இடனாய் நிற்பது. இம்மாயை வியாபகமாயுள்ள ஒரு சூக்கும ஜடப்பொருள். இது வியாபகமாயிருத்தலினாலே இதற்குத் தோற்றக் கேடுகளில்லை. இது அநாதிப்பொருள்களில் ஒன்று. இதினின்றுண்டாகிய உலகமே தோற்றக் கேடுகளையுடையது. இது அத்தோற்றக் கேடுகட்கிடனாய் மாத்திரம் நிற்பது. உலகப் பொருள்கள் யாவும் ஒடுங்கும்போது இதனுள்ளேயே அவற்றின் சூக்கும ரூபமாய் மாறியொடுங்கும். மீளத் தோன்றும்போது இதனினின்றே மேற்கூறிய சூக்குமப் பொருள்கள் யாவும் தூலரூபமாய் வெளிவரும். யாது யாண்டு ஒடுங்கும், அது அதனினின்றே தோன்றும். இவ்வுண்மை ஒரு தூலப் பொருட்கும் அதன் சூக்கும காரணப்பொருட்குமேயன்றி ஒரு தூலப்

* சூ. I பா. 9. † சூ. I. பா. 6. ‡ சூ. I. பா. 7.

பொருட்கும் அதன் தூல காரணப்பொருட்குமன்று. வித்
தினின்றுண்டாகிய மரம் அவ்வித்தில் ஒடுங்குவதில்லை.
வித்து, மரம் இவ்விரண்டும் தூலமாதலால் இவ்வுண்மை
அவற்றிற்குப் பொருந்தாது. ஆனால் மரம் அதன் சூக்கும
காரணத்தில் ஒடுங்குவதில் தடையில்லை. அப்படியே இவ்
வுலகமும் அதன் சூக்கும காரணமாகிய மாயையில் ஒடுங்குவ
தில் தடையில்லை. ஆனால் சங்கார காரணனும் சூக்குமப்
பொருளாதலால் அவனுள்ளே உலகம் ஒடுங்காதோ எனின்,
ஒடுங்காது. இச்சங்கார காரணன் சித்துப் பொருள். உல
கப் பொருள்கள் யாவும் ஜடம். ஜடம் ஜடத்தில் ஒடுங்குமென்
பதும் மீள அச்சடத்தினின்று வருமென்பதுமே பொருத்தம்.
இதுவன்றி ஜடப்பொருள் சித்தினின்று வருதலும் அதனுள்
ஒடுங்குதலும் பொருத்தமன்று. இயற்கை§ விரோதம். ஆத
லாற் சங்கார காரணன் இவ்வுலகிற்கு முதற் காரணனுமா
றில்லை: நிமித்த காரணன் மாத்திரமே. மாயையே இவ்வுல
கின் முதற் காரணம்.

ஆனால் கடவுள்பால் இவ்வுலகம் தோன்றியதாய்ச் சுருதி
கள் சொல்லுவது என்னை எனின் கூறுவோம். இவ்வுலகம்
சங்கார காரணனை ஆதாரமாகக் கொண்ட வேறு காரணத்தி
னின்று உண்டாகும் என்றோம்||. அவ்வேறு காரணமே
'மாயை' என்றுஞ் சொன்னோம். எனின், மாயை சங்கார
காரணனாகிய கடவுளை ஆதாரமாகவுடையது என்பது பெறப்
படும். வித்தினின்று தோன்றிய முளையை அவ்வித்துக்கு
ஆதாரமாகவுள்ள மண்ணினின்றுந் தோன்றியதாய்ச் சொல்
வதுபோல, மாயையினின்று தோன்றிய உலகத்தை அதற்கு

§ சற்காரிய வாதம், the law of nature. || சூ. I. பா. 9.

ஆதாரமாகிய கடவுள்பால் தோன்றியதாய்ச் சுருதிகள் கூறும். எனின், கடவுளின் ஆதாரவின்றி உலகம் தோன்றாதோ எனின், தோன்றாது. மண்ணின் ஆதாரவில்லாத வழி வித்தினின்று முளை தோன்றாதது போலக், கடவுளின் ஆதாரவில்லாத வழி மாயையினின்று உலகம் தோன்றுவதுமில்லை. இவ்வுண்மைகள் யாவும் உணர்த்தவே இச்சூத்திரம் 'மலத்து ஒடுங்கி உளதாம்' என இயைபுற ஓதும். மலம் என்னும் இச்சொல் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவகை மலங்களையும் உணர்த்தும் பொதுச்சொல். கன்மமலம் வருஞ் சூத்திரத்தில் விளக்கப்படுவதால், இச்சூத்திரத்திலுள்ள இச்சொல் ஏனையிரண்டு மலங்களையும் உணர்த்தும். அவற்றுள் இப்பாடத் துணர்த்தப்பட்டது மாயாமலம்*

---

## பதினோராம் பாடம்

இவ்வுலகம் ஆணவமல நிவிர்த்தியின் பொருட்டு முத்தொழிற்படும்.

உலகினைக் கர்த்தா தொழிற்படுத்துவரென்றோம்†. அதுவும் ஓர் பயன் கருதியே என்றோம்‡. இப்பயன் அக்கர்த்தாவால் யார் பொருட்டுக் கருதப்படுவது? தன் பொருட்டா? பிறர்பொருட்டா? தன் பொருட்டேல், அக்கர்த்தா தனக்கென்றோர் குறையுடையராய் முடிவர். ஆதலால் இப்பயன் அக்கருத்தாவின் பொருட்டன்று. என்றால் அக்கருத்தாவையன்றிப் பயனைவேண்டி நிற்கும் பொருள்களுமிருத்தல்வேண்டும். அவைகள் அறிவுடையனவாயுமிருத்தல்வேண்டும். அறிவுடைப்பொருள்களே பயன்கொள்ளுதற்குரியன. அவையே உயிர்கள் எனப்படும். இவ்வுயிர்கள் உள என்பதும் இவற்

* 1-ம் சூத்திரத்து 'இலயித்த' என்று துவக்கிய வெண்பாவினையும், அதற்குச் சிவஞானசுவாமிகளியற்றிய உரையையும் பார்க்க.

† 1சூ. I பா. 7. ‡ சூ. I பா. 8.

றின் தன்மை இன்னதென்பதும் வருஞ்சூத்திரங்களில் விளக்கப்படும். இவ்வுயிர்கள் பயனடைதற் பொருட்டே உலகம் தொழிற்படுத்தப்பட்டுவரும். இப்பயன் நூதனமாய்த் தோன்றுவதன்று. முன்னில்லாதது என்றுந்தோன்றாது. இப்பயன் என்றும் இருந்தாலும் அதனை உயிர்கள் துய்க்காதபடி அவ்வுயிர்களின்பால் ஓர் தடையுள்ளது. இத்தடையே அறிவுப் பொருள்களாகிய உயிர்களை அறியவொட்டாதபடி தடுப்பது என்பது பின்னர் விளக்கப்படும். இத்தடை நீங்கினன்றி உயிர் எவ்வகைப்பொருளையும் அறியமுடியாது. எவ்வகைப் பயனையும் துய்க்கமுடியாது. இத்தடையே ஆணவம் என்று சொல்லப்படும். வியாபகமாயுள்ள உயிரை அணுத்தன்மையடையச்செய்வதால் ஆணவம் எனப்படும். என்றாலும் இது வியாபகமாயுள்ள ஓர் சூக்கும ஜடப்பொருள். இதற்குத் தோற்றக்கேடுகளில்லை. இது அநாதிப்பொருள்களில் ஒன்று. இது பொருளால் ஒன்றேயாயினும் அனேக ஆன்மாக்களறிவினையும் மறைப்பது. ஆன்மாக்களின் அறிவு பல வேறுவிதமாயுள்ளதாதலால் அதனை மறைக்கும் இவ்வாணவத்தின் சத்தியும் பல வேறுவிதமாயுள்ளது. இருள் பொருளால் ஒன்றேயாயினும் பலர் கண்களை மறைப்பதுபோல, இம்மலமும் பலர் அறிவினை மறைக்கும். இருள் கண்ணொளியைத் தடைசெய்து நிற்பதால் அதனை ஒளியின்மை என்னாது, பொருளே என்போம். அப்படியே இவ்வாணவமும் உயிரின் அறிவைத் தடைசெய்து நிற்பதால் பொருளேயாம். இத்தடையையுடைய உயிர்களே பெத்த உயிர்கள் எனப்படும். இப்பெத்த உயிர்கள் இத்தடையை எவ்வாறு கடப்பன என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது.

ஒரே இருள் பலர் கண்களை மறைத்தாலும் ஒவ்வொருவரும் தனித்தனி விளக்கொளியினுதவியால், அவ்விருளின் சக்தியை ஒரு சிறிது கடப்பதை அறிவோம். அப்படியே ஒரே ஆணவம் பலர் அறிவினை மறைத்தாலும் ஒவ்வொருவரும் கடவுளால் தத்தமக்குத் தோற்றுவிக்கப்பட்ட தனுகரணாதிகளால் அவ்வாணவத்தின் தடையையும் ஒரு சிறிது கடப்பர். இவ்வாறு கடத்தற்கென்றே உயிர்க்குத் தனுகரணாதிகள் தோற்றுவிக்கப்படுவன என்பது பெறப்படும். ஆனால் இத்தனுகரணாதிகளின் ஒடுக்கமும் இவ்வாணவ நிவிர்த்தியின் பொருட்டா? ஆம். வருத்தமான தொழிலைச் செய்யும் ஒருவன் அத்தொழிலை இடைவிடாது செய்யின் அதனைச் செய்துமுடிக்க ஏலாதுபோவதை யறிவோம். இவ்வாறன்றி இடையில் இளைப்பாறிச் செய்வனேல், ஒருகாலத்திற் செய்துமுடிப்பன் என்பதையும் அறிவோம். உயிர் தனுகரணாதிகளின் உதவியைக்கொண்டு ஆணவ நிவிர்த்திபெறுவதும் இவ்வாறே. இவ்வுயிர் தனுகரணாதிகளோடு இடைவிடாது தொழில் செய்யின் சலிப்பெய்தி ஆணவநிவிர்த்தி பெறாது நின்றுவிடும். இஃதன்றி இடையில் ஒடுங்கி இளைப்பாறுமேல், என்றேனும் ஆணவ நிவிர்த்தி பெறுவதிற் சந்தேகமில்லை. ஆதலால் இவ்வுலகின் ஒடுக்கமும் அதன் தோற்றம்போல ஆணவநிவிர்த்தியின்பொருட்டே யென்பது பெறப்படும். இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள நிலைத்தொழிலும் அதன் பொருட்டேயாம். ஆகவே உலகின் முத்தொழில்களும் உயிர்களின் ஆணவமல நிவிர்த்தியின் பொருட்டே என முடியும். இம்முடிபையே இச்சூத்திரம் 'ஒடுங்கி மலத்து உளதாம்' என்றுணர்த்துதும. மலத்து ஒடுங்கி மலத்து உளதாம் எனவிரிந்து உலகின் தோற்றநிலை ஒடுக்கங்களாகிய

மூன்று தொழில்களும் ஆணவமல நிவிர்த்தியின்பொருட்டே என்பதை யுணர்த்தும். இவ்வாக்கியத்திலுள்ள 'மலம்' ஈண்டு ஆணவமலத்தை யுணர்த்தியது.

---

## பன்னிரண்டாம் பாடம்

### இவ்வுலகின் முதற்கடவுள் அரனே.

இவ்வுலகின் கர்த்தா சங்காரகாரணனே என்றோம். இவனே இவ்வுலகினை ஒருசேர ஒடுக்குபவனென்றோம்.†. இவனால் இவ்வுலகம் ஒடுங்கும்போது, ஏனைச் சேதனர்களும் ஒடுங்குவரென்றும் கூறினோம்†. எனவே இவன் ஒருவனே சேதன அசேதன உலகங்கள் எல்லாவற்றையும் ஒடுக்குவன் என்பதாயிற்று. இதுபற்றியே இவன் 'அரன்' எனப்படுவன். அரனென்பதன் பொருள் சங்கரிப்பவன் என்பது. இவ்வரனே சர்வசங்கார காரணன். சங்காரத் தொழிலே யன்றி ஏனையிரண்டு தொழில்களைச் செய்பவனும் இவனே என்றோம்†. இம்மூன்று தொழில்கட்கும் வேறு கர்த்தாக்களிருப்பினும் அவர் யாவரும் இவனால் ஒடுக்கப்படுவரென்றும், மீள இவனாலேயே தத்தம் தொழிலில் நிறுத்தப்படுவரென்றுஞ்சொன்னோம்†. இக்கர்த்தர்கட்கன்றி மற்றை உயிர்கட்கும் இவ்வரனே மாயையினின்று தனுகரணாதிகளைத் தோற்றுவித்து, அவற்றை உயிர்களோடு கூட்டுவித்து, அவைகளைப் பந்தித்துள்ள மலத்தை நீக்குவனென்றுஞ் சொன்னோம்¶. இத்தனுகரணங்கள் உயிர்கட்குத் தோற்றுவிக்கப்படுங் காலத்து அவற்றின் அறிவு விளங்கியும், அவைகள் ஒடுக்கப்படுங்காலத்து அவற்றின் அறிவு மழுங்கியும் நிற்கும். உயிர்

† சூ. I பா. 9.　　¶. சூ. I பா. 11

களின் அறிவு விளங்கிநிற்றலே அவற்றின் தோற்றம் என்னலாம். அவைகளினறிவு மழுங்கிநிற்றலே அவற்றின் ஒடுக்கம் என்னலாம். இத்தோற்ற ஒடுக்கங்களன்றி உயிர்கட்குத் தோற்ற ஒடுக்கங்களில்லை. அவைகள் சித்து; ஜடப்பொருள்களே தோன்றி ஒடுங்குவன, என்றோம்*. எது எவ்வாறாயினும் உயிர்களின் அறிவு இவ்வாறால் விளங்கியும் மழுங்கியும் வருவதால் அவைகட்குச் சுதந்திரமென்பதின்றாம். சுதந்திரமுடையான் அரன் ஒருவனே. இவன் மாட்டு மற்றெல்லாப் பொருள்களும் பரதந்திரமாய் நிற்கும். ஜடவுலகமுற்றும் இவனாலேயே தொழிற்பட்டுப் பரதந்திரமாய் நிற்கும். சேதன உலகமும் அவ்வாறே.

இனி இவனும் முத்தொழிலியற்றுவதால் பரதந்திரனாகானோ எனின், ஆகான். இவன் நம்மனோர்போலக் கரணத்தாற்றொழில் செய்யான்: சங்கற்பமாத்திரையானே தொழில் செய்வான். அதாவது இவனது சந்நிதி மாத்திரையானே உலகம் தொழிற்படும். இத்தொழிற்பாட்டால் இவனுக்குப் பரதந்திரமெய்துதல் இல்லை. காலம் எல்லாத் தொழில்களையும் செய்தும் தான் விகாரமின்றி நிற்கும். அதுபோல இவ்வரனும் தான் இயற்றுந்தொழிலில் தொடக்குண்ணாது சுதந்திரனாயே நிற்பன். இவனது சுதந்திரத்திற்கு எவ்வாற்றானும் இழுக்கில்லை. இவன்பால் எல்லாச் சித்துப்பொருள்களும் ஜடப்பொருள்களும் பரதந்திரமே. இதுபற்றியே இவன் 'ஆதி' அல்லது முதல்வனெனப்படுவன். இக்கருத்தையே இச்சூத்திரம் 'அந்தம் ஆதி' என்றுணர்த்தும். ஈண்டு 'அந்த' மென்றது அந்தமாகிய ஒடுக்கத்தைச் செய்யும் அரனையும் 'ஆதி' யென்றது அவனே முதன்மையுடையான்

* சூ. I பா. 2

என்பதையும் உணர்த்தும். இனி, இந்நூலின் அடுத்த ஐந்து சூத்திரங்களிலும் கடவுள் 'முதல்வன்' என்னும் பெயரால் வழங்கப்படும்.

☞ குறிப்பு:— இச்சூத்திரத்து முதற் பாடத்திற் குறிக்கப்பட்ட சிறப்பியல்பு பொதுவியல்பு என்பன முடிவுரையில் விளக்கப்படும்.

முதற் சூத்திரம் முற்றிற்று

# இரண்டாஞ் சூத்திரம்

**அவையே தானேயாய், இருவினையிற்**
**போக்கு வரவு புரிய, ஆணையின்**
**நீக்க மின்றி நிற்கு மன்றே.**

---

## முதற்பாடம்

பெத்த உயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்.

---

முதல்வன் பெத்த உயிர்களின் பொருட்டு முத்தொழில் செய்வானென்றோம்*. முத்தொழில் என்பது முதற் காரணமாகிய மாயையினின்று உலகினைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குதலென்றும் சொன்னோம்†. உலகின் தொழிற்பாடாவது அதிலுள்ள சகல ஜடப் பொருள்களின் தொழிற்பாடாம். இச்சடப் பொருள்கள் யாவும் தனு கரண புவன போகமென்னும் நான்கு பிரிவில் அடங்கும். இவற்றுள் தனு என்பது ஓர் உயிரைப் பொருந்தியுள்ள எவ்விதத் தேகமுமாம். இத்தேகமும் என்றும் நிலைத்திருப்பதில்லை. ஏனை யொவ்வொரு பொருளும் ஒடுங்குவது போல இத்தேகமும் ஒடுங்கும். யாதானும் ஒரு பொருள் ஒடுங்கும்போது அது சூக்குமவடிவாய் மாறி அதற்குக் காரணமான சூக்குமப் பொருளிலேயே ஒடுங்குமென்றோம்‡. காரியப் பொருள் ஒடுங்கும் போதெல்லாம் அதன் காரணமான சூக்குமப் பொருளும் உடன் ஒடுங்

* சூ. I பா. 11 †, ‡ சூ. I பா. 10

குவதில்லை யென்றும் மீளவும் ஓர் காரியத்தைத் தோற்று விக்குமென்றும் சொன்னோம்*. அப்படியே இத்தூலதேகம் ஒடுங்கும்போது இதற்குக் காரணமான சூக்கும தேகமும் உடன் ஒடுங்குவதில்லை. இச்சூக்கும தேகத்தினுள்ளேயே அத்தூலதேகப் பொருள்கள் யாவும் சூக்குமமாய் மாறி யொடுங்கும். மீள இதனினின்றே வேறோர் தூலதேகம் உண்டாதற்கும் இடனாயும் நிற்கும். இதுவேயுமன்றி வேறுவித தேகங்களைத் தோற்றுவித்தற்கும் இடனாயும் நிற்கும். ஆகவே இத்தூல தேகத்தோடு கூடியிருந்த உயிர் அத்தூல தேகம் கெட்டொழிந்தபோது தனக்கு யாதொரு தேகமுமின்றி நிற்குமென்பதன்று. அத்தூலதேகம் கெட்டபோதும் கெடாதுநிற்கும் சூக்கும தேகத்தைப் பொருந்தி நிற்கும். மீள அச்சூக்கும தேகத்தினின்றும் வேறு தூலதேகம் உண்டாகும்போது அதனோடு கூடியும் வரும். எனவே உயிர் ஓர் தேகத்தை விட்டு மற்றோர் தேகத்தைப் பற்றுதலன்றி வேறில்லை. அது கூடியிருந்த தூலதேகம் ஒடுங்க உயிர் அதனைவிட்டு நீங்குதலே அதன் இறத்தல் எனப்படும். அவ்வாறு நீங்குதல் அத்தூல தேகப் பொருள்கள்யாவும் சூக்குமப் பொருள்களாய் மாறியபின் தான் என்பதன்று. அப்பொருள்கள் காலாந்தரத்தில் மாறுவன: சிறிது சிறிதாய் மாறுவன. அவைமாறி ஒடுங்கத் தொடங்கிய அக்கணமுதலே, அவற்றாலாகிய தூல உடம்பில் உயிர் தங்கி நிற்குமாறில்லை. தாமே மாறிக்கொண்டிருக்கும் பொருள்கள் உயிர் தங்குதற்கு இடனாய் அமைந்து நிற்பது எப்படி? அவ்வாறு அமைந்து நிற்கும் வன்மையை இழந்துவிடுமன்றோ? ஆதலால் உயிர் அத்தூல தேகத்தினின்றும் நீங்கி அதற்குக் காரணமான சூக்கும தேகத்தில் மாத்திரம் தங்குவதாகும். ஆனால்

* சூ. I பா. 10.

இச்சூக்கும தேகத்தினின்று வேறுமோர் தூலதேக முண்டாகலாமென்று மேலே சொன்னோம். இவ்வாறுண்டாகும் தூலதேகத்தில் உயிர் மீள வருதலே அதன் பிறத்தலெனப்படும். இவையன்றி உயிரே இறக்கும் பிறக்குமென்பதன்று. உயிர்கள் என்றுமுள்ளன. அவைகள் அறிவாகாரமாயுள்ளவைகள். அவைகள் சுட்டுப் பொருள்களல்ல. அவைகளுக்குத் தோற்றக் கேடுகள் கிடையா: பிறப்பு இறப்பு இல்லை. அவைகட்குள்ள இறப்பு பிறப்புக்கள் அவை தனித்தனி கூடியுள்ள தூலதேகம் ஒடுங்க அதனைவிட்டு நீங்குதலும், மீள வேறோர் தூலதேகமுண்டாக அதனோடு வருதலுமே. இவ்விறத்தல் பிறத்தல்களையே இச்சூத்திரம் 'போக்கு வரவு புரிய' என்றுணர்த்தியது. ஈண்டு உயிர்கள் தோன்றா எழுவாய்.

---

## இரண்டாம் பாடம்.

பெத்த உயிர்கள் மாறிமாறி இறத்தல் பிறத்தல் புரியும்.

---

உயிரோடு கூடியிருந்த தூலதேகம் மாறிபொடுங்க, உயிர் அதனைவிட்டு நீங்கலே அதன் இறத்தல் என்றோம்*. இவ்வாறு இறந்த உயிர் மீளவும் பிறக்குமா? அன்றி இறந்து ஒழிந்தே போகுமா? என்பதையும் ஆராயவேண்டும். ஒடுங்கிய ஒவ்வொரு பொருளும் ஒடுங்கியவாறே கிடவாது மீளவுந் தோன்றுமென்றோம்†. இவ்வுலகனைத்தும் ஒடுங்கிய பின்னரும் மீளத் தோன்றுமென்றோம்‡. இவ்விரு திறத் தோற்ற ஒடுக்கங்களின் பயன் ஆணவமல நீக்கமென்றும், சொன்னோம்§ அதாவது சகல உயிர்களும் ஆண

* சூ. II பா. 1. † ‡, சூ. I பா 8 § சூ I. பா. 11.

வத்தடையினின்றும் நீங்கும் வரை மேற்கூறிய இருதிறத்துத் தோற்ற ஒடுக்கங்களும் மாறிமாறி நிகழும். அதுபோல எந்த உயிரும் தன்னறிவைத் தடைசெய்துள்ள ஆணவத்தினின்றும் நீங்கும்வரை மாறிமாறி இறத்தல் பிறத்தல்களைப் பொருந்தும். ஆகவே, ஓர் உயிர் இறந்ததும் இறந்தொழிந்தே போமென்பதன்று. அதன் அறிவைத் தடுத்துள்ள ஆணவம் நீங்கும் வரை பிறந்திறந்து கொண்டே வரும். இவ்வுண்மை விளக்குதற்கே இச்சூத்திரம் வரவுபோக்கு புரிய என்னுது, இறந்த உயிர் மீளவும் பிறக்குமென்பதை உணர்த்தப் 'போக்கு' என்பதை முன்வைத்துப் 'போக்கு வரவுபுரிய' என்றோதியது.

---

## மூன்றும் பாடம்

**பெத்த உயிர்கள் தத்தம் இருவினைக்கேற்ப இறத்தல் பிறத்தல்களைப் புரியும்.**

ஓர் உயிர் இறந்ததும் அது கூடியுள்ள தூலதேகம் சூக்குமப் பொருள்களாய் மாறி அதற்குக் காரணமாயுள்ள சூக்கும தேகத்தில் ஒடுங்குமென்றோம்*. அச்சூக்கும தேகத்தினின்று மீளவும் ஓர் தூலதேகம் தோன்றுமென்றும் சொன்னோம்†. மீளத்தோன்றும் தூலதேகம் முன்னிருந்த தேகமன்று. சூக்கும தேகம் ஒன்றேயாயிருந்தாலும், அதனினின்று தோன்றும் தூலதேகம் பிறவிதோறும் வெவ்வேறே. அன்றியும் ஓர் உயிர் பொருந்தியுள்ள தேகமும் மற்றோருயிர் பொருந்தியுள்ள தேகமும் வெவ்வேருகவே காணப்படும். ஓர் உயிர் மனித தேகத்தையும் மற்றோருயிர் மிருக

* சூ. II பா. 1	† சூ. II. பா. 2.

முதலிய தேகத்தையும், ஓர் உயிர் பலமான தேகத்தையும் மற்றோருயிர் பலஹீனமான தேகத்தையும், ஓர் உயிர் சுகதேகத்தையும் மற்றோருயிர் துக்கதேகத்தையும் இவ்வாறு பலவிதமாய்ப் பேதப்பட்ட சரீரங்கள் உயிர்கட்கிருக்கவும் காண்கிறோம். இதுவுமன்றி ஒரு தேகம் அநேக வருஷ காலம் அழியாதிருக்கவும் மற்றொன்று சிலநாட்களிலும் சில கணங்களிலும் அழியவும் காண்கிறோம். இத்தேகங்களை இவ்வாறு பேதப்படத் தோற்றுவிப்பவன் ஏனையுலகப்பொருள்களைத் தோற்றுவிக்கும் முதல்வனே. இம்முதல்வன் இத்தேகங்களை யாதும் நியதியின்றித் தன்னிஷ்டம்போல இவ்வாறு பேதப்படத் தோற்றுவிப்பானா? அன்றி யாதானும் நியதிப்படி தோற்றுவிப்பானா? அந்நியதிதான் யாது? என்பதை ஆராய்வாம். முதல்வன் தன்னிஷ்டம்போல் உயிர்கட்குப் பேதப்பட்ட சரீரங்களைத் தோற்றுவிப்பானென்பது பொருந்தாது. எல்லாவுயிர்களையும் ஒன்றுபோல நடத்தும் முதல்வன் அவ்வுயிர்கள் பால் யாதுங் காரணமின்றிப் பேதம்செய்யான். ஆகவே இத்தேகங்களை நியதிப்படுத்துதற்கு ஏதுவான காரணமொன்றிருத்தல்வேண்டும். இந்நியத காரணமே வினையெனப்படும்.

வினை என்பதற்குச் செயல் என்பது பொருள். ஒவ்வோருயிரும் தூலதேகத்தோடு கூடியுள்ளபோது பலவித செயல்களைச் செய்யும். இச்செயல்களை விருப்பு வெறுப்போடும் செய்யும்; விருப்பு வெறுப்பின்றியும் செய்யும். விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்படும் செயல்கள் தூலதேகத்தை மாத்திரம் தாக்குவனவாதலால், சித்துப்பொருளாகிய உயிரினைத் தாக்கா. விருப்பு வெறுப்போடு செய்யப்படும் செயல்களோ அறிவினையும் தாக்குவனவாதலால், உயிர்களையும் பந்

தித்து அவ்வுயிர்கள் இறக்குங்காலத்து அவற்றின் சூக்கும தேகங்களில் தங்கிநின்று அவ்வுயிர்கட்குச் சுகதுக்கங்களாகிய பலன்களை நியதியிட்டுக் கொடுக்கும். இவ்வாறு பலன்களைத் தந்தவை போக எஞ்சியவினையே அச்சூக்கும தேகங்களினின்று தனித்தனி தோன்றும் தூல தேகங்களையும் அத்தூல தேகங்களோடு கூடிய காலத்து அனுபவிக்கும் இன்பதுன்பங்களையும் நியதிப்படுத்தும். இவ்வினை இருதிறப்படும். அவை நல்வினை தீவினை யென்பன. இவ்விருவினைகளும் பிறவிதோறும் உயிர்களால் ஈட்டப்பட்டுவரும். இவ்வினைகள் பொருளல்லவாயினும், உயிர்களை இவ்வினைகளியற்றும்படி செய்வதான காரணப்பொருள் ஒன்றுண்டு. இக்காரணந்தான் மூலகன்மம் என்று சொல்லப்படும். இம்மூலகன்மமும் வியாபகமாயுள்ள சூக்கும ஜடப்பொருள். இதுவும் அநாதியேயுள்ளது. இது தன்னுள் இருவேறு கூறுயிருப்பதால் இதனுல் இயற்றப்படும் வினைகளும் இருவகைப்படும். இவ்வினைகட்கு ஏற்பவே ஒவ்வோருயிரும் தேகத்தினை யெடுப்பதும் விடுப்பதுமாம். அதாவது உயிர்களின் பிறப்புக்களை நியதிப்படுத்துவது அவ்வவ்வுயிரின் வினையே. அவற்றின் இறப்புக்களை நியதிப்படுத்துவதும் அதுவே. இவ்விறத்தல் பிறத்தல்களுக்கு நடுவே உயிர்கட்குவரும் சுகதுக்கங்கட்கு நியதகாரணமும் அதுவேயாம். இக்கருத்துக்களை யெல்லாம் உணர்த்தவே இச்சூத்திரம் 'போக்குவரவுபுரிய' என்றுமட்டும் ஓதாது 'இருவினையிற் போக்குவரவுபுரிய' என்றோதியது.

## நான்காம் பாடம்.

### உயிர்கட்கு இறத்தல் பிறத்தல் முதலியவற்றை நியதிசெய்பவன் முதல்வனே.

இருவினை உயிர்கட்கு இறத்தல் பிறத்தல் முதலியவற்றை நியதிபண்ணுமென்றோம்*. என்றால் அவ்வினை தானே நியதிபண்ணுமா? வேறொருவன் ஏவல் வழி நின்று நியதி பண்ணுமா? என்பதை ஆராய்வாம். வினை உயிர்கட்கு இறத்தல் பிறத்தல்களைச் செய்தற் பொருட்டு அவ்வுயிரினைப் பந்தித்து நிற்குமென்றோம்*. அது ஜடமானதால் தானே உயிரினைப் பந்தியாது. உயிர் சித்தென்றாலும் தானாய் அறியுந்தன்மையுடையதன்று: முதல்வன் அறிவிக்கவே அறியுந் தன்மைத்து என்பது வருஞ்சூத்திரத்தில் விளக்கப்படும்‡. ஆகவே அவ்வினை முதல்வனாலேயே உயிர்கட்குக் கூட்டப்படல் வேண்டும். இன்றேல் வினை உயிரினைப் பந்திக்குமாறில்லை. உயிர் இறத்தல் பிறத்தல்களையும் சுகதுக்கங்களையும் பொருந்துமாறுமில்லை. ஆதலால் முதல்வனே இவ்வினையைக் கருவியாகக்கொண்டு உயிர்க்கு அப்பலன்களைக் கொடுக்கின்றான். ஓர் அரசன் தன் பாடிகாவலனைக்கொண்டு தன் நகரியைப் பாதுகாக்குங்கால் அப்பாடிகாவலன் அவ்வரசன் ஏவல்வழி நின்று பாதுகாப்பதுபோல வினையும் முதல்வன் ஆணைவழி நின்று உயிர்கட்கு அப்பலனைக் கொடுக்கும். என்றால் உயிர்கட்கு இறத்தல் பிறத்தல் முதலிய பலன்களைக் கொடுப்பது அவற்றின் வினையா? அன்றி முதல்வனா? எனில், வினையன்று முதல்வனே. உழவர்செய்யுந் தொழிற்குத்தக்க பலனை உழவு தொழிலே கொடுக்குமென்று சொல்வோம். விளை நிலமே கொடுக்குமென்றும் சொல்வோம்.

* சூ. II. பா. 3. ‡ சூ. III. பா. 7.

உழவு தொழில் அப்பயனை நியதிப்பிடுவதன்றி வேறில்லை யென்றும் சொல்வோம். உயிர்கள் செய்யும் வினையும் அதுபோல்வதே. இவ்வினை உயிர்கட்குப் பலன்களை நியதிபிட்டு மாத்திரம் கொடுக்கும். முதல்வனே அந்நிய திப் பலன்களைக் கொடுப்பவன். அதனால் முதல்வன் வினையிற் பாதந்திரனாகான். ஓர் எஜமானன் தன் வேலையாளர்க்கு அவரவர் வேலைக்குத் தக்க கூலி கொடுப்பதனால் அவ்வேலையாளர்பால் அவ்வெஜமானன் பரதந்திரனாதலில்லை. முதல்வனும் அவ்வாறே. இக்கருத்துக்களையெல்லாம் உணர்த்தவே இச்சூத்திரம் 'இருவினையிற் போக்குவரவு புரிய' என நிறுத்தாது 'ஆணையின் இருவினையின்' என இயைந்து பொருள் தரும்படி 'இருவினையிற் போக்குவரவு புரிய' என்பதை 'ஆணையின்' என்பதனோடு அடுத்து வைத்தோதியது.

---

## ஐந்தாம் பாடம்

### உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு ஒன்றாய் நிற்பன்.

பெத்த உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரியுமென்றோம்*. ஒருயிர் தான் தங்கிய தூலதேகத்தினைவிட்டு நீங்குதலே அதன் இறத்தலென்றும்†. மீள வேறோர் தூலதேகத்தில் தங்கவருதலே அதன் பிறத்தலென்றுஞ் சொன்னோம்‡. ஒருயிர் யாதானும் தூலதேகத்தில் தங்கிநிற்கும்போது அதனாற் செய்யப்படும் செயல்களே வினையாய் மாறி, அதனாற் அப்பாலெடுக்கப்படும் தூலதேகத்தினையும் அதனோடு கூடியனுபவிக்கும் சுகதுக்கங்களையும் நியதிப்படுத்துமென்றுஞ் சொன்னோம்§. அவ்வாறு நியதிப்படுத்துவதும் முதல்வன்

*, †. சூ. II. பா. 1. ‡ சூ. II. பா. 2. § சூ. II. பா. 3.

ஏவல் வழியே யென்றும் சொன்னோம்‖. என்றால் உயிர்களை வினை யியற்றும்படி செய்பவனும் அவ்வினைப் பயன்களாகிய இறத்தல் பிறத்தல்களைப் புரிந்து சுகதுக்கங்களை யனுபவிக்கும்படி செய்பவனும் இம்முதல்வனேயென முடியும். இம் முதல்வன் இத்தகைய உயிர்கள் இவ்வாறு செய்தற்பொருட்டு அவ்வுயிர்களோடு எவ்வாறு நிற்கின்றானென்பதை ஆராய்வாம்.

முதல்வன் உயிர் என்னுமிரண்டுஞ் சடமல்ல: சித்துப் பொருள்களே. இரண்டுமே அறிவாகாரமாயுள்ள பொருள்கள். இரண்டும் வியாபகப்பொருள்கள். ஆனால் முதல்வனது வியாபகம் எக்காலத்தும் ஒரே தன்மைத்தாயுள்ளது. அதற்கு எக்காலத்தும் எவ்விதத் தடையுமிருந்திருப்பதில்லை. உயிரினது வியாபகம் அவ்வாறன்று. அது அநாதியே ஆணவ மலத்தால் தடையுண்டு அணுவாய்க் கிடந்தது. இத்தடை நீக்குதற்பொருட்டே உயிர்க்கு உடல் முதலாயின அமைக்கப்பட்டுவருமென்று சொன்னோம்¶. இவ்வுடலும் இத்தடையை முற்றும் நீக்கியவாறில்லை: தன்னளவிலேயே நீக்குவது. அதாவது இவ்வுடலோடு கூடியுள்ளபோதும் உயிர் அவ்வுடலுக்கு வெளியே வியாபித்தலில்லை. அப்படியே எந்த உடலோடு கூடியபோதும் அந்த உடலுக்கு வெளியே உயிர் வியாபித்து நிற்குமாறில்லை. எனவே இறத்தல் பிறத்தல் புரியும் எந்த உயிரும் முதல்வனைப்போல் நிற்றலின்றி, ஏகதேசப்பட்டு நின்றேயறியும் என முடியும்.

இவ்வாறு ஏகதேசப்பட்டு நிற்கும் உயிர்கள் இவ்வுலகப் பொருள்களை யறிந்து வினையினை யீட்டுதற்கு முதல்வனும் ஏகதேசமாய் நின்று உபகரித்தல்வேண்டுமோ? அன்றி வியாப

‖. சூ. II. பா. 4. ¶. சூ. I. பா. 11.

கமாய் நின்று உபகரித்தலே போதுமா? என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது. உயிர் உடலினையறியச் செய்தற்கு அவ் வுடலினைப்போல் தானும் ஏகதேசமாய் அவ்வுடலினொடு உடலாய் நின்றால்மாத்திரம் முடியும். கண்ணொடு கண்ணாய் நின்றால்மாத்திரம் கண் காணும். அப்படியே எந்த உடலோ டும் உயிர் அந்த உடலேயாய் நின்றால்மாத்திரம் அந்த உடலி லுள்ள எந்த இந்திரியமும் அறியும். முதல்வன் உடலொடு கூடியிருக்கும் உயிரினை அறியச்செய்வதும் இவ்வாறே. அந்த உயிர்போல் முதல்வனும் ஏகதேசமாய் அவ்வுயிரோடு உயிராய் நின்றால்மாத்திரம் அவ்வுயிர் உலகப்பொருள்களை யறிந்து வினைகளை யீட்டி இறத்தல் பிறத்தல்களைப் புரியும். இவ்வாறன்றி முதல்வன் வியாபகமாய் மாத்திரம் நிற்க இப் பெத்த உயிர்கள் அறியாவோ எனின், அறியா. அறியுமேல் எல்லாவுயிர்களும் ஒன்றுபோலறிதல்வேண்டும். அவ்வா றன்றி உயிர்கள் பல்வேறுபட அறிவதால் முதல்வன் ஒவ் வொரு பெத்த வுயிரோடும் அவ்வவ்வுயிரேயாய் நிற்றல் அவசியம் வேண்டப்படும். இதுவே இறத்தல் பிறத்தல் புரியும் உயிரோடு ஒன்றாய் நிற்குந்தன்மை. இத்தன்மையை இறத்தல் பிறத்தல் புரியும் எல்லா உயிர்களோடுங்கொண்டு முதல்வன் உபகரித்து வருகின்றான். இக்கருத்தையே இச் சூத்திரம் '(உயிர்கள்) போக்கு வரவு புரிய (முதல்வன்) அவையேயாய் நிற்கும்' என்று இயைபுற உணர்த்தும்.

---

## ஆறும் பாடம்

உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களின் வேறுயும் நிற்பன்.

உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்கு முதல்வன் அவைகளோடு ஒன்றுய் நிற்கவேண்டுமென்று சொன்னோம்.* முதல்வன் இவ்வாறு இவ்வுயிர்களோடு ஒன்றுய் நின்று உபகரித்தல் மாத்திரம் போதுமா? வேறு நின்று உபகரித்தலும் வேண்டுமா? என்பதை ஆராய்வாம். கண் ஒரு பொருளேக் காணுதற்கு உயிர் கண்ணோடு கண்ணுய் நின்றுல் மாத்திரம் போதாது. போதுமேல், அருக்கனொளியில்லாத காலத்தும் கண் காணல் வேண்டும். அஃதின்றுதலால், கண்ணோடு ஒன்றுய் நின்று உபகரித்தலாகிய உயிர் உபகாரம் ஒன்றே அக்கண்ணினைக் காணச்செய்தற்குப் போதாதென முடியும். அக்கண்ணுக்கு வேறு நின்று உபகரிப்பதாகிய அருக்கன் உபகாரமும் வேண்டுமெனவும் முடியும். இறத்தல் பிறத்தல் புரியும் உயிர்களுக்கு வேண்டப்படும் உபகாரங்களும் இவ்வாறே. அவ்வுயிரினோடு உயிராய் நின்று உபகரிப்பதாகிய உபகாரம் மாத்திரம் போதாது. அவ்வுயிர்க்கு வேறு நின்று உபகரிப்பதாகிய உபகாரமும் வேண்டும். இவ்வாறு வேறு நின்று உபகரிப்பதற்கு முதல்வனையன்றி வேறு பொருளில்லை. முதல்வன் எக்காலத்தும் வியாபகனுதலால் இறத்தல் பிறத்தல் புரியும் உயிரோடு அவ்வுயிராய் நிற்கும்போதும் அவனது வியாபகத்திற்குக் குறைவில்லை. ஆதலால் இறத்தல் பிறத்தல் புரியும் உயிரோடு அவ்வுயிராய் நின்று உபகரிப்பதோடு அவ்வுயிர்க்கு வேறுநின்று உபகரித்தலும் முதல்வனுற் கூடும். எனவே இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு

* சூ. II. பா. 5.

முதல்வன் அவற்றைப் புரியும் உயிர்களின் வேறுமாய் நிற்கின்றான் என முடியும். இத்தன்மையையும் முதல்வன் இறத்தல் பிறத்தல் புரியும் எல்லா வுயிர்களோடுங் கொண்டுள்ளான். இக்கருத்தையும் உணர்த்தவே இச்சூத்திரம் '(உயிர்கள்) இருவினையிற் போக்குவரவு புரிய (முதல்வன்) தானேயாய் நிற்கும்' என்று இயைபுற ஓதியது.

## ஏழாம் பாடம்

உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு
முதல்வன் அவ்வுயிர்களோடு உடனாயும் நிற்பன்.

உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு அவ்வுயிர்களோடு முதல்வன் ஒன்றாய் நிற்றல் பாத்திரமன்றி வேறாயும் நின்று உபகரிக்கின்றானென்று சொன்னோம்.* உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்கு மேற்கூறிய இரண்டுவித உபகாரங்கள் மாத்திரம் போதுமா? வேறுவித உபகாரமும் வேண்டுமா? என்பதை ஆராய்வோம். கண் ஒரு பொருளைக் காணுதற்கு அக்கண்ணொடு ஒன்றாய் நின்று உபகரித்தலாகிய உயிரின் உபகாரமும் அக்கண்ணுக்கு வேறு நின்று உபகரித்தலாகிய அருக்கன் உபகாரமும் ஆக இரண்டு உபகாரங்கள் பாத்திரம் போதா. இவ்விருவித உபகாரங்களிருப்பினும் கண்ணுக்கும் பொருளுக்கும் இடையே, யாதானும் தடையிருப்பின், அக்கண்ணில் உயிருணர்வோடு அப்பொருளொளியும் உடன் கலக்குமாறில்லை: அக்கண் அப்பொருளைக் காணுமாறுமில்லை. அதாவது கண் ஒரு பொருளைக் காணுதற்கு உயிர் அக்கண்ணொடு கண்ணாய் நிற்றலாகிய உபகாரம், அருக்கனது உபகாரம், அப்பொருளொளியும் உயிரு

* சூ. II. பா. 6

ணர்வும் அக்கண்ணில் உடன் கலத்தலாகிய உபகாரம் ஆகிய மூவித உபகாரங்களும் வேண்டப்படும். உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டும் முதல்வனால் இம்மூவித உபகாரங்களும் செய்யப்படல் வேண்டும். அதாவது அவ்வுயிரோடு ஒன்றாய் நிற்றல், வேறாய் நிற்றலாகிய உபகாரங்களோடு, உடனாய் நிற்றலாகிய உபகாரமும் செய்யப்படல் வேண்டும். இவ்வுபகாரத்தையும் முதல்வன் இறத்தல் பிறத்தல் புரியும் எல்லா உயிர்களுக்கும் செய்துவருகின்றான். இக்கருத்தையே இச்சூத்திரம் '(உயிர்கள்) போக்கு வரவுபுரிய (முதல்வன்) அவையே தானேயாய் நிற்கும்' என இயைபுற உணர்த்தியது.

---

## எட்டாம் பாடம்

உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற் பொருட்டு
முதல்வன் அவ்வுயிர்களோடு அத்துவிதமாய் நிற்பன்.

முதல்வன் இறத்தல் பிறத்தல் புரியும் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பனென்றோம்.* முதல்வனாகிய ஒரு பொருளிடத்து இம்மூவேறு தன்மைகளும் ஒருங்குகூடி யிருத்தலெப்படி? என்பதை யாராய்வாம். அரக்கை உருக்கி அதனொடு கற்பொடி சேர்த்துச் சாணை செய்யப்படும். இச்சாணையில் கல் அரக்கோடு உடன் விரவிக் கிடக்கின்றது. இவ்விரண்டும் தன் தன் தன்மையிற் குறைவுபடவில்லை. சேர்த்துப்பிடிக்குந் தன்மையாகிய அரக்கின் தன்மையும், கத்தியினைக் கூர்மைப்படுத்துந் தன்மையாகிய கல்லின் தன்மையுமாகிய இரண்டு தன்மைகளும் சாணையிற் காணப்படுகின்றன. இச்சாணையிற் கல் தன் சுயவடிவத்திற்

* சூ. II பா. ௫ முதல் 7.

காணப்படாது அரக்கோடு அரக்காய்க் காணப்படுகின்றது. எனவே சாணையென்னும் ஓர் பொருளில் மூவேறு தன்மைகள் ஒருங்கு கூடியிருக்கக் காண்கிறோம். அதுபோலவே முதல்வன்பாலும் இறத்தல் பிறத்தல் புரியும் உயிர்களோடு ஒன்றுந்தன்மை வேறுந்தன்மை உடனுந்தன்மையாகிய மூன்று தன்மைகளும் ஒருங்கிருத்தல் கூடும். இம்மூவேறு தன்மைகளின் சேர்க்கையே 'அத்துவிதத் தன்மை' எனப்படும். இத்தன்மையோடு கூடிநின்றே முதல்வன் உயிர்கட்கு அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற் பொருட்டு உபகரிக்கின்றான்.

இவ்வுபகாரத்தைப் பெத்த உயிர்கட்கு மாத்திரமன்றி முத்த உயிர்கட்குஞ் செய்துவருகின்றான். ஆணவமலம் நீங்கப்பெற்ற உயிர்களே முத்த உயிர்களெனப்படும். இம்முத்த உயிர்கள் உலகப் பொருள்களையறிந்து வினையினையீட்டுதல் இல்லை: இறத்தல் பிறத்தல்களைப் புரிவதுமில்லை. என்றாலும் இம்முத்த உயிர்கட்கும் முதல்வனது அத்துவித உபகாரம் வேண்டப்படுவதில்லை யென்பதின்று. ஆனால் பெத்த உயிர்கட்கு முதல்வனாற் செய்யப்படும் அத்துவித உபகாரமும் முத்த உயிர்கட்கு முதல்வனாற் செய்யப்படும் அத்துவித உபகாரமும் வேறு வேறாம். பெத்த உயிர்கட்கு இவ்வுலகப் பொருள்களை அறிந்தனுபவித்தற்கண் முதல்வன் அத்துவிதமாய் நின்று உபகரிக்கின்றான். முத்த உயிர்கட்குப் பரம்பொருளாகிய தன்னை அறிதற்கண் அவ்வாறு நின்று உபகரிக்கின்றான். முத்த உயிர்கட்குச் செய்யப்படும் அத்துவித உபகாரம் பின்னர் விளக்கப்படும். இச்சூத்திரத்து விளக்கப்படுவது, பெத்த உயிர்கட்கு உபகரித்தற் பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு கொண்டுள்ள அத்துவிதக் கலப்பின்

றன்மையே. இத்தன்மையை உணர்த்தவே இச்சூத்திரம் '(உயிர்கள்) போக்கு வரவுபுரிய (முதல்வன்) அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் நிற்கும்' என இயைபுற உணர்த்தும்.

இனி, அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளை ஆராய்வாம். இவ்வத்துவிதச் சொல் ந, துவிதம் என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்த ஒருசொல். இவற்றுள் 'ந' என்னும் சொற்கு இன்மை, அன்மை, மறுதலை என்னும் மூன்று பொருள்கள் இலக்கண நூலிற் படிக்கப்படும். இச்சொல் 'ரூபம்' என்னுஞ் சொல்லோடுகூடி 'அரூபம்' என்றாகி ரூப மின்மையை உணர்த்தும்: 'தர்மம்' என்பதனோடுகூடி 'அதர் மம்' என்றாகித் தர்மத்தின் மறுதலையை உணர்த்தும்: இவ் வாறன்றி யாதானும் எண்ணுச் சொல்லோடு கூடில், மேற் சொல்லிய இன்மை மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கின்கண் இன்று. அக்காலத்து அன்மைப் பொருளை உணர்த்துதலே வழக்கின்கண் உண்டு. இவ்வழக்கினை 'அநேகம்' என்னுஞ் சொல்லால் அறியலாம். இவ்வழக்கின் படி 'அத்துவிதம்' என்னுஞ் சொற்கு இரண்டன்மை பொருள்: இரண்டின்மையாகிய ஒன்று என்பது பொரு ளன்று. ஒன்று என்னும் பொருளை 'ஏகம்' என்னும் சொல்லே உணர்த்தும். 'ஏகம்', 'அத்துவிதம்' என்னும் சொற்களிரண்டும் ஒன்று என்பதையே உணர்த்துமென்றல் பொருத்தமன்று. உணர்த்துமேல் 'ஏகமேவ அத்துவதீயம் பிரம்ம' என்று சுருதியிற் சேர்ந்துவரக் காரணமில்லை. ஒரே பொருளாகிய பிரமம் ஏனைப் பொருள்களில் இரண்டறக் கலந்துநிற்கும் என்பதே இச்சுருதிக்குப் பொருள்.

---

## ஒன்பதாம் பாடம்

### உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரிதற்பொருட்டு முதல்வன் தன் சத்தியோடு நீக்கமின்றி நிற்பன்.

முதல்வன் யாண்டும் வியாபித்து நிற்கின்றான் என்றோம்*. இறத்தல் பிறத்தல் புரியும் ஒவ்வொரு உயிரோடும் அவ்வுயிரேயாய் நிற்கின்றான் என்றும் சொன்னோம்†. யாண்டும் வியாபித்துநிற்குந் தன்மை வியாபகத் தன்மை: ஒவ்வொரு உயிரோடும் அவ்வுயிரேயாய் நிற்குந்தன்மை ஏக தேசத் தன்மை. இவ்விரண்டு தன்மைகளும் ஒன்றற்கொன்று மாறுபட்ட தன்மைகள். இவ்வாறு மாறுபட்ட தன்மைகளோடுகூடிய முதல்வன் ஒரே பொருளா? இருவேறு பொருளா? இரண்டு மாறுபட்ட தன்மைகள் ஒரே பொருளின்கண் இருத்தல் முடியாது. ஆதலால் முதல்வன் ஒரே பொருளாகமாட்டான். இனி முதல்வன் இருவேறு பொருளாகுமா? என்பதையும் ஆராய்வாம். மேலே கூறிய இரண்டு வேறு தன்மைகளும் என்றாயினும் பிரிந்து விளங்குந் தன்மைகளல்ல. அவ்விரு தன்மைகளும் என்றும் ஒருங்கியைந்தே காணப்படுகின்றன. முதல்வன் உயிர்களோடு உயிர்களாய் நிற்கும்போதே யாங்கணும் வியாபகமாயும் நிற்கின்றான். இவ்வாறு என்றும் ஒருங்கியைந்து விளங்கும் இரண்டு தன்மைகளையுடைய முதல்வனை இருவேறு பொருள் என்னவுமிடமில்லை. அன்றியும் முதல்வன் தன்னுள் இருவேறு பேதப்பட நிற்பின், அவன் ஒவ்வொரு உயிரோடும் அவ்வுயிரொன்றேயாயிருத்தல் முடியாது. ஆதலால் முதல்வன் இருபொருளாமாறில்லையென முடியும். முதல்வன் ஒரே பொருளாகானென்றும் சொன்னோம். எனவே முதல்வன்

*. †. சூ. II. பா. 5.

ஒரே பொருளாவதுமின்றி இருவேறு பொருளாவதுமின்றி நிற்பவனென்றே சொல்லவேண்டும். அதாவது முதல்வன் பால் விளங்கும் இரண்டு வேறு தன்மைகளையுடைய பொருள்கள் ஒன்றென்பதுமின்றி இரண்டென்பதுமின்றி ஒருங்கியைந்து நிற்பனவென்றே சொல்லவேண்டும். இவ்விரு தன்மைகளுள் வியாபகத்தன்மை அறிவாகாரமாந் தன்மையாதலால் ‘சிவம்’ எனப்படும். சிவம் என்பதற்கு அறிவு என்பதும் பொருள். மற்றொரு தன்மையாகிய உயிரோடு உயிராய் நிற்குந்தன்மை உயிர்கள்பால் முதல்வன் வைத்துள்ள அருட்டன்மையாதலால் அருள் அல்லது ‘சத்தி’ எனப்படும். ‘ஆணை’ என்றுஞ் சொல்லப்படும். முதல்வன் இவ்வாணையோடு ஒன்றேயென்பதுமின்றி வேறென்பதுமின்றி ஒருங்கியைந்து நிற்கின்றானென்பது முடியும். இவ்வாறு நிற்றலினாலேயே முதல்வன் பெத்த உயிர்களோடு அத்துவிதமாய் நின்று அவ்வுயிர்களை இறத்தல் பிறத்தல் புரியும்படி செய்கின்றான். இதனால் முதல்வன் தன் ஆணையோடு நீக்கமின்றி நிற்றலின் பயன் உயிர்களின் இறத்தல் பிறத்தல்கள் மட்டுமே என்பதன்று: அவ்விறத்தல் பிறத்தல்களும் அந்நிலையின் பயனென்பதே கருத்து. இக்கருத்தையே இச்சூத்திரம் ‘(உயிர்கள்) போக்குவரவு புரிய (முதல்வன்) ஆணையின் நீக்கமின்றி நிற்கும்’ என இயைபுற உணர்த்தியது.

இரண்டாம் சூத்திரம் முற்றிற்று

## மூன்றாம் சூத்திரம்

உளது இல தென்றலின், எனதுட லென்றலின்,
ஐம்புலன், ஒடுச்கம அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின், உணர்த்த உணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

---

### முதற் பாடம்

உயிர் உண்டு.

உயிர்கள் மாறி மாறி இறத்தல் பிறத்தல் புரியுமென்றோம்.* அவ்விறத்தல் பிறத்தல்களின் பொருட்டு முதல்வன் அவ்வுயிர்களோடு அத்துவிதமாய் நிற்பனென்றுஞ் சொன்னோம்†. ஆனால் உயிரென்பதோர் பொருள் உண்டென்பதற்கும் அவ்வுயிர் யாது என்பதற்கும் எவ்வித ஏதுவுங் கூறவில்லை. அவ்வுயிருண்மையை உணர்த்தும் ஏதுக்களை இச்சூத்திரத்து ஆராய்வாம். உயிர் அறிவுப்பொருளாதலால் அதனை நாம் பிரத்தியக்ஷத்தில் அறியமுடியாது. நம்மால் பிரத்தியக்ஷத்தில் அறியவரும் பொருள்கள் ஜடப்பொருள்களே. இச்சடப்பொருள்களின்பால் உயிர் உண்டென்பதையுணர்த்தும் ஏதுக்கள் உளவா? என்பதே நாம் ஆராயவேண்டுவது. இவ்வுலகில் நாம் காணும் ஜடப்பொருள்கள் இருதிறப்படும். இவற்றுள் ஒருதிறத்துச் சடப்பொருள்களில் எக்காலத்தும் எவ்வித அறிவும் விளங்குவதில்லை. இவை யாவும் தனித்த ஜடம். இதுவன்றி மற்றோர் திறத்துச் சடப்பொருள்களில் யாதானும் ஓர் விதத்திலறிவு விளங்கி நிற்

* சூ. II பா. 2. † சூ. II பா. ௪.

பதை நாம் அறிவோம். இத்திறத்துப் பொருளகளையே உயிருடைப் பொருள்களென்கிறோம். இவற்றின்கண் உயிருளதா என்பதை ஆராய்வாம்.

யாதானும் ஓர் அறிவு விளங்கும் பொருளைக் கூறுபடுத்திச் சோதிக்கில் அதன் ஓர் கூற்றிலாவது அறிவின் விளக்கத்தை நாம் காணுவதில்லை. அதன் ஒவ்வோர் கூற்றையும் இது உயிரன்று இது உயிரன்று என்றே கழிப்போம். இப்படியே எந்த அறிவு விளங்கும் பொருளையும் கூறுபடுத்திச் சோதிக்கில், அததன் ஒவ்வொரு கூற்றையும் இது உயிரன்று இது உயிரன்று என்றே கழிப்போம். இதனால் உலகில் உயிரில்லையென்றே சொல்லலாமா? ஒவ்வொரு கூறறையும் மேற் சொல்லியவாறு கூறுபடுத்தி இது உயிரன்று இது உயிரன்று என்று கழிக்கிற பொருள அறிவுப்பொருள்தானே. அதுவுமில்லையெனின், அவ்வாறு கூறுபடுத்தலும் கழித்தலுமில என்றன்றோ முடியும். ஆதலால் இவ்வாறு கூறுபடுத்திக் கழிக்கும் பொருள் ஒன்று உண்டே அதுதான் அறிவுடைப் பொருள். அதுதான் உயிர். இவ்வுயிர் அறிவு விளக்கமுள்ள பொருள்தோறும் உண்டு. அதாவது உலகப் பொருள்களில் சேதனம் அல்லது சித்து என்னும் வகுப்பிற் சேரும் ஒவ்வொரு பொருளிலும் உயிர் உண்டு. அறிவு பெரிய பொருளிலும் உண்டு: அறிவு சிறிய பொருளிலுமுண்டு. அறிவு விளங்கிய பொருளிலும் உண்டு: அறிவு மழுங்கிய பொருளிலுமுண்டு. மனிதர்கட்குமுண்டு: மிருகங்கட்குமுண்டு. தாவரங்கட்குமுண்டு: சங்கமங்கட்குமுண்டு. எந்தப் பொருளிலேனும் யாதானும் ஓர்காலத்து எவ்விதத்தானும் அறிவு விளங்கில், அதை உயிருடைப் பொருள் என்னலாம். ஆகவே உயிர்கள் எண்ணில என்பது பெறப்படும். இக்கருத்தினையே இச்சூத்

திரம் 'இலது என்றலின் ஆன்மா உளது' என இயைபுற உணர்த்தும்.

---

## இரண்டாம் பாடம்

### உயிர் தங்குவது உடலினுள்.

உயிரென்பதோர் பொருள் உண்டென்றும், அதனை ஜடப்பொருளோடு கூடி விளங்கிநிற்கக் காணலாமென்றுஞ் சொன்னோம்*. அவ்வாறு ஜடப்பொருளோடுகூடி விளங்கும் உயிர் எங்கேயுள்ளது? அச்சடத்தினுள்ளேயா? வெளியேயுமா? என்பதையுமாராய்வாம். இவ்வுலகிலுள்ள ஜடப்பொருள்களெல்லாம் மாயா காரியங்களென்று சொன்னோம்†. இவற்றுள் எதெதில் உயிரின் விளக்கமுண்டோ அது உடல் அல்லது 'தனு' எனப்படுமென்றுஞ் சொன்னோம்‡. இவ்வுடலினும் உயிரின் விளக்கம் எப்போதுமில்லை. ஏனைச்சடப் பொருள்கள்போல இவ்வுடலும் ஓர்காலத்துக் கெட்டொழிவதே. அவ்வாறு கெட்டொழியும்போது இவ்வுடலின்கண் உயிரின் விளக்கம் சிறிதுமில்லாது நின்றுவிடும். அதுகாறும் இவ்வுடலின்கண் நிகழ்ந்த எவ்வித இயக்கமும் அப்பால் நின்றுவிடும். எனவே இவ்வுடல் கெட்டொழியும்வரை அதன்கண் நிகழ்ந்த இயக்கங்கள் யாவும் உயிரின் செயல்களேயாய் முடியும். எப்படி ஓர் யந்திரம் ஒருவனால் இயக்கப்படுமோ அப்படியே இவ்வுடல் உயிராலியக்கப்படும். இது பற்றியே இவ்வுடலை இச்சூத்திரம் 'இயந்திர தனு' என்றோதியது.

இவ்வாறு உடலை இயந்திரம்போல் இயக்கும் உயிர் எங்கே தங்கியுள்ளது? என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது.

* சூ. III பா. 1 †, சூ. I பா. 10 ‡ சூ. II பா. 1

உயிர் உடலுக்கு வெளியேயும் தங்கி நிற்பதானால், அவ்வாறு எப்போதும் தங்கி நிற்பதால். அவ்வுடலின் இயக்கம் நின்று அது பிணமாய்க் கெட்டொழியக் காரணமில்லை. அன்றியும் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு உடலையே இயக்கவேண்டு மென்பதுமில்லை. ஆனால் ஒரு உடல் கெட்டொழிய மற்றொரு உடல் நிற்பதை நாம் பிரத்தியக்ஷத்தில் அறிவோம். எனவே ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு உடலையே இயக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆதலால் உடலுக்கு வெளியே உயிர்க்கு வியாபகமில்லையென்றே பெறப்படும். என்றால், ஒருவன் தன் கண்ணால் ஒரு பொருளைக் காணும்போது அவனது கண்ணொளியோடு அவனது உயிருணர்வும் அப் பொருளின்பாற் சென்று பற்றுவதால் உயிர் உடலுக்கு வெளி யேயும் வியாபித்தல் பெறப்படாதோ எனின், அன்று. ஒரு வன் ஓர் பொருளைக் காணும்போது அப்பொருளின்பால் அவனது கண்ணொளியும் சென்று பற்றுவதில்லை. அவனது உயிருணர்வும் சென்று பற்றுவதில்லை. அப்பொருளின் ஒளியே அவனது கண்ணிந்திரியத்திற் சேர்கின்றது. அத னோடு அவ்விந்திரியத்தில் உயிருணர்வும் கூடுவதன்றி வேறில்லை. எனவே உடலுக்கு வெளியே உயிர் வியாபித்த லில்லையென்பதே பெறப்படும். ஆனால் உடலின்கண்ணே வந்து கூடும் பொருள்களை மாத்திரம் உயிர் அறியுங் காரணத் தால், அவ்வுயிர்க்கு அதன் உடலுக்கு வெளியே விளக்க மில்லையென்பது பெறப்படுமேயன்றி, வியாபகமில்லை யென் பதும் பெறப்படுமோவெனின்? பெறப்படும். உயிர் அறிவா காரமாய் மாத்திரம் நிற்கும் பொருளாதலால், அதற்கு விளக் கம் வேறு வியாபகம் வேறு என்பதில்லை. எக்காலத்து எங்கே விளங்கி நிற்குமோ, அக்காலத்து அங்கே வியாபித்த

லன்றி வேறில்லை. அன்றியும் அறிவாகாரமான பொருளைக் கூறுபடுத்தி அதன் ஓர் கூறு விளங்கியும் மற்றொரு கூறு விளங்காதும் நிற்கும் என்றலும் பொருத்தமன்று. இவ் வேதுக்களாலும் பிற ஏதுக்களாலும் உடலுக்கு வெளியே உயிர்க்கு வியாபகமில்லை யென்பதே பொருத்தமாய் முடியும். இது நிற்க,

ஓர் உயிர் அதன் உடம்பினுள்ளேயும் எவ்வாறு நிற்கும் என்பதையும் ஆராய்வாம். எந்த உடலின்கண்ணும் எக்காலத்தும் ஒன்றுபோல் அறிவு நிகழவில்லை. ஒவ்வொரு காலத்து ஒவ்வொரு இந்திரியத்திலேயே அறிவு நிகழ்கின்றது. காண்டலறிவு நிகழும்போது கேட்டலறிவு நிகழ்வதில்லை. மற்ற இந்திரியங்களில் நிகழும் அறிவும் இத்தன்மையதே. ஆதலால் உடல் முழுதும் உயிர் நிறைந்து நிற்குமென்ன இடமில்லை. அப்படியே உடலின் ஓர் குறிப்பிட்ட இடத்திலேயே எப்போதும் நிற்குமென்னவும் இடமில்லை. நிற்குமேல் அவ்வுடலின்கண் எப்போதும் ஒன்றுபோல் அறிவு நிகழவேண்டும். அதுவுமின்றாதலால், உயிர் உடலினுள் ஏகதேசப்பட்டு நிற்றலுமில்லையென முடியும். என்றால் உயிர் உடலினுள் எவ்வாறுதான் நிற்குமென்னில், கூறுவோம். உயிர் உடலினுள் ஒருகாலத்து ஒரு இந்திரியத்தோடுமாத்திரம் கூடிநிற்கும். கண்ணிந்திரியத்தோடு கூடி நிற்கும்போது காதிந்திரியத்தோடு கூடிநிற்பதில்லை: மெய் யிந்திரியத்தோடு கூடிநிற்பதுமில்லை. ஆனால் உயிர் எந்த இந்திரியத்தோடு கூடிநிற்கும்போதும் அதன்கண் ஏகதேசமாய் நிற்பதில்லை. மெய்யிந்திரியத்தோடு கூடி நிற்கும்போது அதன் ஒரு கூற்றில்மாத்திரம் நிற்பதில்லை. அவ்விந்திரியம் முழுமையினுமே வியாபித்து நிற்கும். அப்படியே எந்த

இந்திரியத்திலும் வியாபித்து நிற்கும். இதுதான் 'வசித்திட வரும் வியா'பகம் எனப்படும். இத்தகைய வியாபகமே உயிர்க்கு உண்டு. இவ்வியாபகமும் உடலுக்கு வெளியே யில்லை. தூல உடலினுள்ளே கூடியுள்ளபோது, அதனுள்ளே இத்தகைய வியாபகம் உயிர்க்குண்டு. சூக்கும உடம்போடு கூடியுள்ளபோது அதனுள்ளே இவ்வியாபகம் உயிர்க்குண்டு. மற்ற உடம்புகளோடு கூடியுள்ளபோதும் அப்படியே. ஆனால் உடம்பில்லாதபோது உயிரின் வியாபகம் எப்படி யெனில் கூறுதும். உயிர்க்கு ஆணவத்தடை அநாதியே உண்டென்றாலும் அத்தடை நீக்குதற்பொருட்டே மாயை யினின்று உடல் முதலியன அமைக்கப்பட்டுவருமென்றுஞ் சொன்னோம்§. யாதானும் உடல் உயிர்க்கு அமைக்கப்படுமுன் அவ்வுயிர்க்குச் சிறிதும் வியாபகமில்லை. அவ்வுயிர் ஆணவத் தடையினின்று முற்றும் நீங்கியபின் அவ்வுயிர்க்கு எவ்வித மாயாவுடலும் வேண்டப்படுவதில்லை. அக்காலத்து அவ் வுயிரோடு கூடியுள்ள உடல் மாயாவுடலன்று. இம்மாயா வுடலே சுட்டுப் பொருள். இதனுள்ளே வியாபித்து நிற்கும் உயிரின் வியாபகமும் ஏகதேச வியாபகமாய் முடியும். இது வன்றி இவ்வுடலோடு கூடாது யாண்டும் வியாபித்து நிற்கும் முதல்வனையே தன்னுடலாகக்கொண்டு நிற்கும் முத்தி நிலை யில் உயிர் அம்முதல்வனைப்போல் எங்கும் வியாபித்து நிற் பதேயாகும். என்றால் ஓர்காலத்துச் சிறிதும் வியாகமின்றிக் கிடந்த உயிர் மாயா உடலோடு கூடியபோது அதனுள்ளே மாத்திரம் வியாபித்து அப்பால் முத்தி நிலையில் யாண்டும் வியா பித்துநிற்குமேல், சித்துப் பொருளாகிய உயிர்க்கும குறுகுதல் பெருகுதல் உள எனப்படுமேயெனின், கூறுவோம். சித்துப்

§ சூ I. பா. II.

பொருள்களெல்லாம் ஒரே தன்மையுடையன என்பதல்ல. முதல்வன எப்போதும் எவ்வாற்றானும் சித்தே. உயிர் அவ்வாறன்று. பெத்தம் நீங்கும் வரை அசித்தோடு கூடிநிற்கும் சித்து. அசித்துஞ் சித்தன்று. அதாவது பெத்தம் நீங்கும் வரை எவ்வாற்றானுஞ் சித்தே யென்பதன்று. அசித்துச் சித்து. அப்பெத்தம் நீங்கியமுத்தி நிலையிலே தான் உயிர் சித்தேயென நிற்கும். அந்நிலையிலேதான் உயிர் எங்கும் வியாபகமாய் நிற்கும். அதுகாறும் உயிர்மாயா உடலோடு கூடி அதனுள்ளேயே 'வசித்திட வரும் வியாபி'யாய் நிற்கும். இக்கருத்துக்களையே இச்சூத்திரம் 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா' என்றோதியது||.

---

## மூன்றும் பாடம்

### உயிர் உடலின் வேறு.

உயிர் உடலினுள் தங்கிநிற்குமென்றோம்*. அவ்வுடலின் ஒவ்வோர் பாகத்திலும் உயிரின் விளக்கத்தைக் காணுகிறோம். அன்றியும் பருத்தேன், சிறுத்தேன், கரியன் என உடலினை உயிராக வழங்குவதுமுண்டு. இக்காரணங்களால் உடலையே உயிரென்னலாமா? என்பதை ஆராய்வாம். உடலெங்கும் உயிர் விளங்குவதாகினும் அதன் கண் எப்போதும் விளங்குவதில்லையென்றோம்†. உடல் பிணமானபோது அதன் ஓர் பாகத்தும் உயிர் விளங்குவதில்லை. ஆதலால் உடலே உயிரென்றல் பொருந்தாது. இனி உடலினை உயி

|| இவ்வாக்கியத்தினின்று ஸ்ரீ சிவஞான சுவாமிகள் கொண்ட சமுதாய ஆன்ம வாதமறுதலை, யோக அனுபவமுடையாரால்மட்டும் அறியற்பாலதென அச்சுவாமிகளே கூறியருளுதலின், எல்லாராலும் அறியக்கிடக்கும் சாதாரணப் பொருளே ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

* சூ. III பா. 2. † சூ. III பா. 2.

ராக வழங்குதலைப்பற்றி ஆராய்வாம். யான் பருத்தேன் யான் சிறுத்தேன் என வழங்குதல் உபசாரமே. யான் கால் யான் கை என்று வழங்குவதில்லை. என் கால் என் கை என் உடம்பு என்றே வழங்குகின்றோம். என் மனைவி யென்றபோது நான் வேறு மனைவி வேறாதல்போல என்னுடம்பு என்றபோதும் உடம்பு வேறு நான் வேறு என்பதே பெறப்படும். ஆனால் இராகுவுக்குத் தலையன்றி வேறில்லாதிருந்தாலும் இராகுவின் தலையென்று வழங்குதல்போல என்னுடம்பு என்றபோதும் நானும் உடம்பும் வேறல்ல ஒன்றேயென்று சொல்லலாகாதோ எனின், ஆகாது. இராகுவின் தலையென்றல் சிறுபான்மை வழக்கு. என்கால் என்கை என்னுடம்பு என்றல் அது போலன்று. இனி, என் மனைவி யென்றபோது நான் வேறு மனைவி வேறு எனத் தெரிந்துகொண்டு வழங்குதல்போல, என்னுடம்பு என்றபோது அவ்வாறல்லவே எனின், அன்று. நான் வேறு மனைவி வேறு என்பதையும் சிறிது ஆராய்ச்சி செய்தே தெரிகிறோம். தான் வேறு உடம்பு வேறெனத் தெரிவதும் அவ்வாறே. இவ்வழக்கினாலும் உடம்பினின்றும் உயிர் வேறென்பதே பெறப்படும். இக்கருத்தையே இச் சூத்திரம் 'எனதுடலென்றலின் ஆன்மா (வேறு) உளது' என இயைபுற உணர்த்தும்.

---

## நான்காம் பாடம்

### உயிர் ஐம்பொறிகளின் வேறு.

உடல் அறியமாட்டாதென்றும், உடல் வேறு உயிர்வேறென்றே வழங்குவோமென்றும் ஆதலால் உடல்வேறு உயிர் வேறு என்றும் சொன்னோம்*. ஆனால் உடலின் கண்ணுள்ள

* சூ. III. பா. 3.

ஐப்பொறிகளாகிய மெய் வாய் கண் மூக்குச் செவி அவ்வா றல்ல. இவைகள் ஞானேந்திரியங்கள் எனப்படும்: இவை கள் அறியும்: கண் காணும்: காது கேட்கும்: மற்றவைகளும் அப்படியே: இவைகளை என் பொறி என வழங்குதலுமில்லை. இவைகள் உயிர் என்றால் என்னை? என்பதை ஆராய்வாம். என் பொறி எனப் பொதுவாய் வழங்காவிடினும் என் கண் என் செவி எனப் பிரித்து வழங்குதலுமுண்டு. ஆதலால் வழக்கின்மைபற்றி இப்பொறிகள் உயிராகும் என்பதில்லை. இப்பொறிகள் அறியுமா? என்பதே கவனிக்கவேண்டியது. ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு விஷயத்தையே அறியும்: கண் அறிவதைக் காதறிவதில்லை. மற்றப் பொறிகளும் அப் படியே. ஆதலால் இவ்வைம்பொறிகளையும் ஒரே உயிரென்ன மார்க்கமில்லை. இவ்வைம்பொறிகளும் ஐந்து வேறு உயிர்க ளாய் உடலில் தங்கி நின்றறியுமென்றலும் பொருந்தாது. அவ்வாறறியில், காண்டலறிவு கேட்டலறிவு முதலியன கண் காது முதலியவற்றில் தனித்தனி நிகழ்வதை நம்மனுபவத் தில் அறிவதுபோல, யான் கண்டேன் யான் கேட்டேனென் னும் அறிவும் அக்கண் காது முதலியவற்றில் தனித்தனி நிகழ்வதை நம்மனுபவத்தில் அறிதல் வேண்டும். அவ்வா றன்றி யான் கண்டேன் முதலிய அறிவு, இவற்றின் வேறாகிய ஒன்றன்பாலே நிகழ்வதை நம் அனுபவத்தில் அறிவோம். ஆதலால் இப்பொருள்களைக் கொண்டறிவது இவற்றின் வேறான ஒன்றே என முடியும். இதுவே உயிர். இக்கருத் தினையே இச்சூத்திரம் 'ஐம்புலன் அறிதலின் ஆன்மா (வேறு) உளது' என்று இயைபுற உணர்த்தும். ஈண்டு ஐம்புலனென் பது ஐம்பொறிகளால் அறியப்படும் விஷயங்களை உணர்த்தி யது.

## ஐந்தாம் பாடம்

### உயிர் சூக்கும உடம்பின் வேறு.

ஐம்பொறிகள் உயிரல்ல என்றும் அவைகளைக் கொண்டறிவதாகிய வேறொன்றே உயிர் என்றும் சொன்னோம்*. இனி இவ்வைம்பொறிகளும் தொழிற்படாத இடத்து அறிவு நிகழுமா? என்பதைக் கவனிப்போம். நனவில் மாத்திரம் இவ்வைம்பொறிகள் தொழிற்படுமென்பதை அறிவோம். ஆனால் எப்போதும் நாம் நனவிலிருப்பதில்லை. சிலகாலம் கனவிலுமிருப்போம். அக்கனவில் இப்பொறிகள் தொழிற்படவில்லை. என்றாலும் சில உருவங்களைப் பார்ப்பதுபோலவும் சில சத்தங்களைக் கேட்பதுபோலவும் சில விஷயங்களை நுகர்வதுபோலவும் கனவு காண்பதுண்டு. இக்கனவிற் காணும் விஷயங்கள் அக்கனவிலேயே எதிர்ப்படும் விஷயங்களா? அன்றி விழித்திருந்தபோது விஷயிக்கப்பட்ட விஷயங்களா? என்பது வருஞ்சூத்திரத்தில் விளக்கப்படும். எது எவ்வாறாயினும் கனவில் ஒருவித அறிவு நிகழ்ச்சியுண்டு என்பதில் சந்தேகமில்லை. இவ்வறிவு நிகழ்வது எதன்கண்? அதன்கண் அறிவது யாது? என்பனவே ஈண்டு ஆராய வேண்டுவன. கனவிற் கன்மேந்திரிய ஞானேந்திரியங்கள் ஒடுங்கினும், அவற்றின் காரண பூதமாகிய அகங்காரமும் உடன் ஒடுங்கவில்லை. அப்படியே இத்தேகத்திலுள்ள பஞ்சபூதங்கள் தொழிற்படவில்லையென்றாலும் அவற்றின் காரண பூதங்களாகிய தன் மாத்திரைகளும் தொழிற்படா என்பதின்று. இத்தன்மாத்திரைகள் 5, அகங்காரம் 1, அதனோடு சம்பந்தமுள்ள மனம், புத்தி 2 ஆக 8 கருவிகளும் கனவிலும் ஒடுங்காது நின்று தொழிற்படுகின்றன. இவ்வெட்டு கருவிகளா

* சூ. III. பா. 4.

லாகிய உடம்பே சூக்கும உடம்பெனப்படும். இச்சூக்கும உடம்பின் கண்ணேயே கனவில் அறிவு நிகழுகின்றது. இனி அவ்வுடம்பின்கண் நின்றறிவது எது? என்பதை ஆராய்வாம்.

கனவில் அறிவு நிகழ்வதன்றி அக்கனவில் நிகழ்ந்த வற்றை நனவிலும் அறிகிறோம். ஆனால் கனவிற் கண்டபடி நனவில் அறியவில்லை. கனவினின்றெழுந்த ஒருவன் அக் கனவிற் கண்ட விஷயங்களைப் பாதி அறிந்தும் பாதி அறியா தும் நிற்பதுண்டு. ஒரோ வேளை சிறிதும் அறியாது மயங்கிப் பின் தெளிவதும் உண்டு. கனவில் அறிந்தது எதுவோ அதுவே நனவில் இவ்வாறு மயங்கி அறிகின்றது. என்றால் இக்கனவு நனவுகளில் இவ்வாறறிவது அக்கனவின்கண் உள்ள சூக்கும உடம்பேயா? அன்றி வேறா? அச்சூக்கும உடம்பே எனில், அது கனவு நனவுகளில் ஒரே தன்மைத்தாயுள்ளது. இவ்விரண்டு நிலைகளிலும் ஒரேவித இந்திரியங்களோடு கூடி யுள்ளது. ஒரேவித விஷயங்களே அதற்கு எதிர்ப்பட்டுள்ளன. அதாவது அதற்குக் கனவிற்போலவே நனவிலும் அகத்துச் சேறலும் புறத்துச் சேறலும் உள. ஆகலால் அது கனவிற் கண்டவற்றை நனவில் மயங்கி அறிய வேறோர் ஏதுவுமில்லை. இதுவன்றி அச்சூக்கும உடம்புக்கு உயிர் வேறெனில், அவ் வுயிர் கனவில் சூக்கும இந்திரியங்களாகிய மேலே சொல்லிய எட்டுக் கருவிகளோடும் கூடிச் சூக்கும விஷயங்களைப்பற்றும்: நனவில் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய தூல இந்திரியங்களோடுகூடித் தூல விஷயங்களைப்பற்றும். இவ் விதமாக உயிர்க்குக் கனவு நனவு நிலைகளில் அகத்துச் சேறல் புறத்துச் சேறல் வெவ்வேறாய் முடியும்: எனவே இவ்வுயிர் கனவிற் கண்டவற்றை நனவில் மயங்கியறிய ஏதுக்கள் உள. ஆதலால் உயிர் சூக்கும உடம்பின் வேறென்றே முடியும்.

இம்முடிபையே இச்சூத்திரம் 'ஒடுக்கம் அறிதலின் ஆன்மா (வேறு) உளது' என உணர்த்தும். ஈண்டு ஒடுக்கம் என்பதற்கு ஒடுக்கத்தில் நிகழ்ந்தவை என்பது பொருள். மயங்கி என்பதை வருவித்துப் பொருள் கொள்ளல் வேண்டும்.

---

## ஆறும் பாடம்

### உயிர் பிராண வாயுவின் வேறு.

இதுகாறும் விழிப்பு நிலையில் தொழிற்படும் தூலவுடம்பு ஐம்பொறிகள் உயிரல்ல என்றும், சொப்பன நிலையில் தொழிற்படும் சூக்கும உடம்பும் உயிரன்று என்றும் சொன்னோம்*. இவ்விரு நிலைகளிலுமன்றி நித்திரையிலும் பிராணவாயு தொழிற்படுகின்றது. நித்திரையிலும்நாம் சுவாசிக்கிறோம். இச்சுவாசம் பிராணவாயுவின் இயக்கமே. இப்பிராண வாயு உயிராமா? என்பதை ஆராய்வாம். இப்பிராண வாயு நனவு கனவு முதலிய எல்லா நிலைகளிலும் இயங்குவது மாத்திரமன்றிச் சடமாயுமியங்கும். இவ்வாறியங்கும் பிராண வாயுவே உயிரெனில், நனவிற்போலவே நித்திரையிலும் இன்ப துன்ப நுகர்ச்சியும் உடம்பு அசைதலுமிருத்தல்வேண்டும். நித்திரையில் அவ்விரண்டுமில்லையென்பது நம்முடைய அனுபவம். ஆனால் நித்திரையினின்று எழுந்த ஒருவன் சுகமாகத் துயின்றேனென்பதால் நித்திரையிலும் சுகமுண்டென்பது பெறப்படாதோ எனின், பெறப்படாது. ஒருவன் தன் நித்திரையைச் சுக நித்திரை யென்றல் நித்திரையின் பின்னர் அனுபவிக்கும் சுகத்தைக்கொண்டு அனுமானிப்பதன்றி வேறில்லை. எனவே நித்திரையில் இன்ப துன்ப

* சூ. III பா. 3, 5.

நுகர்ச்சியில்லையென்பது நிச்சயம். ஆதலால் பிராண வாயுவே உயிரெனல் பொருந்தாது.

ஆனால் இப்பிராணவாயுவே நித்திரையில் மற்றெல்லாக் கருவிகளையும் ஒடுக்கி, இன்ப துன்ப நுகர்ச்சியையும் உடம்பு சேட்டித்தலையும் இலதாக்குதலோடு, நனவில் அக்கருவிகளை ஒடுக்காது, அவ்விரண்டையும் உளதாக்குமெனில், அன்று. பிராணவாயு நனவிலும் நித்திரையிலும் ஒப்ப இயங்குமென்றோம். இப்பிராணவாயுவுக்கு இவ்வியக்கமன்றி வேறு தொழிற்பாடுமில்லை. எனவே நனவிற்போலவே நித்திரையிலும் ஒப்ப இயங்கும் இப்பிராணவாயு நித்திரையில் மாத்திரம் கருவிகளை ஒடுக்குமென்று சொல்ல இடமில்லை. இதுவன்றி வேறொன்றே நித்திரையில் மற்றெல்லாக் கருவிகளையும் ஒடுக்கியும் இப்பிராணவாயு ஒன்றை ஒடுக்காதுமிருக்கும். இவ்வாறு ஒடுக்கியவிடத்து இன்ப துன்ப நுகர்ச்சியும் உடம்பு சேட்டித்தலுமில்லை. ஆதலால் உயிர் பிராணவாயுவுக்கு வேறென்றே முடியும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா (வேறு) உளது' என இயைபுற உணர்த்தும். ஈண்டு 'உண்டி' இன்பதுன்ப நுகர்ச்சியையும் 'வினை' உடம்பு அசைதலையும் உணர்த்தும்.

---

## ஏழாம் பாடம்

### உயிர் முதல்வனின் வேறு.

உயிர் உடலில் தங்கி நிற்குமென்றோம். தூல உடலிலும் தங்கி நிற்குமென்றோம். சூக்கும உடலிலும் தங்கி நிற்குமென்றோம்*. என்றாலும் இவ்விருவகையுடல்களும்

* சூ. III. பா. 2.

உயிராகா என்றோம். இனி எங்கும் வியாபகமாய் நிற்கும் அறிவுப்பொருளாகிய முதல்வன் உடலின்கண்ணும் தங்கி நிற்பனாதலால் இம்முதல்வனையே உயிரென்னலாமா? என்பதை ஆராய்வாம். உயிர் முதல்வன் இவ்விரண்டும் அறிவுப் பொருள்களாயினும், இவ்விரண்டறிவுகளும் ஒரே தன்மையுடையனவல்ல. உயிரின் அறிவு கருவி கரணாதிகளோடு கூடியவழி விளங்கியும் கூடாதவழி மழுங்கியும் நிற்குமென்றோம். முதல்வனறிவோ அவ்வாறன்று. அது எக்காலத்தும் ஒன்றுபோல் விளங்கும் அறிவு. இதுவுமன்றி உயிர் அறியும் பொருட்டு முதல்வன் அவ்வுயிர்க்குக் கருவி கரணாதிகளைக் கூட்டுவிப்பனென்றும் அவ்வுயிரோடு அத்துவிதமாய் நிற்பனென்றும் சொன்னோம். அதாவது உயிர்க்கு உணர்த்துபவன் முதல்வனே என முடியும். இம்முதல்வன் உணர்த்தினன்றி உயிர் உணருமாறின்று. முதல்வனறிவுக்கோ உணர்த்துவாரில்லை. அவனது அறிவு உணர்த்தாது உணரும் அறிவு. உயிரினறிவு உணர்த்தினால் மாத்திரம் உணரும் அறிவு. இவ்விருதிற அறிவுகட்கு வேறு பேதங்களும் உள. அவை வருஞ் சூத்திரங்களில் விளக்கப்படும். இவ்வறிவுகள் இவ்வாறு பேதப்பட்டனவாக, முதல்வனே உயிரெனல் பொருந்தாது. உயிர் முதல்வனுக்கு வேறாதல்வேண்டும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'உணர்த்த உணர்தலின் ஆன்மா (வேறு) உளது' என இயைபுற உணர்த்தும்.

மூன்றாம் சூத்திரம் முற்றிற்று

## நான்காம் சூத்திரம்

**அந்தக்கரணம் அவற்றினொன்றன்று, அவை**
**சந்தித்ததான்மா, சகச மலத்துணராது**
**அமைச்சர சேய்ப்ப நின்று, அஞ்சவத்தைத்தே.**

---

### முதற்பாடம்

உயிர் அந்தக்கரணங்களின் வேறு

தூல உடம்பு உயிராகாதென்றோம்*. அதன்கண் அறிவு நிகழ்ச்சிக்குக் காரணமாகிய ஐம்பொறிகளுமே உயிராகாவென்றோம்†. இத்தூல உடப்புக்குக் காரணமாகிய சூக்குமஉடம்பும் உயிராகாதென்றோம்‡. இவ்வுடம்பின்கண் அறிவு நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பன மனம், புத்தி, அகங்காரம் என்பன. இவை ஐம்பொறிகளால் விஷயித்துத் தரப்படும் புறத்து விஷயங்களை யாதானும் ஓர்விதத்தில் அறிகின்றன. அகங்காரம் இவற்றை இன்னதெனத் தெளிவேன் யான் எனத் தெளிவு பிறவாது ஒருப்பட்டெழுந்து அறிகின்றது. மனம் சங்கற்பம் விகற்பஞ் செய்தறிகின்றது. புத்தி அவற்றை இன்னதென நிச்சயித்தறிகின்றது. இவையன்றி அவற்றைச் சிந்தித்தறிவதாகிய சித்தம் ஒன்றுண்டு என்பாருமுளர். இந்நான்கு கருவிகளும் அந்தக்கரணங்களெனப்படும். புறத்து விஷயங்களை அறிதற்குதவுங்கருவிகள் புறக்கரணங்களென்று வழங்கப்படுதல்போல, அவ்விஷயங்களை அகத்தில் வைத்து அறிதற்குதவும் கரணங்களாகிய இந்நான்கும் அந்தக் கரணங்களெனப்பட்டன. இவ்வந்தக் கரணங்களோடு

* சூ. III. பா. 3. † சூ. III. பா. 4. ‡ சூ. III. பா. 5.

மாத்திரங்கூடி நிற்கும் கனவிலும், இவைகள் அறிந்து உதவுகின்றன. அக்கனவில் புதிதாகப் புறத்து விஷயங்களையறியவில்லையென்றாலும் முன் விஷயிக்கப்பட்ட புறத்து விஷயங்களை மீளவும் அறிவதிற்றடையில்லை. எது எவ்வாறாயினும், இவ்வந்தகரணங்களினால் ஒவ்வோர்வித அறிவு உண்டாவதையறிகிறோம். இதுபற்றி, இவற்றையே உயிர் என்னலாமா என்பதை ஆராய்வாம். ஐம்பொறிகள்போல, இவை வெவ்வேறு விதமாயறிதலால் ஒரே உயிர் ஆகமாட்டா. தனித்தனி வெவ்வேறு உயிரும் ஆகா. இவற்றின் கீழ்ப்பட்ட கருவிகளை நோக்க இவையே யறியுமென்று சொல்ல இடமிருப்பினும் தம்மை நோக்கவும் இவையேயறியுமென்ன இடமில்லை. ஐம்பொறிகளிலெதுவும், தான் இத்தொழிற்பாட்டையுடையேன் என்றறியாததலால் உயிர் ஆகாதென்றோம்§. அதுபோலவே இப்புற அந்தக்கரணங்களுள்ளும், சித்தம் சிந்தித்தறிவதாயினும் யான் சிந்தித்தேன் என்றறியமாட்டாது. மனம், யான் சங்கற்பம் விகற்பஞ்செய்தேன் என்றறியாது. அகங்காரம் யான் ஒருப்பட்டெழுந்தேன் என்றறியாது. புத்தி யான் நிச்சயித்தேன் என்றறியாது. யான் சிந்தித்தேன், யான் சங்கற்பவிகற்பஞ்செய்தேன், யான் ஒருப்பட்டெழுந்தறிந்தேன், யான் நிச்சயித்தேன் என்னுமறிவு இவ்வந்தக்கரணங்களினன்றி வேறொன்றன்பாலேயே நிகழ்கின்றது. ஆதலால், ஐம்பொறிகள் போலவே இவற்றிலெதுவும் உயிராகமாட்டாது. உயிர் இவற்றின் வேறாய் நின்றே இவற்றைக்கொண்டறியும். இக்கருத்தையே யிச்சூத்திரம் 'அந்தக்கரணம் அவற்றினொன்றன்று' என்றுணர்த்தும். அந்தக்கரணங்களாகிய மனம் முதலியவற்றில் ஆன்மா ஒன்றன்று என்பது கருத்து.

§ சூ. III. பா. 4.

## இரண்டாம் பாடம்

### உயிரின் அறிவை மறைப்பது ஆணவமலம்.

உயிர் அந்தக்கரணங்களைக் கொண்டறியுமென்றோம்*. உயிரே அறியும்பொருளென்றுஞ் சொன்னோம்†. எனில் உயிர்க்கு அந்தக்கரணங்களின் உதவி ஏன் வேண்டும்? என்பதை யாராய்வாம். ஒருவனுக்குக் கண்ணிருந்தும் அக்கண்ணை நோய் மறைப்பதனால், அவனாற் காண ஏலாது. நோயில்லாதபோது அதிதூரத்திலுள்ள பொருளையுங் காணுஞ் சக்தியினையுடைய அக்கண்ணானது நோயினால் அதிசமீபத்திலுள்ள பொருளையுங் காண ஏலாதுபோவதையும் அறிவோம். அப்படியே நோயில்லாதபோது அதி நுணுக்கமான பொருளையுங் காணுஞ் சக்தியினையுடைய அக்கண்ணானது, நோயினால் மிகப் பெரும்பொருளையும் காண ஏலாது போவதையுமறிவோம். உயிர் அறிவின் மறைப்பும் இத்தன்மைத்தே. அதனறிவு, விரிந்தும் நுணுகியும் அறியுமியல்பினையுடையது. வியாபகமும் சூக்குமமுமானது. என்றாலும் அவ்வறிவின்கண், அதனை மறைத்து நிற்பதோர் தடையிருப்பதால், அவ்வறிவு யாதோர் பொருளையும் அறியாது கிடந்தது. மிகத்தூலப்பொருளையும் அறிவதில்லை. தன்னையடுத்து நிற்பதோர் பொருளையுமறிவதில்லை. இத்தடை இவ்வாறு வியாபக அறிவைக் குறுக்கி அதனையணுத்தன்மையடையச்செய்வதால் ஆணவமெனப்படுமென்றோம்‡. இவ்வாணவமல நீக்கத்தின் பொருட்டே உலகம் முதல்வனால் தொழிற்படுத்தப்படுமென்றுஞ் சொன்னோம்§. இது உயிரினையிடையிற் சேர்வதன்று. இடையிற் சேரயாதுங் காரண

* சூ. IV. பா. 1. † சூ. III. பா. 1. ‡ § சூ. I. பா. 11.

மில்லே. இடையிற் சேருமலம், சேருமுன்னர்த் தடுக்கப்படு மன்றிச் சேர்ந்தபின்னர் நீக்கப்படுவது பொருத்தமன்று. எனவே இவ்வாணவம் உயிரினை அநாதியே மறைத்திருத்தல் வேண்டும். இதுபற்றியே இம்மலம் 'சகசமலம்' எனப்படும். இதுவே உயிரின் அறியாமைக்குக் காரணம். இக்கருத்தையே இச்சூத்திரம் 'சகசமலத்துணராது' என்றுணர்த்தும்.

## மூன்றும் பாடம்

உயிர் அந்தக்கரணங்களோடு கூடியறியும்.

உயிரின் வியாபக அறிவு ஆணவமலத்தால் மறைப்புண்டு ஒரு சிறிதும் அறியாதுகிடக்குமென்றோம்*. இவ்வுயிர் எவ்வாறு அறியும் என்பதை யாராய்வாம். கண்ணிலுள்ள நோய் தீரும் வரை அவ்வுயிர் கண்ணாடியினுதவியை வேண்டிநிற்பதை யறிவோம். அவ்வுதவிபெற்றபோதும், நோய் நீங்கிய கண்ணோடொப்பக் காண்டற் சக்தியைப் பெறுதலில்லை. என்றாலும், அக்கண்ணாடியினுதவியாற் சமீபத்திலுள்ள பருப் பொருளை அக்கண் காணும். மலத்தால் மறைப்புண்ட உயிரும் இத்தன்மைத்தே. இம்மலநோய் தீரும் வரை, உயிர் அந்தக் கரணங்களின் உதவியை வேண்டிநிற்கும். இவ்வுதவியிருப்பினும், மலம் நீங்கிய உயிரை யொப்ப வியாபித்தறிய முடியாது. என்றாலும் இவ்வுதவியால், மலமறைப்புள்ள உயிர் தன்னை யடுத்துள்ளதும தூலமுமான பொருளையறியும். ஆகவே மலமறைப்பால் தன் வியாபக அறிவு முழுதும் சுருங்கப்பெற்ற வுயிர், இவ்வந்தக்கரணங்களோடுகூடிய வழி, அம்மறைப்பு நீங்கும்வரை வியாபகமாயறியவில்லையென்றாலும் ஒரு சிறிது அறியுந்தன்மை பெறும் எனமுடியும். இம்

*. சூ. I. பா. 11.

முடியையே இச்சூத்திரம் 'சகசமலத்துணராது ஆன்மா, அவை சந்தித்தது' என இயைபுற உணர்த்தும். ஈண்டு 'அவை' என்றது அந்தக்கரணங்களை.

---

## நான்காம் பாடம்

### உயிர்க்கு அடுத்துநின்று தவுவன அந்தக்கரணங்களே.

அந்தக்கரணங்கள் உயிர்க்கு உதவுமென்றோம்*. ஐம்பொறிகளுமுதவுமென்றோம்†. இவற்றுள் எவைகள் எவ்வாறுதவுமென்பதை யாராய்வாம். இவ்விருதிறத்துக் கருவிகளும் உயிர்க்கு அவசியம் வேண்டற்பாலன. கண்கெட்டவழி, அந்தக்கரணங்களிருப்பினும் உயிர் உருவத்தையறியுமாறில்லை. காது கெட்டவழி சத்தத்தையறிவதுமில்லை. அப்படியே எந்தப் பொறிகள் கெடினும், அந்தந்தப் பொறியாலறியப்படும் விஷயத்தை உயிர் அறிவதில்லை. இனி அந்தக்கரணங்களின்றி உயிர் அறியுமா? என்டதையும் கவனிப்பாம். அந்தக்கரணங்கள், முன் அனுபவித்ததொன்றைப்பற்றி நிற்கும்போது, உயிர், கண்ணுக்கு எதிர்ப்படும் பொருளைக் காணுதிருத்தலும், காதுக்கு எதிர்ப்படும் பொருளைக் கேளாதிருத்தலும், மற்றப்பொறிகளுக்கு எதிர்ப்படும் பொருளையறியாதிருத்தலும் நம்முடைய அனுபவம். ஆகவே, இவ்விருதிறத்துக் கருவிகளும் உயிர்க்கு அவசியமறிவேண்டுமென்று தெரிகிறோம். இவைகள் தனித்தனி எவ்வாறுதவும் என்பதை யாராய்வாம். ஐம்பொறிகள் உயிர்க்கு நேரில் உதவவில்லை. கண்கண்ட உருவத்தைச் சித்தம் சிந்தித்தும், மனம் சங்கற்பவிகற்பஞ்செய்தும், அகங்காரம் இன்னதெனத் தெளிவேன் என ஒருப்பட்டெழுந்தும், புத்தி நிச்சயித்தும் உயிர்க்

* சூ. IV பா. 3. † சூ. III பா. 4.

குதவ உயிர் அவ்வுருவத்தைப் அறியும். அப்படியே ஏனைப் பொறிகளாலறியப்படும் விஷயங்களையும், அந்தக்கரணங்கள் மேற்கூறியபடி அறிந்துதவவே உயிர் அறியும். இவைபோல உயிர்க்குதவ வேறொன்றில்லை. இவைகளே உயிர்க்கு அடுத்துநின்றுதவுவன. இதுபற்றியே இவைகள் உட்கருவிகளென்றும்; ஐம்பொறிகள் புறக்கருவிகள் என்றுஞ்சொல்லப்படும். ஐம்பொறிகள் அறியும் விஷயங்களை உயிர் நேரிலறியாது, அந்தக்கரணங்கள் மூலமாயறியுமென்று தெரிகிறோம். இக்காரணத்தால் ஐம்பொறிகளை ஓர் அரசனுடைய பரிசனங்கட்கும் அந்தக்கரணங்களை அவனது அமைச்சர்க்கும் உயிரை அரசனுக்கும் ஒப்பிடலாம். தேசத்து விஷயங்களைப் பரிசனங்கள் அரசனுக்கு அவனது அமைச்சர் மூலமாய்த் தெரிவிப்பது போல ஐம்பொறிகள் அந்தக்கரணங்கள் மூலமாய் உயிர்க்கு அறிவிக்கும். இக்கருத்தையே யிச்சூத்திரம் 'அவை அமைச்சரசேய்ப்ப நின்று' என்றுணர்த்தும்.

---

## ஐந்தாம் பாடம்

### உயிர் ஐந்துவிதமாயறியும்.

உயிர், அந்தக்கரணமுதலிய கருவிகளோடு கூடியறியுமென்றோம்*. இவ்வாறு அறிவது ஒரேவிதமா? அன்றிப் பலவிதமா? என்பதையாராய்வாம். கருவிகள் உயிர்க்குக் கண்ணாடிபோலுதவுமென்றோம்†. கண்ணாடியின் தன்மைக்கேற்பக் காணுந்தன்மை வேறுபடுவதுபோல, உயிரோடுகூடி நிற்கும் கருவிக்கூட்டங்களின் தன்மைக்கேற்ப, அதனறிதலும் வேறுபடும். இக்கருவிக் கூட்டங்கள் எக்காலத்தும் ஒன்றுபோற்றொழிற்படுதலில்லை. கூடியுங் குறைந்துமே தொழிற்படும். இக்கருவிகளைத் தத்துவம், தாத்துவிகம்

* † சூ. IV பா. 3.

என இருவகைப்படுத்தலாம். இவற்றுள் தத்துவங்கள், இவ்வுலகப் பொருள்களின் காரண பூதங்களாம். இத்தத்துவங்களின் காரியங்களே தாத்துவிகங்களாம். இத்தத்துவங்கள் 36. தாத்துவிகங்கள் 60 ஆகக் கருவிகள் 96 ஆம்‡. இத்தொண்ணூற்றாறு கருவிகளிற் சிலவே உயிரின் அறிவு வேறுபாட்டிற்குக் காரணமாய் நிற்கும். அவற்றுள் ஈண்டு நாம் ஆராய்வது சிறப்பறிவின் வேறுபாட்டிற்குக் காரணமாகிய கருவிகளையே. கலையாதி வித்தியா தத்துவங்கள் ஆறும் உயிர்க்குப் பொது அறிவையுண்டாக்குவன. பொது அறிவாவது இது சுகம் இது துக்கம் என்னும் அறிவு. அக்கலையாதிகட்கு மேலாயுள்ள சிவ தத்துவங்கள் ஐந்தும் உயிரை அப்பொது அறிவின்கண் தூண்டுவன அன்றிவேறில்லை. அதனால் இப்பதினொரு தத்துவங்களின் தொழிற்பாட்டை ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளவில்லை. எஞ்சிய தத்துவங்களின் தொழிற்பாட்டை ஆராய்வாம். அத்தத்துவங்கள் இருபத்தைந்தில் பூதங்கள் ஐந்தும் தொழிற்படும்போது தாத்துவிகங்களாய் விரியும். தன்மாத்திரைகள் ஐந்தும், அப்பூதங்களோடு உடனாய் அவற்றிற்கு வலியாய் மாத்திரம் நிற்கும். எனவே, உயிரறிவின் வேறுபாட்டிற்குக் காரணமாயுள்ள தத்துவங்கள் பதினைந்தேயாம். அவைகள் கன்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள் பத்து, அந்தக்கரணங்கள் நான்கு, புருஷதத்துவம் ஒன்று ஆகப் பதினைந்தாம். இவற்றுள் புருஷ தத்துவம் கலையாதி தத்துவங்களின் தொகுதியே. இத்தொகுதியில், கலையாதிகள் கூடுதல் குறைதலினால் இப்புருஷ தத்துவமும் தொழிற்படு தத்துவமாம். இனித் தாத்துவிகங்கள் அறுபதில் அறிவு வேறுபாட்டிற்குக் காரணமாவன, மேற்கூறிய இந்திரியங்கள் பத்திற்கு விஷயமாகும் சத்தாதி வசனாதி பத்தும் பிராணாதி

வாயுக்கள் பத்துமே. இவ்வாயுக்கள் மேற்கூறிய சத்தாதி வசனாதிகளை உயிர்க்கு விஷயமாம்படி செய்வன. உயிர்க்கு சிறப்பறிவை விளக்கி அதனை வேறுபடுத்துதற்கான கருவிகள் மேற்கூறிய பதினைந்து தத்துவங்களும், இருபது தாத்துவிகங்களும் ஆகிய முப்பத்தைந்துமே.

இம்முப்பத்தைந்து கருவிகளும் நாம் விழித்திருக்கும் போது தொழிற்படும். உயிரின் இவ்விழிப்பு நிலையே ஜாக்கிராவத்தை யெனப்படும். நிலையெனினும் அவத்தையெனினும் ஒன்றே. ஆனால் நாம் எப்போதும் விழித்திருக்கவில்லை. சலிப்புண்டாகிச் சிலகாலம் நித்திரை செய்வோம். அந்நித்திரையிற் சிலகாலம் சொப்பனமும் காண்போம். இச்சொப்பனத்தோடு கூடிய அவத்தையே சொப்பனாவத்தையெனப்படும். இவ்வவத்தையில் நம்முடைய புறவிந்திரியங்களிலெதுவும் தொழிற்படாது. கண்காணாது, காது கேளாது, மற்றப்பொறிகளும் தொழிற்படா. நம்முடைய கால் கை முதலிய கன்மேந்திரியங்களும் தொழிற்படா. என்றாலும், இவ்விந்திரியங்கட்கு விஷயமாகும் சத்தாதி வசனாதிகள் பத்துந் தொழிற்படாவென்று சொல்லஇடமில்லை. நம்முடைய சொப்பனத்தில் இவ்விந்திரியங்கள் தொழிற்படாவிடினும் அவற்றின் காரண தத்துவமாகிய அகங்காரம் சூக்கும தேகமாகிய சொப்பன உடம்பினின்று தொழிற்படும். அவ்வுடம்பில் இவ்விருநிறத்து இந்திரியங்களுமே சூக்குமமாயிருக்கும். இவை தூல இந்திரியங்களைப்போல தூலப்பொருள்களை விஷயியாவென்றாலும் அத்தூல இந்திரியங்கட்கு மேற்கூறிய ஜாக்கிராவத்தையில் எதிர்ப்பட்டு அவ்விந்திரியங்களின் வழியாய்ச் சென்று, சூக்கும உடம்பில் தங்கிக்கிடக்கும் சத்தாதி வசனாதி தாத்துவிகங்களையும் விஷயியாவென்பதில்லை. அதனா

லேயே நம்முடைய சொப்பனத்தில் ஏதோ சிலவற்றைப் பார்க்கிறோம், சிலவற்றைக் கேட்கிறோம், அப்படியே ஒவ்வொரு இந்திரியத்தாலறியப்படுவதையும் வேறோர் விதத்தாலறிகிறோம். அப்படியறிவதைப் பொய்யெனவும் இடமில்லை. இவ்வறிதலின் பலனை ஓரோவேளை நகைத்தல் அழுதல் முதலிய குறிகளால் உடம்பில் நிகழவும் காணுகிறோம். ஆதலால் சொப்பனவத்தையி லறிவதைப் பொய்யென இடமில்லை. எனவே இவ்வாறறிதற்கு வேண்டிய அந்தக்கரணங்கள் நான்கு, புருஷதத்துவம் ஒன்று, சத்தாதி வசனாதிகள் பத்து, பிராணாதி வாயுக்கள் பத்து ஆக இருபத்தைந்தும் சொப்பனவத்தையிற் றொழிற்படுகருவிகளாம். இனிச் சொப்பனத்தோடு கூடாத நித்திரையைக் கவனிப்பாம்.

இந்நித்திரையில் எந்த விஷயத்தையும் நாம் அறியவில்லை. சத்தாதி வசனாதிகளில் எதுவும் நம்மறிவிற்கு விஷயமாகவில்லை. புத்தி நிச்சயிக்கவில்லை. அகங்காரம் இவ்வாறு தெளிவேன் என்று ஒருப்பட்டு எழவுமில்லை. மனம் சங்கற்ப விகற்பஞ் செய்யவுமில்லை. பிராணாதி பத்து வாயுக்களில் பிராணவாயு ஒன்று சலித்துக்கொண்டிருக்கின்றது. இப்பிராணவாயுவோடும் புருஷதத்துவத்தோடும் சித்தம் ஒன்றே தொழிற்படும். நாம் ஓர் காரியத்தைச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது பலகாலம் நித்திரை போவதும், அந் நித்திரையினின்று எழுந்ததும், அச்சிந்தனை முற்றியதாய் உணர்வதும் ஓரோவேளை நமக்கு அனுபவம். இந்நித்திரையைச் சாதாரண நித்திரையென்னலாம். இதில் சித்தம், புருஷன், பிராணவாயு ஆகிய மூன்று தத்துவங்கள் மட்டுமே தொழிற்படுகின்றன. இது சுழுத்தியவத்தையெனப்படும்.

இந்நித்திரையிலும் சில பேதங்கள் தெரிகிறோம். ஓர் நித்திரையை அயர்ந்த நித்திரை யென்போம். மற்றொன்றைக் கடுநித்திரை யென்போம். இவற்றை முறையே துரிய அவத்தை, துரியாதீத அவத்தை யென்னலாம். இவற்றுள் துரிய அவத்தையில் சித்தமுஞ் சிந்தியாது. ஆனால் பிராணவாயு சலித்துக்கொண்டிருக்கும். இவ்வவத்தையில் தொழிற்படுங் கருவிகள் புருஷன், பிராணவாயு இரண்டுமே. துரியாதீத அவத்தையிலோ, பிராணவாயு சலித்தலும் நின்று விடும். புருஷதத்துவ மொன்றுமே தொழிற்பட்டுப் பொது அறிவை விளக்கிக்கொண்டு நிற்கும். இவ்வாறாக இவ்வைந் தவத்தையிலும் கருவிகள் கூடுதல் குறைதலினால் உயிரின் கண்ணுள்ள அறிவின் விளக்கமும் கூடியுங்குறைந்தும் ஐந்து விதப்பட்டு நிற்கும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'ஆன்மா அந்தக் கரணம் சந்தித்தது அஞ்சவத்தைத்தே' என்று இயை புற உணர்த்தும்.

நான்காம் சூத்திரம் முற்றிற்று

## ஐந்தாம் சூத்திரம்

**விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு**
**அளந்தறிந்து, அறியா, ஆங்கவைபோலத்**
**தாந்தம் உணர்வின்றமியருள்,**
**காந்தங்கண்ட பசாசத்தவையே.**

---

### முதற்பாடம்

உயிராலதிஷ்டிக்கப்பட்ட கருவிகளே விஷயங்களை அளந்து அறியும்.

கருவிகள் ஜடம்; அவைகட்கு அறியும் சக்தி இல்லையென்றோம்*. அமைச்சர் அரசர்க்குத் தேசத்து விஷயங்களைத் தெரிந்து உதவுவதுபோல, இக்கருவிகள் உயிர்க்குப் புறத்து விஷயங்களை அறிந்துதவுமென்றுஞ் சொன்னோம்†. அறியும் சக்தியில்லாத கருவிகள் உயிர்க்கறியும்படி உதவுதலெப்படி? என்பதை ஆராய்வாம். கருவிகள் உயிராலதிஷ்டிக்கப்படாதபோது அறிவதில்லை என்பது நம்முடைய அநுபவம். நாம் இறந்தபோது நம்முடைய எந்தக் கருவியுமறியாது. அக்காலத்து உயிர் எதனையுமதிஷ்டித்து நிற்பதில்லை. அதற்குமுன் ஒவ்வொரு கருவியையுமதிஷ்டித்து நிற்கும். அதாவது, ஒவ்வொரு கருவியோடும் அக்கருவியேயாய் நின்று அதனையறியும்படி செய்யும். கண்ணொடு கண்ணாக நின்று அதனைக் காணும்படி செய்யும். செவியொடு செவியாய் நின்று அதனைக் கேட்கும்படி செய்யும். மற்றக் கருவிகளையும் அவ்வாறே அதிஷ்டித்து நிற்கும். அரசனது ஆஞ்ஞை அவனது ஏவலாளர்பால் நின்றதிஷ்டிப்பதை

*. சூ. I. பா. 10. † சூ. IV பா. 4.

இதற்கு உபமானமாகக் கூறலாம். அரசனது ஆஞ்ஞை அவ னது ஏவலாளரை அதிஷ்டிக்கும்வரையே அவ்வேவலாளர் அரசனது கருமத்தைச் செய்வார். அரசனுக்குதவியும் புரி வர். அவ்வாஞ்ஞை நீங்கியதும், அவ்வேவலாளர் அரசன் கரு மத்தை முடிக்க வலாது போவார். அவ்வேவலாளரால் அர சர்க்கு உண்டாகும் உதவியும் நின்றுவிடும். உயிர் கருவி களை அதிஷ்டித்தலுமிவ்வாறே. அதன் அதிஷ்டானம் கருவி கள்பாலிருக்கும்வரையே அக்கருவிகள் அறியும். இவ்வ திஷ்டானம் நீங்கியதும் ஒரு கருவியுமறியாது. அதனால் உயிர்க்கு யாதொரு உதவியுமின்றாய்விடும். அன்றியும் உயிர் கருவிகளை அதிஷ்டிக்கும்போதும், அக்கருவிகளால் எங்கும் வியாபித்தறிதல் முடியாது. ஆணவமலத்தா லணுத்தன்மை அடைந்து யாதொரு விளக்குமின்றிக் கிடந்த உயிர், கருவி களோடு கூட்டப்பட்ட காலத்து அக்கருவிகளின் அளவில் அறியுஞ் சக்தியைப் பெற்றதேயன்றி; எங்கும் வியாபகமாய் நின்றறியும் சக்தியைப் பெறவில்லை. இத்தகைய சக்தியினை யுடைய உயிரால் அதிஷ்டிக்கப்பட்ட கருவிகளும், அவ்வக் கருவிகளினளவிலே அறியும். இக்கருத்துகளையெல்லாம் உணர்த்தவே இச்சூத்திரம் 'விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்து அறிந்து' என்றோதியது. ஈண்டு 'மெய் வாய் கண் மூக்கு' என்றது ஐம்பொறி முதலிய எல்லாக் கரு விகளையும். உள்ளம் என்றது உயிரை. இவ்வுயிராலதிஷ்டிக் கப்பட்டால் மாத்திரம் கருவிகளறியுமென்பதை உணர்த்தவே 'உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அறிந்து' என்றது. இக் கருவிகள் வியாபித்தன்றி அளவினுட்பட்டே அறியுமென் பதை உணர்த்தவே இச்சூத்திரம் 'அறிந்து' என்று மாத்திரம் கூறாது 'அளந்தறிந்து' என்றும் கூறியது.

## இரண்டாம் பாடம்

உயிராலதிஷ்டிக்கப்பட்ட கருவிகளும் அவ்வுயிரினையறியா.

உயிராலதிஷ்டிக்கப்பட்டாலும், கருவிகள் சுட்டுப்பொருள் களேயேயறியுமென்றோம்*. உயிரோ அறிவுப்பொருள். அது சுட்டுப்பொருளன்று. அதனை எந்தச் சுட்டுப்பொருள்களாலும் அறியமுடியாது. உயிராலதிஷ்டிக்கப்பட்ட கருவிகளும் சுட்டுப்பொருள்களே. அக்கருவிகளாலும் அவ்வுயிரை யறிய முடியாது. எதுபோலெனில் கூறுதும். மேல் எடுத்துக் கொண்ட அரசன் ஏவலாளர் உவமையே ஈண்டும் ஒருவாறு பொருந்தும். அரசன் தன் ஏவலாளர் ஒவ்வொருவருக்கும் அதிகாரமும் தந்து அதற்கோர் வரம்பும் விதிப்பன். அவ் வேவலாளரும், அவரவர் வரம்பினுள்ளேயே, அரசன் கருமத்தைச் செய்து அவ்வரசர்க்குதவியும் புரிவர். இவ்வுதவி அரசனதிகாரம் தம்பாலிருக்கும்வரையே செய்தல் முடியுமென்றோம்†. அரசனதிகாரமிருப்பினும், அவனிட்ட வரம்பிற்கு வெளியே இவ்வேவலாளர் அரசர்க்குதவுதல் முடியாது. இவ்வரம்பு அவ்வரசனாலும் விதிக்கப்படலாம். அவனுக்கு மேலாயுள்ள அரசனாலும் விதிக்கப்படலாம். என்றாலும் ஏவலாளர் அவ்வரம்புக்கு வெளியே அரசன் கருமத்தைச் செய்யமுடியாது. உயிராலதிஷ்டிக்கப்பட்ட கருவிகளும், இத்தன்மையனவே. இக்கருவிகட்கு அறிவு வரம்பு ஏற்பட்டுள்ளது. இவ்வரம்பினுள்ளேயே உயிர் கருவிகளை அதிஷ்டிக்கும். உயிர் வியாபகமாயினும் அவ்வியாபகம் ஆணவமலத்தாற் றடைப்பட்டுக் கிடத்தலின் அவ்வுயிர் கருவிகளை யதிஷ்டிக்கும் வரம்பு ஏகதேசமாய்க் குறுகியது. இவ்வதிஷ்டான வரம்புக்குள்ளேயே கருவிகள் உயிர்க்குதவுதல் முடி

*, † சூ. V. பா. 1.

யும்; உயிரறிவின் வியாபகமனைத்தையும் அறிந்துதவுதல் முடியாது. இக்கருத்தை உணர்த்தவே இச்சூத்திரம் 'அளந்தறிந்து' என்பதோடு நில்லாது 'அறியா' என்று முடனோதியது.

---

## மூன்றும் பாடம்

### முதல்வனாலதிஷ்டிக்கப்பட்டே உயிரேயறியும்.

கருவிகள் ஜடம். அவைகளறிதற்கு அறிவுப்பொருளாகிய உயிரினதிஷ்டானம் வேண்டும். உயிர் அறிவுப் பொருளாக, அதற்கும் வேறோர் அறிவுப்பொருளினதிஷ்டானம் வேண்டுமா? என்பதை ஆராய்வாம். உயிர் அறிவுப்பொருளாயினும் தானாயறியு மறிவன்று. கண்ணிற்குக் காணும் சக்தியிருப்பினும், ஆதித்தன் ஒளியோடு கலந்தால் மாத்திரம் காணும். அவ்வொளி கலவாத இருட்டில் அக் கண் காணுதலில்லை. உயிரும் அதுபோல்வதே. பிறிதோர் அறிவுப்பொருளால் அறிவிக்கப்பட்டால் மாத்திரமறியும். அவ்வாறறிதற்கு மறிவுவேண்டும். இத்தன்மையுள்ள அறிவே உயிர்க்குண்டு. இவ்வுயிர்க்கு அறிவிக்கும் அறிவுப்பொருளே முதல்வன். இம்முதல்வன், உயிர்கட்கு அறிவித்தற்பொருட்டு, பெத்த உயிர்களோடு அத்துவிதமாய் நிற்கின்றானென்றும்; தனது ஆணையாகிய அருட்சக்தியின் நீக்கமின்றி நிற்கின்றானென்றுஞ் சொன்னோம்*, இவ்வருட்சக்தி உயிரை அதிஷ்டித்தால் மாத்திரம் உயிரறியும். இவ்வாறறிவதும் முதல்வனைப்போல் வியாபித்தறியாது. உயிர்க்கு முதல்வனைப் போல வியாபகமில்லை. பெத்த உயிர்களோ ஏகதேசமாய்

* சூ. II பா. 8, 9.

கின்றறிவனவென்றேம்†. முத்த உயிர்கள் சமவியாபகமாயி னும் முதல்வன்கண் வியாப்பியமாய் அடங்கி நிற்பனவென் பது பின்னர் விளக்கப்படும். எது எவ்வாறாயினும் பெத்த உயிர்களினறிவு சுட்டறிவே. இவ்வறிவு முதல்வனாலதிஷ் டிக்கப்பட்ட காலத்தும் வியாபகமாய் மாறுதலில்லை. இவ் வறிவினைத் தடைப்படுத்தி நிற்குமாணவம் அற நீங்கும்வரை, அது முதல்வனாலதிஷ்டிக்கப்பட்டாலும் வியாபகமாய் நின் றறிதலில்லை. அளவினுட்பட்டே யறியும். இக்கருத்துக்களை யெல்லா முணர்த்தவே இச்சூத்திரம் 'ஆங்கு அவைபோலத் தாம் தம்முணர்வின் தமியருள் (அளந்தறிந்து)' என்றோதி யது. ஈண்டு அவைபோலவென்பது கருவிகளைப்போலவென் பதை உணர்த்தும். 'தாம்' என்பது உயிரையும், 'தம்முணர் வின் தமி' என்றது தம்முணர்விற்குணர்வாய் நிற்கு முதல்வ னையும், 'அருள்' என்றது அவனது சக்தியையுமுணர்த்தும். 'தாம்' என்பதோடும் 'அளந்தறிந்து' என்பதைக் கூட்டிப் பொருள்சொள்ளல்வேண்டும். தம்முணர்வின் தமியருளால் திஷ்டிக்கப்பட்டதாம், அவைபோல அளந்தறியும் என்பது வசனமுறை.

---

## நான்காம் பாடம்

முதல்வனால் அதிஷ்டிக்கப்பட்ட உயிரும் அம்முதல்வனை அறியாது.

முதல்வனால் அதிஷ்டிக்கப்பட்டாலும் உயிர் மலமறைப் புள்ளவரை அளவினுட்பட்டே அறியும் என்றேம்.* இவ் வாறறியும் இவ்வுயிர் இம்முதல்வனை அறியுமா? என்பதை ஆராய்வாம். இம்முதல்வனே எல்லா உயிர்கள்பாலும் வியா பித்து நிற்பவன். மலமறைப்பினால் ஏகதேசமாய் நின்றறி

† சூ. II. பா. 5. சூ. III. பா. 2. * சூ. V பா. 3.

யும் பெத்த உயிர்கள்பால் மாத்திரமன்றி, மலமறைப்பு நீங்கி வியாபகமாய் நின்றறியும் முத்த உயிர்கள்பாலும் வியாபித்து நிற்பவன் என்றால் இம்முதல்வனது வியாகத்திற்கு அளவில்லையென முடியும். இவனை எந்த அளவினுட்பட்ட அறிவாலும் அறியமுடியாது. பெத்த உயிர்களின் அறிவு அளவினுட்பட்ட அறிவென்றோம்†. எனவே இவ்வுயிர்களை முதல்வனதிஷ்டத்தாலும் இவ்வுயிர்களால் அம்முதல்வனை அறியமுடியாதாகும். இக்கருத்தையும் உணர்த்தவே இச்சூத்திரம் 'ஆங்கவைபோலத் தாந்தம் உணர்வின் தமியருள் (அறியா)' என்றோதியது. தம்முணர்வின் தமியாலதிஷ்டிக்கப்பட்டாமும், அத்தமியை அறியா என்பது வசன முறை.

---

## ஐந்தாம் பாடம்

முதல்வன் உயிர்கட் குணர்த்தினும் விகாரியாகான்.

முதல்வன் உயிர்களை அதிஷ்டித்து நின்றால் மாத்திரம் உயிர்களறியுமென்றோம்.* உயிர்களோ பல வேறு வகைப் படவும் மாறிமாறியும் அறியும். என்றாலும் முதல்வனும் உயிர்க்கு மாறிமாறியும் பல்வேறு வகைப்படவு முணர்த்துவானு? என்பதை ஆராய்வாம். முதல்வன் என்றும் ஒரே தன்மையோடிருப்பவன், விகாரியல்லன். இம்முதல்வன் தான் விகாரியாகாது விகாரப்பட்டறியும் உயிர்க்கு உணர்த்துவ தெப்படி? என்பதே ஈண்டாராயவேண்டுவது. காந்தத்தைக் கண்டமாத்திரத்தே இரும்பு அசைவுற்றுத் தொழிற்படும். காந்தம் அசையவுமில்லை தொழிற்படவுமில்லை. யாதொரு விகாரத்தை யடையவுமில்லை. அஃது அசையாமலே இரும்பு

† சூ. V. பா. 2. * சூ. I. பா. 3.

தொழிற்படும். முதல்வனும் அப்படியே. அவனது சன்னிதி விசேஷத்தினுலேயே எல்லா உயிர்களும் அறியும். ஈண்டுச் சன்னிதி என்பது எதிர்முகமேயென்பதன்று. முதல்வனது எதிர்முகம் எல்லா உயிர்கள்பாலும் எக்காலத்திலும் ஒன்றுபோலுள்ளது. அவனது சத்தியே பல்வேறு உயிர்களின்பொருட்டுப் பல்வேறு காலங்களில் பல்வேறு விதமாய்ச் சங்கற்பிக்கும். இச்சங்கற்ப பேதமே உயிர்கள் பல்வேறு வகைப்பட உணர்தற்குக் காரணமாம். இக்கருத்தையே இச்சூத்திரம் 'காந்தம் கண்ட பசாசத்தவையே' என உணர்த்தும். ஈண்டு 'அவையே' என்றது உயிர்களையும் 'கண்ட' என்பது சன்னிதிப்படுதலையும் 'பசாசம்' என்றது இரும்பினையுமுணர்த்தும்.

ஐந்தாம் சூத்திரம் முற்றிற்று

## ஆறும் சூத்திரம்

உணருரு அசத்தெனின், உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

### முதற்பாடம்

சுட்டறிவால் அறியப்படும் பொருள் அசத்தாம்.

ஜடப்பொருள்கள் இரண்டு வகைப்படு மென்றோம்.* அவை சுட்டுப்பொருள் வியாபகப்பொருளென்றோம்*. சுட்டுப்பொருள் இடவரம்பினையுடையதென்றோம்*. வியாகப் பொருள் இடவரம்பின்றி எங்கும் வியாபித்து நிற்கும் பொருளென்றோம்*. அதனால் சுட்டுப்பொருட்குத் தோற்றக்கேடுகள் உண்டென்றோம்* வியாகப் பொருட்கு அவையில்லையென்றோம்*. இச்சடப்பொருட்கன்றி அறிவுப் பொருட்கோ இடவரம்பிருத்தல் முடியாது. இவ்வறிவுப் பொருள்களுள்ளும் சுட்டறிவு வியாபக அறிவு என இருவேறு அறிவுகளிருத்தல் முடியுமா? அவ்வவ்வறிவினால் அறியப்படும் பொருள் எத்தன்மைத்து? என்பனவற்றை யாராய்வாம். சில அறிவுப் பொருள்கள் ஒருகாலத்து அறியும்: மற்றொரு காலத்து அறியா. ஓரிடத்து அறியும்: மற்றோரிடத்தறியா. கருவிகளோடு கூடியபோது அறியும்: கூடாதபோது அறியா. ஒரு காலத்து அறிவு மறைக்கப்பட்டும் மற்றொரு காலத்து மறைக்கப்படாமலுமிருக்கும். இத்தன்மைத்தான காலவரம்பு இடவரம்பு முதலியவற்றோடு கூடிய அறிவே சுட்டறிவு எனப்படும். இதுவன்றி எக்காலத்தும் எவ்விடத்தும் ஒன்றுபோலறியும் அறிவு வியாபக அறிவெனப்படும். இவ்வியா

* சூ. I. பா. 1.

பக அறிவு எக்காலத்தும் விளங்கி நிற்கும் அறிவு: எவ்விடத்தும் விளங்கி நிற்கும் அறிவு: என்றும ஒரே தன்மைத்தாய் விளங்கும் அறிவு. சுட்டறிவு இதுபோலன்று. ஒருகாலத்து விளங்கிப் பிரகாசமாய் நிற்கும்: மற்றொரு காலத்து விளங்காது அப்பிரகாசமாய் நிற்கும். இவ்வறிவு யாண்டும் வியாபித்து நில்லாது. இதனால் விடாபகப்பொருள் அறியப் படமாட்டாது. இதனால் அறியப்படுவன இடவரம்பினையுடைய சுட்டுப் பொருள்களே. இச்சுட்டுப் பொருள்கள் யாவும் தோற்றக்கேடுகளையுடையன என்றோம்*. எனவே இச்சுட்டறிவினால் அறியப்படும் பொருள்களும் தோற்றக்கேடுகளையுடையனவாய் முடியும். விளங்கித் தோன்றுதலே தோற்றமென்றோம்†. விளங்காது மறைதலே கேடென்றோம்‡. அதாவது பிரகாசமாய் நின்று அப்பிரகாசமாகும் பொருளே தோற்றக்கேடுகளையுடைய பொருள். இப்பொருள் ஒரு காலத்திருந்து மற்றொரு காலத்தில்லாமற் போவதன்று. இது என்றுமிருக்கும் பொருள்: ஆனால் என்றும் ஒரு தன்மைத்தாயிராது. என்றும் ஒரு தன்மைத்தாயிருக்கும் பொருள் சத்தெனப்படும். இதுவன்றிச் சுட்டறிவினால் அறியப்படும் பொருள் ஒரு காலத்துப் பிரகாசமாயிருக்கும். மற்றொரு காலத்து அப்பிரகாசமாயிருக்கும். இப்பொருளே அசத்தெனப்படும். இக்கருத்துக்களையே இச்சூத்திரம் 'உணர்உரு அசத்தெனின்' என்றுணர்த்திற்று. இவ்வாக்கியத்தை உணருரு எனின் அசத்து என மாற்றிப் பொருள் கொள்ளல் வேண்டும். ஈண்டு உணர் உரு எனப்பட்டது சுட்டுணர்வால் உணரப்படும் பொருள்.

---

* சூ. I பா. 4. †, ‡ சூ. I. பா. 8.

## இரண்டாம் பாடம்

ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் இல்லை.

சுட்டறிவினால் அறியப்படும் பொருள் அசத்தென்றோம்*. வியாபக அறிவினால் அறியப்படும் பொருளோ சத்து என்றோம்*. இவ்விரண்டினாலு மறியமுடியாத பொருள் உண்டா? என்பதை ஆராய்வாம். பொருள்கள் வரம்பினுட்பட்டிருக்க வேண்டும்: அன்றி வரம்பினுட்படாமலிருக்க வேண்டும். அதாவது பொருள்கள் சுட்டாயிருக்கவேண்டும் அல்லது வியாபகமாயிருக்கவேண்டும். இவற்றுள் சுட்டுப்பொருள் களை இருவகையறிவுமே அறியும். ஒன்று சுட்டியறியும்: மற்றொன்று வியாபித்தறியும். வியாபகப் பொருளை வியா பக அறிவே யறியும். எனவே இவ்விருவகையறிவினுள் ஒன்றானும் அறியப்படாத பொருளிருத்தல் முடியாது. அத னால் யாதொரு பயனுமாவதில்லை. ஆகாயத் தாமரை யுண் மையில் இல்லை. அது வசனமாத்திரமே. அதனால் யாதொரு பயனுமில்லை. எனவே யறியப்படாத பொருளில்லை யென் பதாய் முடியும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'உணரா தின்மையின்' என்றோதியது. இவ்வாக்கியத்தை 'உணரா தெனின் இன்மையின்' என வைத்துப் பொருள்கொள்ளல் வேண்டும்.

---

## மூன்றாம் பாடம்

முதல்வன் சுட்டறிவினால் அறியப்படுபவனல்லன்.

சுட்டறிவால் அறியப்படும் பொருள் அசத்தென்றோம்* அதாவது தோற்றக் கேடுகளுடையதென்றோம்*. முதல்

* சூ. VI. பா. 1.

வனே தோற்றக் கேடுகளில்லாதவன். எக்காலத்தும் ஒரே தன்மையுள்ளவன். அவன் சத்துப் பொருள். சுட்டறிவால் அறியப்படான். என்றால் உயிரின் அறிவு சுட்டா? வியாபகமா? இவ்வறிவால் முதல்வன் அறியப்படுவனா? என்பனவே நாம் ஆராயவேண்டுவன. அவற்றை ஈண்டு ஆராய்வாம். உயிரின் அறிவு அநாதியே மலமறைப்புண்டு கிடந்ததென்றும், அவ்வுயிரறிதற்பொருட்டு முதல்வனால் கருவி கரணாதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன என்றும் சொன்னோம்‡. இக்கருவி கரணாதிகளின் உதவியைக்கொண்டும் உயிர் வியாபித்தறிய முடியாது. அதன் வியாபகம் எக்காலத்தும் தான் பொருந்தியுள்ள உடலுக்கு வெளியே யில்லையென்றும், அவ்வுடலினுள்ளும் நிறைந்த வியாபகமில்லையென்றும், ஓர் காலத்து ஓர் கருவியின் கண்ணே வியாபித்து நிற்குமென்றும் சொன்னோம். இக்கருவி கரணாதிகள் யாவும் பாசப் பொருள்களாதலால் இவைகளைக் கொண்டறியும் அறிவு பாச ஞானம் எனப்படும். இப்பாசஞானத்தின் வியாபகம் அதற்குதவியாய் நிற்கும் கருவி கரணாதிகளின் அளவிலேயாதலால் இந்த ஞானம் சுட்டறிவாம். இச்சுட்டறிவினால் முதல்வன் அறியப்படான். இதுநிற்க மலமறைப்புள்ள உயிர் கருவி கரணாதிகளின் உதவியையின்றி வேறு விதத்தாலும் அறிய முடியுமா என்பதை ஆராய்வாம்.

மல மறைப்புள்ள உயிர்கள் கருவி கரணாதிகளோடு கூடியிருப்பினும் ஒரோ காலத்து யாதொரு பொருளையும் அறியாதிருப்பதுண்டு. இந்நிலை யோக நிலை யெனப்படும். இந்நிலையிலிருப்பார் தம் கண்ணுக் கெதிர்ப்படும் பொருளைக் காணுவதில்லை. தம்முடைய மற்றைக் கரணங்கட்கு எதிர்ப்ப

‡ சூ. I. பா. 11.

டும் விஷயங்களை அறிவதுமில்லை. இவர் அந்நிலையில் தம்மு டைய எல்லாக் கருவிகளையும் கரணங்களையும் தம்கீழ் அடக் கியுள்ளார். இவர் அக்கருவி கரணாதிகளைக்கொண்டு அறிகி ருரென்ன இடமில்லை: யாதொன்றையும் அறியாமலிருக்கின் ருரென்னவும் இடமில்லை. இவர் திரிலோக திரிகால வர்த்த மானங்களையும் அறிகின்ருரென்று புராணங்கள் கூறும்: நாமும் நேரில் அறிந்துளோம். எனவே, இவர் கருவி கரணா திகளின் உதவியின்றியும் அறிகிருரென்பதிற் சந்தேகமில்லை. ஆனல் இவர் எவ்வாறு அறிகின்ருரென்பதே நாம் ஆராய வேண்டுவது. இவர் கண்கொண்டு காணவில்லை யென்ருலும், எந்தக் கருவியைக்கொண்டும் அறியவில்லை யென்ருலும், இவர் அறிவிலும், காண்டலறிவு, கேட்டலறிவு முதலிய பே தங்கள் காணப்படுகின்றன. அதாவது கருவிகொண்டறிந் தாற்போலறிகின்ருர். இவர்க்குக் கருவி கரணாதிகள் உதவ வில்லை யென்ருலும, அவற்றின் வாசனை உதவுகின்றது. என் ருல், கருவிகளைக் கொண்டும் அறியமுடியாத திரிலோக வர்த் தமானங்களையும் அவற்றின் வாசனைகொண்டறிவது எப்படி யெனில்: கூறுதும். இவர் தமது யோக நிலையில், கருவி கரணாதிகளை யடக்குவதோடு, தம் அறிவை மறைத்துள்ள ஆணவ முனைப்பினையும் ஒருவாறு அந்நிலையில் அடக்கியுள் ளார். இவரது சாதாரண நிலையில், இவரது அறிவில், விஷ யங்கள் படிதற்கு ஆணவத் தடையிருப்பதுபோல், இவரது யோக நிலையில் அத்தடை அத்துணையில்லை. நீண்ட தூரத் துக்கு அப்பாலுள்ள விஷயங்களும், நீண்டகாலத்துக்கு முன் பின்னுள்ள விஷயங்களும், இவரறிவில் எளிதிற் சேர்தல் கூடும். அவ்விஷயங்கள் சேர்தற்குக் கருவி கரணாதிகளின் வாசனை யுதவியே போதும். இதுதான் இவர் தமது யோக நிலையில் திரிலோக திரிகால வர்த்தமானங்களை யறிதற்குக்

காரணம். என்றாலும் இந்நிலையிலும் இவர் அறிவு வரம்பின்றி யாண்டும் பரந்துசெல்லவில்லை. இவ்வறிவும் சுட்டறிவே. இவ்வறிவுக்குக் கருவி கரணாதிகள் உதவவில்லையாதலால், இது 'பாச ஞானம்' ஆகாது. ஆயினும், இவ்வறிவு பாசத்தோடு கூடியுள்ள உயிரின் அறிவேயாதலால் பசு ஞான மெனப்படும். பாசத்தோடு கூடிய உயிரே பசு எனப்படும். இப்பசுஞான நிகழ்ச்சியில் உயிர் கருவி கரணாதிகள் அறியமாட்டாவென உணர்ந்தாலும், தான் அவற்றின் உதவியின்றியும் அறியலாமென உணர்ந்தாலும், முதல்வன் தனக்கு அறிவிக்கவே தானறிவதை யுணராது தானே அறிவதாய் உணர்ந்து நிற்பதால், இது 'நான் பிரமம் என்னும் ஞானம்' என்றுஞ் சொல்லப்படும்§. எனவே இப்பாசா ஞான பசு ஞானங்களிரண்டும் சுட்டறிவே, இவ்விரண்டினாலும் முதல்வன் அறியப்படான் என முடியும். இம்முடிபையும் உள்ளடக்கியே, இச்சூத்திரம் 'இருதிறனல்லது' என்றுணர்த்தும். இவ்வாக்கியத்திற் கூறப்பட்ட இரு திறன்கள், உணருருவாந்தன்மை, உணரப்படாத தன்மை என்பனவாம். இவ்விரு தன்மைகளுள், உணருருவாந் தன்மை முதல்வற்கில்லை யென்பது இப்பாடத்தில் உணர்த்தப்பட்டது. 'வாக்கு மனாதீதம்' என்பதன் கருத்தும் இதுவே. வாக்கு என்பது கேவலம் சொல்லையன்று. வாக்கு அல்லது நாதம் முதலிய தத்துவங்களையும் குறிக்கும். இவற்றைக் கொண்டறியும் அறிவு பாசஞானமே. இப்பாச ஞானத்தாலுணரப்படாத தன்மையையே, 'வாக்க தீதம்' என்பதுணர்த்தும். அப்படியே 'மனம்' என்றது அந்தக்கரணங்களிலொன்றாகிய மனதையன்று. அதன்கண் விளங்க நிற்கும் பசு அறி

§ சிவஞானசித்தி அளவைத் திருவிருத்தம் 7, 9-ம் சூ. திருவிருத்தம் 2 பார்க்க.

வை: அதாவது பசு ஞானத்தை. முதல்வன் வாக்கு மனதீதன் என்பதன் கருத்து இதுவே.

---

## நான்காம் பாடம்

முதல்வன் எவ்வாற்றானும் அறியப்படானுமல்லன்.

வியாபக அறிவினால் அறியப்படாத பொருள் இல்லையென்றோம்*. முதல்வன் எக்காலத்தும் உள்ளபொருள் என்றோம்†. ஆதலால், முதல்வன் வியாபக அறிவினால் அறியப்படுவன் என்பதாய் முடியும். இவ்வியாபக அறிவு யாண்டுள்ளது? அதனால் அறிவது எது? என்பதே ஈண்டு ஆராயவேண்டுவன. முதல்வன் அறிவு, வியாபக அறிவென்றாலும், தன்னைத்தானே அறிவதில் யாதோர் பயனுமின்று. அறிவானும் அறியப்படுபொருளும், வெவ்வேறாதல் வேண்டும். முதல்வனையன்றி அறிதற்குரிய பொருள்கள் உயிர்களே. உயிரின் அறிவோ, மலமறைப்புள்ளவனா, கருவிகளைக் கொண்டறியும்போதும், அவற்றின் வாசனையைக் கொண்டறியும்போதும் சுட்டறிவேயென்றோம்‡. வியாபகனாகிய முதல்வன் இவ்வுயிர்க்கு உணர்த்தினும், வியாபகமாய் நின்றுணர்த்தவில்லை. இவ்வுயிரோடு உயிரேயாய் நின்றுணர்த்துவான் என்றோம்§. அதாவது ஏகதேசமாய் நின்றுணர்த்துவான். ஆதலால் இவ்வுயிரினறிவு, இக்காலத்துச் சுட்டறிவாய் நின்றது. என்றால் எக்காலத்தேனும், முதல்வன் வியாபகமாய் நின்றுணர்த்துவானா? எக்காலத்து அவ்வாறுணர்த்துவான்?. என்பதை யாராய்வாம். உயிர் வியாபகமாய் நின்றாலன்றி, அதற்குணர்த்தும் முதல்வனும், வியாபகமாய் நின்றுணர்த்துதலில்லை. உயிரின் வியாபகத்தைத் தடுப்பது ஆண

* சூ. VI. பா. 2. † சூ. I. பா. 8. ‡ சூ. VI. பா. 3. § சூ. II. பா. 5.

வமலமேயாதலால், அத்தடை நீங்கினதும், உயிர் வியாபகமாய் நிற்கும். இவ்வுயிர்க்கு உணர்த்தும் முதல்வனும் வியாபகமாய் நின்றுணர்த்துவன். இவ்வுயிரும் வியாபகமாய் நின்றுணரும். வியாபகமாகிய முதல்வனையும் உணரும். இவ்வுயிர் அறிதற்குக் கருவிகரணாதிகளின் உதவி வேண்டுவதின்றாதலால், இதனறிவு பாசஞானமாகாது. இவ்வுயிர் மலமறைப்பு நீங்கப் பெற்றதாதலால் இது 'பசு' எனப்படாது. இதனறிவும் 'பசுஞானம்' ஆவதில்லை. இவ்வுயிர் முதல்வனேயாய் நின்றறிவதால் இக்காலத்து விளங்குவது முதல்வனறிவு ஒன்றே. இதனாலேயே இதனறிவு 'பதிஞானம்' எனப்படும். இப்பதிஞானத்தாலேயே முதல்வன் உணரப்படுவன் என்பது கருத்து. இக்கருத்தையும் உள்ளடக்கியே இச்சூத்திரம் 'இருதிறனல்லது' என்றுணர்த்தும். இவ்விருதிறன்கள் யாவை என்பது முதற்பாடத்தில் விளக்கப்பட்டது. அவற்றுள் இப்பாடத்திலுணர்த்தப்படுவது, முதல்வற்கு ஒருவாற்றானும் அறியப்படாததிறனில்லையென்பது. அதாவது முதல்வன் பதிஞானத்தாலறியப்படுவன் என்பது உணர்த்தப்பட்டது. இதனாலேயே முதல்வன் வாக்கு மனாதீதனாயினும், கோசரன் என்றுஞ் சொல்லப்படுவன்.

---

## ஐந்தாம் பாடம்

முதல்வன் சிவசத்தாம்.

முதல்வன் சுட்டறிவினா லறியப்படுபவனல்லனென்றோம். இவ்வறிவினாலறியப்படுவனேல், தோற்றக்கேடுகளையுடையனாய் ஜடமாய் முடிவன். முதல்வனோ, எவ்வாற்றானும் எத்துணையேனும் ஜடத்தன்மையில்லாத சித்து. அசித்

துருச்சித்து. இதுவன்றி, முதல்வன் எவ்வாற்றானும் அறியப்படாதவனுமல்லன் என்றோம். அறியப்படாதவனாயிருப்பினல், சூன்யமாய் முடிவன் என்றுஞ் சொன்னோம். முதல்வனே என்றும் உள்ளபொருள். என்றும் ஒருபடித்தாயுள்ள பொருள். இவனிடத்து எவ்வாற்றானும் அசத்துத்தன்மையில்லை. உயிர்கள்போல் சதசத்தன்று. முற்றும் சத்து. எவ்வாற்றானும் சத்து. எவ்வாற்றானும் சித்து என்றுஞ் சொன்னோம். எனவே முதல்வன் 'சித்துச் சத்து' என முடிவன். 'சித்து' என்றாலும் சிவம் என்றாலும் ஒன்றே. உயிர்கள் சித்தென்றாலும் ஒருவாற்றால் மாத்திரம் சித்தாதலால், சிவம் என்னும் பெயர்க்கு உரிமையுடையனவல்ல. ஆதலால் முதல்வன் 'சிவசத்து' என்று சொல்லப்படுவன். இக்கருத்துக்களையுணர்த்தவே இச்சூத்திரம் 'சிவசத்தாமென, இரண்டுவகையினிசைக்கும் மன்னுலகே' என்றோதியது. ஆராய்ச்சியறிவுடையோர், முதல்வனை, அவனது அறியப்படாததன்மையால் 'சிவம்' எனவும் அறியப்படுந்தன்மையால் 'சத்து' எனவும் இரண்டு வகையாகக் கூறுவர் என்பது கருத்து.

ஆறும் சூத்திம் முற்றிற்று

# ஏழாம் சூத்திரம்

யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது, அசத்திலது அறியாது,
இருதிறன் அறிவுளது, இரண்டலா ஆன்மா.

---

## முதற்பாடம்

சிவம் அசத்தினை அறியாது.

சிவத்தின் அறிவு வியாபக அறிவென்றோம்.* இவ்வியாபக அறிவு எல்லாப் பொருள்களையும் ஒரே காலத்து ஒருசேர அறியும் அறிவு. இவ்வறிவு ஒருகாலத்து ஒன்றனை மாத்திரம் அறியாது. இவ்வறிவு எதையும் தனித்தறியாது. எதையுஞ் சுட்டியறியாது. சுட்டிறந்து நின்றேயறியும். சுட்டுப்பொருள்களையுஞ் சுட்டிறந்துநின்றே அறியும். அப்பொருள்களை, இது குடம் இஃது ஆடை யென்றாற்போலச் சுட்டியறியாது. அப்பொருள்கள் இதன்முன் விளங்கித் தோன்றா. அப்பிரகாசமாய் நிற்கும். இவ்வறிவின் முன் சுட்டுப் பொருள்கள் சூன்யமே. சூன்யமென்றால் இன்மையென்பதன்று. விளங்கித் தோன்றாமையே. உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் சுட்டுப்பொருள்களே யென்றோம்.† எல்லாம் 'அசத்து' என்றுஞ் சொன்னோம்‡. எனவே, வியாபக அறிவின்முன் அசத்துப் பொருள்கள் யாவும் சூன்யமாய் முடியும். இக்கருத்தையே யிச்சூத்திரம் 'யாவையுஞ் சூனியம் சத்தெதிராகலின்' என்றுணர்த்தும். ஈண்டுச் 'சத்து' என்றது சத்தாகிய சிவத்தை. இச்சத்தே முற்சூத்திரத்தில்,

* சூ. II. பா. 5. † சூ. I. பா. 4. ‡ சூ. VI பா. 1.

'சிவசத்து' என்று சொல்லப்பட்டது. இது ஜடப்பொருள் வியாபகப்பொருள் ஆகிய எல்லாப்பொருள்களிலும் வியாபித்து நிற்பது. இனி இத்தகைய வியாபக அறிவையுடைய சிவம் எவற்றையும் அறியமுடியுமா? என்பதையாராய்வாம்.

சிவத்தின் அறிவை நோக்க, எல்லாப் பொருள்களும் சுட்டுப்பொருள்கள். எதுவும் அதன்முன் விளங்கித் தோன்றாது. எதன்பாலும் அதற்கு அனுபவ அறிவில்லை. வியாபக அறிவே யுண்டு. இவ்வனுபவ அறிவின்மையையே இச் சூத்திரம் 'சத்தே அறியாது' என்றுணர்த்தும். ஆனால் சிவத்தாலறியப்படாத பொருள் உண்டெனில் அச்சிவத்திற்கிழுக்கன்றோவெனின், அன்று. சுட்டுப் பொருள்களையும் சிவம் அறிவதனால், ஒருகாலத்து ஒன்றனையே அறியவேண்டும். அதாவது ஒன்றனை யறியும்போது, மற்றையவற்றை மறத்தல்வேண்டும். இவ்வாறறிதல் சிவத்திற்கிழுக் காவதன்றி, இவ்வாறறியாமை இழுக்காகாது: மேம்பாடேயாகும். இதுவன்றிச் சிவத்தினறிவு பேரறிவாக, சுட்டறிவு சிற்றறிவாக, சுட்டறிவாலறியப்படுவதைச் சிவம் அறியாதென்றல் பொருந்துமாவெனின்? பொருந்தும். வியாபக அறிவிற்கும் சுட்டறிவிற்கும் அளவில் மாத்திரம் வித்தியாசமென்பதன்று. தன்மையிலும் வித்தியாசமே. ஒன்று வியாபித்தன்றி அறியாது. மற்றொன்று சுட்டியன்றி அறியாது. இவ்விரண்டும் ஒன்று அறிவதை மற்றொன்று அறியவேண்டுமென்பதின்று. சிவம் அசத்துப் பொருள்களை அறியாதென்பது எவ்வாற்றானும் பொருந்தும். இக் கருத்துக்களையெல்லாம் தொகுத்தே இச்சூத்திரம் 'யாவையுஞ் சூனியம் சத்தெதிராகலின், சத்தே அறியாது' என்றுணர்த்தும்.

## இரண்டாம் பாடம்

### அசத்துப் பொருள்கள் ஒன்றனையும் அறியா.

அசத்துப் பொருள்கள் யாவும் ஜடமென்றோம். அவற்றிற்கு அறிவில்லை. அவைகள் ஒரு பொருளையும் அறியா. சத்தாகிய சிவத்தினையும் அறியா. ஆனால், உயிரால் அதிஷ்டிக்கப்பட்ட கருவிகள் அறியுமென்றோமே யெனின்? † கூறுவோம். அதன் கருத்து, கருவிகளை அறியுமென்பதன்று. அவற்றைக்கொண்டு உயிரறியுமென்பதும், அதுவும் உயிர் அவற்றையதிஷ்டித்தால் மாத்திர மென்பதுமே. ஆனால், உயிர்கருவிகளைக் கொண்டறிவதைப் பாசஞானமென்றோமே யெனின்? ‡ அதனையுங் கூறுவோம். பாசஞான மென்றதனால், பாசப் பொருள்கட்கு அறிவுண் டென்பதன்று. பாசப் பொருள்களின் சகாயத்தால் உயிர் அறியும் அறிவே பாசஞானமெனப்படும். மேற்கூறிய கருவிகள் சுட்டறிவோடுகூடிய உயிராலதிஷ்டிக்கப்பட்ட காலத்து அறியாவென்றாலும், சுட்டறிவினின்றும் நீங்கி வியாபகமாய் நின்று அறியும் உயிராலதிஷ்டிக்கப்படுங் காலத்தும் அறியாவோவெனின்? அறியா. ஜடப்பொருள்கள் என்றும் ஜடமே. எக்காலத்தும் சித்தாக மாறா. என்றும் அறியா. இச்சங்கைகளை நீக்கவே இச்சூத்திரம் 'அசத்து இலது அறியாது' என்றுணர்த்தும். ஈண்டு 'இலது' என்பதன் முன் 'அறிவு' தொக்குநின்றது. 'அசத்து அறிவு இலது, ஆதலின் அறியாது' என்பது கருத்து.

---

* சூ. VI. பா. 1. † சூ. V பா. 2. ‡ சூ. VI. பா. 3.

## மூன்றும் பாடம

உயிர் சத்து அசத்துக்களாகிய இருவகைப்பொருள்களையும் அறியும்.

சத்து அசத்தினை அறியாதென்றோம்* அசத்து ஒன்றனையுமறியாதென்றோம்.† இச்சத்து அசத்துக்கள் யாதானுமொன்றாலறியப்படவேண்டுமென்றுஞ் சொன்னோம்.‡ ஆகவே இவ்விரண்டையும் அறிவது எது? என்பதையாராய்வாம். உயிர் அசத்துப்பொருள்களையறிவதை அனுபவத்திலறிவோம். அதைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை. சத்தினை யறிவது எது? என்பதே நாம் ஆராயவேண்டுவது. இவ்வுயிரே சத்தினை அறியுமா? என்பதைக் கவனிப்பாம். இவ்வுயிரினறிவு பெத்தகாலத்துச் சுட்டறிவென்றோம்.§ சத்து வியாபகப்பொருளென்றுஞ் சொன்னோம்.‖ எனவே உயிர் பெத்தகாலத்துச் சத்தினை அறியமுடியாதென்பது பெறப்படும். என்றாலும் உயிர் எக்காலத்தும் சத்தினையறியமுடியாதென்பதில்லை. பெத்தத்தினின்றும் நீங்கிய உயிர் சிவத்தோடு சிவமாய் நின்றறியுமென்றும், அவ்வாறறியும்போது வியாபகமாய் நின்றறியுமென்றுஞ் சொன்னோம்.** இவ்வாறறியும்போது, வியாபகப்பொருளாகிய சிவத்தினையும் அறிதல் கூடுமென்று முடியும். இம்முடிபையே இச்சூத்திரம் ' இருதிறனறிவுளது ........ ஆன்மா ' என்றுணர்த்தும். ஈண்டு 'இருதிறனறிவுளது' என்னும் வாக்கியம், மூன்று வேறு வேற்றுமைத் தொகைகளாகநின்று மூன்று வேறு பொருள்களைத்தரும். இப்பாடத்தில் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகநின்று, இருதிறன்களாகிய சத்து அசத்து இரண்டினையும் அறியும் அறிவையுடையது என்னும் பொருள் தந்தது.

* சூ. VII. பா. 1. † சூ. VII. பா. 2. ‡ சூ. VI. பா. 2. § சூ. V. பா. 3. ‖ சூ. II பா. 5. ** சூ VI பா. 4.

## நான்காம் பாடம்

### உயிர் சத்து அசத்துக்களின் உதவியால் அறியும்.

உயிரின் அறிவு தானுயறியும் அறிவன்று. சிவம் உணர்த்தினுல் மாத்திரம் உணரும் அறிவென்றேம்.* இச் சிவம் எல்லா உயிர்கட்கும் உணர்த்தும். பெத்த உயிர்கட்கும் உணர்த்தும். பெத்தம் நீங்கிய முத்த உயிர்கட்கும் உணர்த்தும். ஆனுல் பெத்த உயிர்களால் சிவம் அறியப் படுவதில்லையாதலால், அவ்வுயிர்கட்குச் சிவம் வெளிப்பட்டு நின்றுணர்த்தாது. மறைந்து நின்றேயுணர்த்தும். முத்த உயிர்கட்கு அது போலன்று. அவ்வுயிர்கள் சிவமாயே நின்றுணருமாதலால், அவைகட்குணர்த்தச் சிவமன்றி வேறு கருவிகள் உதவுதலில்லை. அவைகளின் அறிவு சிவம் ஒன்றாலே விளக்கப்படும். சிவம் ஒன்றே அவற்றினறிவை விளக்கும் கருவி. அஃதொன்றே முத்த உயிர்க்கு வியஞ்சகம். எனவே முத்த உயிர் சிவமாகிய சத்தினுதவியாலறியுமென முடியும். இது நிற்க, பெத்த உயிர்க்கோ சிவம் மறைந்து நின்றுணர்த்துமென்றேம். இவ்வுயிர்க்கு வெளிப்படையாய் நின்று உதவ வேறு பொருளும் வேண்டப்படும். இவ்வாறு உதவ அசத்தன்றிவேறில்லை. பெத்த உயிர்க்கு அமைக்கப் பட்டுள்ள கருவி காரணங்கள் யாவும் அசத்துப் பொருள் களே. இவ்வசத்துப்பொருள்களின் உதவியைக்கொண்டே பெத்த உயிர் அறிகின்றது. கண்ணின் உதவியைக்கொண்டே காணும். அப்படியே யாதானுமோர் கருவியைக் கொண்டே இவ்வுயிர் அறியும். இக்கருவிகள் யாவற்றையும் தன்கீழடக்கிநிற்கும் நிலையிலும், இவ்வுயிர் அவற்றின் வாசனைகொண்டறியுமென்றேம்.† என்றால் பெத்த

*. சூ. III. பா. 7. † சூ. VI பா. 3.

உயிர்கள் அசத்துப் பொருள்களினுதவியாலறியுமென்பது பெறப்படும். முத்த உயிர்கள் சத்தினுதவியாலறியுமென்று மேலே சொன்னோம். எனவே உயிர்கள் சத்து அல்லது அசத்தின் உதவியாலேயே அறியுமெனமுடியும். இம்முடிபையே இச்சூத்திரம் 'இருதிறனறிவுளது ....... ஆன்மா' என்றுணர்த்தும். ஈண்டு 'இருதிறனறிவுளது' என்னும் வாக்கியம் மூன்றும் வேற்றுமைத் தொகையாக நின்று, இருதிறன்களாகிய சத்து அசத்துக்களினுதவியாலறியும் அறிவினையுடையது என்னும் பொருள் தந்தது.

---

## ஐந்தாம் பாடம்

உயிர் சத்தின்பால்நின்றும் அசத்தின்பால்நின்றும் அறியும்.

உயிர் அசத்தினுதவியால் அசத்தினையும், சத்தினுதவியால் சத்தினையும் அறியுமென்றோம்.* அவ்வாறறியும்போது எவ்வாறு நிற்கும் என்பதை யாராய்வாம். அசத்தினுதவியாலறியும்போது, உயிர் அவ்வசத்தோடு எவ்வாறு நிற்கும் என்பது நம்முடைய அனுபவம். கண்ணினாற் காணும்போது அக்கண்ணாகவே நிற்கும். காதினாற் கேட்கும்போது அக்காதாகவே நிற்கும். கண்ணெனத் தானென வேறு நிற்குமாறில்லை. காதெனத் தானென வேறுநிற்குமாறுமில்லை. உயிர் மற்றைக் கருவிகளைக்கொண்டறியும்போதும் இவ்வாறே. இனிச் சத்தினுதவியைக்கொண்டறியும்போது எவ்வாறு நிற்குமென்பதைச் சற்று கவனிப்பாம். உயிர் சத்து இரண்டும் அறிவாகாரப் பொருள்கள். இவற்றுள் உயிரறிவு, சத்தறிவினைக் கொண்டறியும்போது சத்தறிவாயே நிற்குமென்று சொன்னோம்.† என்றால் உயிர்

* சூ. VII பா. 4. † சூ. VI பா. 4.

தானாக நின்றறிதலில்லை. அசத்தோடு அசத்தாக நின்றறியும். சத்தோடு சத்தாக நின்றறியும். அதாவது எந்தக்காலத்து எதனை அறியுமோ, அதனோடு அதுவாக நின்றறியும் தன்மை உயிர்க்குண்டு. இதுதான் 'சார்ந்ததன் வண்ணமாந் தன்மை' யெனப்படும். இத்தன்மையையே யிச்சூத்திரம் 'இருதிற னறிவுளது.......... ஆன்மா' எனவுணர்த்தும். ஈண்டு 'இருதிறனறிவுளது' என்னும் வாக்கியம், ஏழாம வேற்றுமைத் தொகையாக நின்று, இருதிறன்களாகிய சத்து அசத்து இரண்டன்கண்ணும் நின்றறியும் அறிவையுடையது என்னும் பொருள் தந்தது.

---

## ஆறும் பாடம்

### உயிர் சத்துமன்று அசத்துமன்று.

அசத்துப் பொருள்கள் யாவும் ஜடமென்றோம்.* உயிர் சித்தாதலின், அசத்தாகமாட்டாது. இனி உயிர் சத்தாகுமா? என்பதையாராய்வாம். உயிரும் அறிவுப் பொருள்: சத்தும் அறிவுப் பொருள். என்றாலும் உயிரும் சத்தும் ஒன்ன இடமில்லை. இவ்விரண்டறிவுகளும் வெவ்வேறே. அன்றியும் சத்தென்றால், அறிவென்பதன்று. சத்தென்பது, என்றும் ஒருபடித்தாயிருக்கும் பொருள். சிவத்தினறிவு என்றும் ஒருபடித்தாயிருக்குமறிவு. அவ்வறிவுக்குக் கூடுதல் குறைதலில்லை. விளங்குதல் மறைதலில்லை. உயிரின் அறிவு அவ்வாறன்று. ஒரு காலத்து அறியாமலே கிடக்கும். மற்றொரு காலத்துக் கருவிகளைக்கொண்டு மறந்து மறந்தறியும். இனியொரு காலத்துச் சத்தினுதவியால் ஒருபடித்தாயுமறியும். ஆதலால் உயிர் சத்தாவதின்று. அசத்தாவதின்றென்றுஞ்

* சூ. VI. பா. 1.

சொன்னோம். எனவே உயிர் சத்துமன்று, அசத்துமன்று என்பதாய் முடியும். இதுபற்றியே இச்சூத்திரம், உயிரை 'இரண்டலா ஆன்மா' என்றுணர்த்தும். என்றாலும் உயிர் ஒரு காலத்து அறியாது கிடத்தலால், அதனை யொருவாறு அசத்து என்னலாம். அதுபோல, மற்றொரு காலத்து ஒருபடித்தாயறியுந் தன்மை பெறுதலால், ஒருவாறு சத்தென்றுஞ் சொல்லலாம். இதனால் உயிர் சதசத்தென்று சொல்லப்படும்.

ஏழாம் சூத்திரம் முற்றிற்று

## எட்டாஞ் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்,
தம்முதல், குருவுமாய்த், தவத்தினி லுணர்த்தவிட்டு,
அன்னிய மின்மையின், அரன்கழல் செலுமே.

---

### முதற்பாடம்

உயிர் தன்னியல்பறியாது கருவிகளால் மயங்கி நிற்கும்.

---

உயிர் ஐம்பொறி முதலிய கருவிகளோடு கூடிப் புறத்து விஷயங்களை அறியுமென்றோம்.* அவ்வாறு கூடியறியும் உயிர் தன்னியல்பினையும் அறியுமா? என்பதை யாராய்வாம். ஓர் அரசகுமாரன் தன்னறிவு விளங்கிய காலமுதல் வேடர் சேரியில் வளர்ந்துவருவனாயின், தன்னை வேடனாகவே மயங்கி யுணர்வான். தான் அரசகுமாரன் என்பதையும் உணரான். அவனியல்பும் வேடரியல்பாகவே காணப்படும். அரச உதிரம் அவனிடத்திருந்தாலும், அரச இயல்பு அவனிடத்துக் காணப்படாது. உயிர் கருவிகளின் கூட்டுறவில் வளரும் போதும் அப்படியே. அக்காலத்துத்தன்னியல்பறியாது, கருவிகளினியல்பையே தன்னியல்பென மயங்கி நிற்கும். தனக்கு வியாபக அறிவு உண்டென அறியமாட்டாது. அது வியாபித்தறிதலுமில்லை. கண் காணுந்தூரத்திலுள்ள விஷயத்தையே உயிர்கண்டறியும். காது கேட்குந் தூரத்திலுள்ள விஷயத்தையே உயிர் கேட்டறியும். அப்படியே மற்றக் கருவிகள் அறியும் அளவிலேயே உயிர் அறியும். அக்கருவிகள் அறியும் அளவிற்கதிகமாகத் தனக்கு அறியுஞ் சக்தி யுண்டென்பதை உயிர் அறியாது மயங்கி நிற்கும்.

* சூ. III. பா. 4.

இக்கருத்தையே, இச்சூத்திரம் 'ஐம்புல வேடரின் அயர்ந் தனை வளர்ந்து' என்றுணர்த்தும். ஈண்டு 'ஐம்புலன்' என் றது, ஐம்பொறி முதலிய கருவிகளனைத்தையும். 'அயர்ந்தனை வளர்ந்து' என்பதை 'வளர்ந்து அயர்ந்தனை' என மாற்றிப் பொருள் கொள்ளல்வேண்டும்.

---

## இரண்டாம் பாடம்

### சிவம் உயிர்க்கு அதனியல்பை உணர்த்தும்.

உயிர் கருவிகளினியல்பைத் தன்னியல்பென மயங்கி நிற்குமென்று சொன்னோம்.* இவ்வுயிர் தன்னுண்மை யியல்பை எதனால் அறியுமென்பதை யாராய்வாம். உயிர் யாதானுமொன்றா லுணர்த்தப்படினன்றி உணராதென்றோம்.† அசத்துப் பொருள்களாகிய கருவிகள் உணர்த்தும். அல் லது சத்தாகிய சிவம் உணர்த்தும். கருவிகளோ உயிர்களைத் தம்மியல்பறியாது மயங்கச் செய்யுமென்றோம்.‡ இக்கருவி கள் மாயாகாரியமாதலால் மயக்கத்தையுண்டாக்குவதாகும். இவைகள் உயிர்க்கு அதன் உண்மையியல்பை உணர்த்த மாட்டா. இவையன்றி உயிர்க்குணர்த்துவது சிவமே யென் றோம். அச்சிவமும் உயிர்க்கு உண்மை யியல்பை யுணர்த் துமா? என்பதை யாராய்வாம். சிவம் மாயாகாரியமன்று. மயக்க உணர்வைத் தராது. கருவிகள்போலச் சுட்டுப்பொ ருளுமன்று. சுட்டுப் பொருள்களால் உயிரின் அறிவு விளங் கும்போது ஏகதேசமாய் விளங்குவதுபோல, இச்சிவத்தால் விளக்கப்படும் உயிரின் அறிவு ஏகதேசமாதலில்லை. இச்சிவத் தோடு சிவமாய் நின்றறியும் உயிரும், அதன் வியாபக அறி வைத் தன்னறிவென மயங்காது. சூரியனொளிபாற் காணுங்

* சூ. VIII. பா. 1. †, சூ. III பா. 3. ‡ சூ. VIII. பா. 1.

கண்ணும் அவ்வொளியைத் தன்னொளியென மயங்காதது போல, உயிரும் சிவத்தினறிவைத் தன்னறிவென மயங்குத லில்லை. அவ்வறிவால் தன்னுண்மை யியல்பினையே அறியும். வேடர் சேரியில் வளர்ந்துவந்த அரச குமாரனுக்கு 'நீ அரச குமாரன். அரச வாழ்வு யாவும் உன்னுடையதே' என்று அவன் பிதா உணர்த்த அக்குமாரன் உணர்வதுபோல், உயிர்க்கும் 'நீ கருவிகள்போல் ஜடமல்லை. நீ சித்து. என்பானுள்ள பேரின்பமுற்றும் உன்னுடையதாதற்குரியதே' என்று, அதன் முதல்வனாகிய சிவம் உணர்த்த, உயிரும் அதனையு ணர்வதாகும். இவ்வுணர்ச்சியால், உயிர் தத்துவங்களாகிய கருவிகளினியல்பையும் தன்னியல்பையும் பிரித்து உணர்வ தால், இது தத்துவ ஞானமென்று சொல்லப்படும். இக்கருத் தையே இச்சூத்திரம், 'எனத்தம்முதல்......உணர்த்த' என்றோதிபது.

---

## மூன்றும் பாடம்

சிவம் உயிர்க்கு அதனியல்பைக் குருவுமாயுணர்த்தும்.

சிவம் உயிர்க்கு அதனியல்பை யுணர்த்துமென்றோம்.* எக்காலத்தும் எல்லா உயிாகட்கும், உள்நின்றுணர்த்துமென் றுஞ் சொன்னோம்.† உயிர்க்கு அதனியல்பையுணர்த்து வதும் அவ்வாறு? அன்றி வேறுவிதமா? என்பதையா ராய்வாம். சிவம் உயிர்க்கு உள்நின்றுணர்த்துவது அவ்வுயி ரின் பொதுவியல்பே, அதாவது உயிர் கருவியோடு கூடியறி யும்போது அதன்பாற் காணப்படுமியல்பே. ஈண்டுச் சிவம் உணர்த்துவதாய்க் கூறுமியல்பு அக்கருவிகளினின்றும் அவற்றின் வாசனையினின்றும் நீங்கியபோது, உயிரினிடத்துக்

* சூ. VIII பா. 2. † சூ. II பா. 5.

காணப்படுமியல்பு. அதாவது அதன் சிறப்பியல்பாம். இச்சிறப்பியல்பையும் சிவம் உள்நின்றுணர்த்தினுல் எல்லா உயிர்களும் உணரா. அன்றியும், இவ்வியல்பை எல்லா உயிர்களும் ஒன்றுபோலுணரா. ஒரு பள்ளியிற் கற்கும் பலதிறத்து மாணவர்களும் ஓர் ஆசானுலுணர்த்தப்பட்டவழியும், ஒன்றுபோல் எல்லா விஷயங்களையு முணரார். சிலசாமான்ய விஷயங்களையே அவ்வாறுணர்வார். அரிய பெரிய விஷயங்களை அவ்வாறுணரார். அவ்விஷயங்களை அவர்கட்குப் படிக்கிரமமா யுணர்த்தவேண்டும். அம்மாணவர்களைச் சில வகுப்பினராகப்பிரித்து, ஓர் வகுப்பினக்கு ஒருசேர உணர்த்தப் படும். மற்றொரு வகுப்பினர்க்குத் தனித்தனி சுலபமாயுணர்த்தப்படும். வேறு ஒரு வகுப்பினர்க்குத் தனித்தனி யழுத்தியு முணர்த்தப்படும். சிவம் உயிர்க்குச் சிறப்பியல்பை யுணர்த்துவதும் இவ்வாறே. உயிர்களும் அறியாமைத் திட்பத்திற்கேற்ப மூன்றுபிரிவி லடங்கும். அவைகளின் அறியாமைக்குக் காரணம் ஆணவமலமென்று சொன்னேம். இவ்வாணவம் ஓர் வகுப்புயிர்களைச் சொற்பமாய், அதாவது சூக்குமமாய்ப் பிணித்துநிற்கும். இவ்வகுப்புயிர்களே விஞ்ஞானகலர் எனப்படுவர். இவ்வுயிர்கட்கு மாயா கன்மங்களின் பந்தமில்லை. மற்றோர் வகுப்புயிர்களை இவ்வாணவம் சிறிது அதிகமாய், அதாவது தூலமாய்ப் பிணித்துநிற்கும். இவ் வகுப்புயிர்களே பிரளயாகலரெனப்படுவர். இவ்வுயிர்கட்கு மாயையின் பந்தமில்லை. வேறொரு வகுப்புயிர்களை இவ்வாணவம் மிக அதிகமாய், அதாவது தூலதரமாய்ப் பிணித்து நிற்கும். இவ்வகுப்புயிர்கள் சகலரெனப்படுவர். இவ்வகுப்பினையே நாம் சேர்ந்துளோம். நமக்கு ஆணவமாயா கன்மங்களாகிய மூன்றின் பந்தமுமுண்டு. இவ்வாறு மூன்று விதமான அறியாமைத் திட்பத்தையுடைய உயிர்கட்கும் சிவம்

ஒன்றுபோலுணர்த்தின் அவ்வுயிர்கள் யாவும் அறியமாட்டா. அதனாலேயே, சிவம் உயிர்கட்கு மூன்று வேறு விதங்களாயுணர்த்தும். விஞ்ஞானகலர்க்குப் பொதுவியல்பை யுணர்த்துவதுபோல, சிவம் உள்நின்றுணர்த்தினாற் போதும். பிரளயாகலர்க்கு அது போதாது. அவ்வுயிர்கட்கு உபதேச முகத்தாலு முணர்த்தவேண்டும். அவ்வாறுணர்த்துதற்கே சிவம் தன்னியற்கை வடிவாகிய நாற்றோள் முதலியவற்றோடுகூடி அவ்வுயிர்களின் முன் தோன்றியும் உணர்த்தும். இவ்வுபதேசமும், சகலவர்க்கத்தவராகிய நமக்குப்போதாது. நமக்கு நூல்முகமாயும் அனுபவமுகமாயும் உணர்த்தவேண்டும். இவ்வாறுணர்த்தற்குச் சிவம் தன்னியற்கை வடிவிற்றோன்றி உணர்த்தினால் மட்டும் போதாது. ஓர் குருவடிவிற்றங்கி நின்று நூல்முகத்தாலும், அனுபவமுகத்தாலும் உணர்த்த, நாமும் அவ்வுபதேச மொழிகளைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துணரவேண்டும். இவ்வாறு சிவம் நமக்கு உணர்த்துதலையே இச்சூத்திரம் 'தம்முதல் குருவுமாயுணர்த்த' என்றோதியது. ஈண்டுக் 'குருவுமாய்' என்பதிலுள்ள உம்மைச்சொல்லால், நமக்கு இதுகாறும் உள்நின்றுணர்த்தியதுமன்றிக் குருவுமாய் முன்னின்று முணர்த்துமென்பது பெறப்படும்.

---

## நான்காம் பாடம்

சிவம் தவம் முற்றிய உயிர்க்கே அதன் சிறப்பியல்பை யுணர்த்தும்.

சிவம் மூன்று வர்க்கத்துயிர்கட்கும் மூன்று வேறு விதங்களாக அவற்றின் சிறப்பியல்பை யுணர்த்துமென்றோம்.* என்றால், இவ்வுயிர்களனைத்திற்கும் எக்காலத்தும்

* சூ. VIII பா. 3.

அவற்றின் சிறப்பியல்பை யுணர்த்துமா? அன்றி உயிர் கட்கு, அவ்வியல்பினை அறிதற்குரிய பக்குவம் வந்தகாலத்து மாத்திரம் உணர்த்துமா? அப்பக்குவம்தான் யாது? என் பதை யாராய்வாம். உயிர்கள் தனித்தனி முற்பிறவிகளிற் செய்த வினைக்கேற்பச் சிவம் அவைகட்கு இன்ப துன்பங்க ளைத் தருமென்றோம்.† நல்வினைக்கேற்ப இன்பத்தையும், தீவினைக்கேற்பத் துன்பத்தையும் தருமென்றோம். இநநல் வினையே புண்ணியம் அல்லது தவம் எனப்படும். இத்தவத் திற்கேற்பவே உயிர் எவ்வகை யின்பத்தினையும் அடையும். நிலையுறுதலில்லாத சிற்றின்பங்களாகிய போக போக்கியங் கட்கும், நிலையுறுதலையுடைய பேரின்பமாகிய மோக்ஷத்திற் கும் காரணம் இத்தவமே. இத்தவமும், அதனாற்றரப்படு பலன்கட்கேற்ப, பசு புண்ணியம் சிவ புண்ணியம் என இரு வகைப்படும். இவற்றுள், பசுபுண்ணியமாவது, உலகபோகங் களைத் தருவது. இவைகளே, வேதாதிகளிற் கூறப்படும் வேள்வி யாதி தர்மங்கள். இவைகளைக் கூறும் நூல்களே இவற்றாற்றரப்படும் போகபோக்கியங்களையும் உடன் கூறும். இத்தர்மங்களும் அவற்றாற்றரப்படு பலன்களும் சிறிது காலத்தில் அழிவெய்தும். இத்தவமியற்றுவார், பசித்துண்டு பின்னும் பசித்தாரை யொப்பார். இதுவன்றிச் சிவ புண்ணி யமாவது, சிவாகமங்களிற் கூறப்படும் சரியை கிரியாயோகங் கள். இவற்றாற்றரப்படு பலன்கள், சாலோகாதி சிவபதங்கள். இச்சிவபதங்களாகிய பலன்களும் மேற்கூறிய சரியையாதி தவங்களால் இடையிற்றரப்படுவனவே. இப்பலன்களை யன்றி இத்தவங்கள் வேறு பலன்களையுந்தரும். சரியை கிரி யையையும், கிரியை யோகத்தையும், யோகம் ஞானத்தை யுந் தரும். இந்த ஞானமே, சிவத்தாலுணர்த்தப்படுமென்று

† சூ. II பா. 3.

மேலே கூறிய ஞானம். இந்த ஞானத்தை யுணர்தற்குரியார், சரியை கிரியா யோகங்களில் முற்றியவரே. அதனாலேயே சிவம் இந்த ஞானத்தைச் சரியை கிரியா யோகங்களில் முற்றிய உயிர்கட்கேயுணர்த்தும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'தவத்தினி லுணர்த்த' என்றோதியது. ஈண்டுத் 'தவம்' என்றது சரியையாதி சிவதர்மங்கள் என்பதை இச்சூத்திரத் திறுதியிலுள்ள 'அரன்' என்னுஞ்சொல் குறிப்பாலுணர்த்தும்.

---

## ஐந்தாம் பாடம்

தன் சிறப்பியல்புணர்ந்த உயிர், கருவிகளனீங்கிச் சிவத்தை நாடிச்செல்லும்.

தவம் முற்றிய உயிர்க்கே சிவம் அதன் சிறப்பியல்பை உபதேசித்துணர்த்துமென்றோம்.* இவ்வுபதேசத்தால் உயிர்க்குவரும் பலன் யாது என்பதை யாராய்வாம். வேடர் சேரியில் வளர்ந்து தன்னியல்பறியாது மயங்கிநின்ற அரசகுமாரன் 'நான் வேடனல்லன் அரசகுமாரன், என் பிதாவாகிய அரசன்பாலுள்ள ஐசுவரிய முழுமையும் யான் அனுபவித்தற்குரியதே' என்றுணர்ந்ததும், அவ்வேடர் கூட்டுறவினின்றும் நீங்கி அவ்வரசனை நாடிச் செல்வன். அதுபோலவே, கருவிகளின் கூட்டுறவிற்றங்கித் தன்னியல்பறியாது மயங்கிநின்ற உயிரும் சிவத்தினுபதேசத்தால் 'நான் ஜடமல்லன், சித்து: என் முதல்வன்பாலுள்ள பேரின்ப முழுமையும் யான் அனுபவித்தற்குரியதே' யென்றுணர்ந்ததும், அக்கருவிகள் கூட்டுறவினின்றும் நீங்கி அம்முதல்வனை நாடிச்செல்லும்.

* சூ. VIII பா. 4.

ஆனால், அரசகுமாரன் வேடர் சேரியினின்றும் நீங்கி, அரசன் மாளிகையை நோக்கிச் செல்லவேண்டுமாபோல, உயிர் ஓரிடம் நீங்கி ஓரிடம் செல்லவேண்டுவதில்லை. உயிர் பெத்தத்திலும் வசித்திடவரும் வியாபகப்பொருள் என்றோம். அது கருவிகளோடு நிற்கும்போதும் அக்கருவிகளினியல்பு தன்னியல்பன்றெனக் கழித்தலே அவற்றைவிட்டு நீங்குதலாம். அதுபோலவே, உயிர் சிவத்தின் இருப்பிடம் நோக்கிச் செல்லவேண்டுவதுமில்லை. சிவம் எல்லாப்பொருள்களிலும் வியாபித்துநிற்பது. ஒவ்வொரு பெத்த உயிரோடும் அவ்வுயிரேயாய் நிற்கும் என்றுஞ்சொன்னோம்.† இச்சிவம் இவ்வாறு அந்நியமின்றி நிற்றலையுணர்தலே அதனைக் காணுதலாம். இவ்வுணர்ச்சி பெறுதற்கான சாதகங்களைச் செய்தலே அதனைநாடிச் செல்லுதலாம். இச்சாதகங்கள் சரியை கிரியா யோகங்களில் முற்றி, ஞானநெறியிற் கிடப்போராற் செய்யக்கடப்பன. இச்சாதகங்கள் வருஞ் சூத்திரங்களில் விளக்கப்படும். இக்கருத்துக்களையே இச்சூத்திரம், 'விட்டு அந்நியமின்மையின் அரன் கழல்செலுமே' என்றுணர்த்தும்.

எட்டாஞ் சூத்திரம் முற்றிற்று

† சூ. II பா. 5.

## ஒன்பதாம் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி,
உராத்துனைத் தேர்த்துளனப் பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதி, விதியெண்ணும் அஞ்செழுத்தே.

---

### முதற்பாடம்

தன்னியல்பு உணர்த்தப்பெற்ற உயிர், சிவத்தைத் தன்னுள்ளே
சிவோகம் பாவனை செய்து நாடும்.

---

*தன்னியல்பு உணர்த்தப்பெற்ற உயிர் சிவத்தை நாடுமென்றோம்.** எங்கே? எவ்வாறு? நாடுமென்பதை ஆராய்வாம். சிவம் சித்துப்பொருள். அதனைப் பசுஞான பாசஞானங்களால் அறியமுடியாதென்றோம்.† பாசஞானமென்பது கருவிகளினுதவியாலறிதலென்றும்; பசுஞானமென்பது அக்கருவிகளின் வாசனை யுதவியாலறிதலென்றுஞ் சொன்னோம்.‡ எனவே, சிவத்தை அறிதற்கண் பாசஞான பசுஞானங்களிரண்டும் பயன்படாவென முடியும். 'ஊனக்கண் பாசமுணராப்பதி' என இச்சூத்திரம் கூறியதன் கருத்து இதுவே. ஈண்டு 'ஊனக்கண்' என்றது குறைவினையுடைய அறிவாகிய பசுஞானத்தையும்; 'பாசம்' என்றது பாசஞானத்தையும் உணர்த்தின. 'கண்' என்பதற்கு 'அறிவு' என்பது பொருள். 'பதி' என்பது சிவத்தை உணர்த்தியது. இப்பதி, பசுஞான பாசஞானங்களானறியப்படானாக; வேறெந்த ஞானத்தாலறியப்படுவன் என்பதை அடுத்து ஆராய்வாம்.*

* சூ. VIII. பா. 5. †, ‡ சூ. VI. பா. 3.

உயிர் தன்னியல்பையும் அறியாது நின்றது. அதனை அறிதற்கண்ணும், மேற்கூறிய பாசஞான பசுஞானங்கள் பயன்படவில்லை. அதனை உயிர்க்குபதேசித்துணர்த்துதற் பொருட்டே, சிவம் குருவுமாய் வந்துதவியதென்றோம்.§ இவ்வுபதேச ஞானத்தால், உயிர், தன்னியல்பை யுணர்வதோடு, தானும் சிவமும் ஒரு ஜாதிச் சித்துப்பொருளெனவும் உணருமென்றோம்.|| அதாவது, சிவத்தின் தன்மையை ஒரு சிறிதும் அறியாது நின்ற உயிர்க்கு, அச்சிவத்தை அறிதற்கு, முதல் முதல் வழிகாட்டி உதவியது, இவ்வுபதேச ஞானமே என முடியும்.¶ இவ்வுபதேச ஞானத்தாலுணர்த்தப்பட்ட வழியிலேயே, சிவத்தை நாடவேண்டுமெனவும் முடியும். இம்முடிபையே இச்சூத்திரம், 'ஞானக்கண்ணினில் நாடி' என்றுணர்த்தியது. ஈண்டுள்ள 'ஞானம்' முற்சூத்திரத்தில் சிவம் உயிர்க்கு அதனியல்பை யுணர்த்தியதாய்க் கூறியுள்ள ஞானம். இது நிற்க, இவ்வுபதேச ஞானத்தை உதவியாகக் கொண்ட உயிர் அவ்வுதவிகொண்டு சிவத்தை எங்கே? எவ்வாறு? நாடுவது என்பதையும் ஆராய்வாம்.

தான் வேடனல்லன், தானும் தன் பிதாவும் அரச ஜாதி என்று தெரிந்துகொண்ட அரசகுமாரன் தன் பிதாவை வேடர் சேரியிற் தேடான். அரசன் மாளிகையிலேயே தேடுவான். அப்படியே, தான் ஜடமன்று, தானும் சிவமும் சித்து ஜாதிப்பொருள்கள் என்றுணர்ந்துகொண்ட உயிர், அச்சிவத்தை ஜடப்பொருள்களுள்ளே தேடாது. சித்துப்பொருள்களுள்ளேயே தேடும். ஆனால், வேடர் சேரியும் அரசன் மாளிகையும் வெவ்வேறிடங்களிலிருப்பனபோல், ஜடப்பொருள்களும் சித்துப்பொருள்களும் வெவ்வேறிடங்களி

§ சூ. VIII. பா. 3. || சூ. VIII பா. 2. ¶ சிவஞானசித்தியார் 8 சூ. 35-ம் திருவிருத்தத்திற்குச் சிவஞானசுவாமிகள் உரையைப்பார்க்க.

விருப்பனவல்ல. சித்துப்பொருள்கள் யாவும் அறிவாகாரப் பொருள்கள். அவைகளின் இருப்பை ஜடப்பொருள்களின் இருப்பு ஒரு சிறிதும் பாதியாது. அவைகள் ஜடப்பொருள் களினூடெல்லாம் வியாபித்து நிற்கும் பொருள்கள். இவ்வாறு வியாபித்து நிற்கும் எல்லாச் சித்துப்பொருள்களினுள்ளும் சிவத்தைத் தேடவேண்டுவதில்லை. யாதானும் ஓர் சித்துப்பொருளினுள்ளே தேடுவதே போதும். தன்னுள்ளே தேடுவதே போதும். தன்னியல்பினையே சிவத்தினுபதேசத்தால் உயிர் அறிந்துள்ளதென்றோம்.** எனவே இவ்வாறு தன்னியல்பறிந்துள்ள உயிர் சிவத்தைத் தன்னுள்ளேயே நாடும் என்பது பெறப்படும். இக்கருத்தை யுணர்த்தவே இச்சூத்திரம் 'சிந்தை நாடி' என்றோதியது. இனி இவ்வுயிர் தன்னுள்ளேயும் எவ்வாறு நாடும்? என்பதை ஆராய்வாம்.

உயிரறிவின் வியாபகம் ஆணவ முனைப்பாற்றடைப் பட்டுச் சுட்டுத் தன்மையடைந்துள்ளதென்றோம்.†† சிவத்தின் அறிவு அவ்வாறன்று. அவ்வறிவுக்கு ஆணவத்தடை எக்காலத்தும் எத்துணையுமில்லை. அவ்வறிவு எக்காலத்தும் வியாபகமாயுள்ள அறிவு. இவ்வாறு வியாபகமாயுள்ள சிவத்தை மேற்கூறியவாறு சுட்டுத்தன்மையடைந்துள்ள உயிர் எவ்வாறு நாடுவது? என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது. இச்சுட்டுத் தன்மையுள்ளவரை உயிர் சிவத்தை அறியமுடியாதென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படும். ஆணவ முனைப்பு நீங்கும்வரை இச்சுட்டுத்தன்மையும் உயிரை விட்டு நீங்குமாறில்லை. என்றாலும், யாதானும் உபாயத்தால் ஒரு சிறுபொழுதேனும் இவ்வாணவ முனைப்பை யடக்கமுடியுமேல், அப்பொழுது அதனையடக்கிய உயிர் சுட்டுத்தன்மை

** சூ. VIII பா. 2. †† சூ. I பா. 11.

யினின்றும் நீங்கிச் சிவத்தை ஒருவாறு அறியும் என்பதாய் முடியும். இத்தகைய உபாயம் உண்டா? என்பதை யாராய் வாம். விஷமுனைப்பை யடக்குஞ் சக்தி, மாந்திரிகனிடத்து இயற்கையில் இல்லை. கருடதெய்வத்தினிடமேயுண்டு. என் றாலும், அம்மாந்திரிகனும் தன்னைக் கருடனாகப் பாவித்துத் தியானிக்க, அவனிடத்தும் ஒரு சிறுபொழுது விஷமுனைப் பையடக்குஞ் சக்தியுண்டாவதை யறிவோம். ஆனால் அம் மாந்திரிகனிடத்து அச்சக்தி எக்காலத்தும் நிலைத்திருப்ப தில்லை. எப்பொழுது அச்சக்திவேண்டுமோ அப்பொழுது தன்னைக் கருடனாகப் பாவித்துத் தியானித்து அச்சக்தியைப் பெறுகின்றான். இப்பாவனை கருடோகம்பாவனையெனப் படும். இதுபோன்ற பாவனையாலும் தியானத்தாலும், ஆணவமுனைப்பைப்படக்குஞ் சக்தியினையும் பெறலாம். இச் சக்தி சிவத்தினிடத்துமாத்திரமுளதேனும், உயிரும் தன்னைச் சிவமாகப் பாவித்துத் தியானிக்க, அத்தியானகாலத்து அச் சக்தியினைப் பெறுதல்கூடும். இப்பாவனை சிவோகம்பாவனை யெனப்படும். இப்பாவனையால் ஆணவமுனைப்பு உயிரின் கண் மீளக்கிளம்பாதபடி அடங்கிவிடுமென்பதன்று. இப் பாவனைக்காலத்து அடங்கிநிற்பதிற்றடையில்லை. இக்காலத்து உயிர் சுட்டுத்தன்மையோடு கூடிநில்லாது. இக்காலத்து இவ் வுயிர் வியாபகமாயுள்ள சிவத்தினை யறிதற்குரியதாகும். என் றால், இச்சிவோகம்பாவனையே சிவத்தைத் தன்னுள்ளே நாடும் விதமாம் எனமுடியும். இம்முடிபையே இச்சூத்திரம் 'சிந்தை நாடி' என்றோதியது. ஈண்டு 'நாடி' என்றது பரந்து திரிந்து தேடுதலையன்று. வியாபக சிவத்தை அவ்வாறு தேட வேண்டுவதில்லை. பாவித்துத் தேடுதலே போதும். இத் தன்மைத்தான தேடுதலையே, இச்சூத்திரத்து 'நாடி' என் னுஞ் சொல் உணர்த்தும்.

## இரண்டாம் பாடம்

சிவோகம்பாவனை செய்யும் உயிர்க்குப் பாசப்பொருள்கள் விரைந்து மறையும்.

உயிர் சிவோகம் பாவனையால் ஆணவமுனைப்பினையடக்குஞ் சக்தியினைப் பெறுமென்றோம்.* அம்முனைப்புக் குறையக் குறைய உயிரறிவின் சுட்டுத்தன்மையும் குறைந்து, அவ்வறிவின் வியாபகத்தன்மையும் அதிகரித்துவருமென்பதாய் முடியும்.† ஆனால் இச்சிவோகம்பாவனை ஒரே பொழுதில் செய்துமுடிக்கப்படுவதன்று. சிறிது சிறிதாய்ப் பழகிவர வேண்டுவது. இப்பாவனையின் பழக்கம் பெருகப்பெருக, இப்பாவனைக் காலத்தில் உயிரறிவின் வியாபகத்தன்மையும் உடன் பெருகுவதாகும். என்றால் இப்பாவனையிற் பழகிவரும் உயிர்க்குப் பாசப்பொருள்கள் எவ்வாறு விஷயமாகுமென்பதை யாராய்வாம். இப்பாவனைசெய்யும் உயிரறிவின்வியாபகத்தன்மை படிப்படியாய் அதிகரித்துவருமென்றோம்.‡ பாசப்பொருள்கள் யாவும் சுட்டுப்பொருள்களென்றும், அவை சுட்டறிவிற்கே விஷயமாகுமென்றுஞ் சொன்னோம்.§ எனவே, உயிர் சிவோகம் பாவனையிற் பழகப் பழக, அவ்வுயிர்க்கு விஷயமாய் நின்ற பாசப்பொருள்களும் மேலும் மேலும் விரைவாய் மறையுமென முடியும். இம்முடிபையே இச்சூத்திரம் 'ஊராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவ' என உணர்த்தும். அதாவது பாசப்பொருள்கள் பேய்த்தேர்போல ஓடி மறையுமென்பது கருத்து. ஈண்டு 'ஊராத்துனைத்தேர்த்துஎன' என்ற வாக்கியத்திலுள்ள 'ஊரா' என்னுஞ்சொல், ஓடித்திரிதலையும், 'துனை' என்பது வேகத்தினையும், 'தேர்' என்பது பேய்த்தேர் எனப்படும் கானல் ஜலத்தையும் உணர்த்தும். இவ்

* சூ. IX. பா. 1. † சூ. IX. பா. 1. ‡ சூ. IX. பா. 1. § சூ. VI. பா. 1.

வாக்கியத்தின் பொருள் 'ஓடித்திரிதற்கண் வேகத்தையுடைய பேய்த்தேரின் இயல்புடையது என' என்பது.

---

## மூன்றும் பாடம்

சிவோகம் பாவனையில் முற்றிய உயிர்
சிவத்தின் ஞானசொரூபத்தைக் காணும்.

சிவோகம் பாவனையில் உறைத்து நிற்கும் உயிர்முன் பாசப்பொருள்கள் விரைந்து மறையுமென்றோம்.* என்றால் அவ்வுயிர்முன் அப்பாவனையின்போது விளங்கித்தோன்றுவது எது? என்பதை யாராய்வாம். படிகத்திற்கென்று ஓர் சொரூபமிருப்பினும் அதனை அடுத்து நிற்கும் பொருள்களின் நிறங்கள் அச்சொரூபத்தினை விளங்கவொட்டாது மறைக்கும் என்பதை அறிவோம். ஆனால் அவ்வேற்று நிறங்களைப் படிகத்தின் நிறமல்லவென்று கண்டு அவ்வேற்று நிறப்பொருள்களை அகற்றிய ஒருவனுக்கு விளங்கித்தோன்றுவது அப்படிக சொரூபமே. அதுபோல, உயிரறிவின்கண் வியாபித்துள்ள சிவசொரூபம் உயிர்க்கு விளங்கவொட்டாது மறைத்து நிற்பன அவ்வுயிரை அடுத்து நிற்கும் பாசப்பொருள்களினியல்புகளே. இப்பாசப்பொருள்கள் சிவோகம்பாவனையால் உயிர்க்கு விளங்கித்தோன்றாது மறைய; அப்பாவனையின் போது அதனறிவில் விளங்கித்தோன்றுவது சிவத்தின் ஞானசொரூபமே. அதாவது சிவத்தினருள் வடிவே. இவ்வடிவம் விளங்கும்வரை உயிர் பாசப்பொருள்களால் வரும் துயரவெப்பத்திலழுந்திக்கிடக்கும். அவ்வுயிர்க்கு சிவோகம்பாவனையின்போது இந்த ஞானவடிவமே தண்ணிழல்

* சூ. IX பா. 2.

போல உதவிப் பாசப்பொருள்களால் வருந்துயரத்தை மாற்றும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'தண்ணிழலாம்பதி' என்றுணர்த்தும். ஈண்டுப் 'பதி' என்றது பதியின் ஞானசொரூபத்தை உணர்த்தும்.

---

## நான்காம் பாடம்.

*சிவத்தின் ஞானசொரூபத்தைக் கண்ட உயிர், அக்காட்சியிலுறைத்து நிற்றற்கு முத்திபஞ்சாக்கரத்தை யுச்சரிக்கவேண்டும்.*

சிவோகம்பாவனையிலுறைத்து நிற்கும் உயிர்க்குச் சிவஞான சொரூபம் விளங்கித் தோன்றுமென்றோம்*. என்றால், அச்சொரூபக் காட்சியில் உயிர் பிறழாதிருத்தலும் வேண்டும். அவ்வுயிர் சிவோகம்பாவனையிற் சிறிது குன்றுமேல், மீளவும் அதற்கு ஆணவமறைப்பு மேற்பட்டு, பாசப்பொருள் விஷயமாகிச், சிவஞான சொரூபமும் விளங்காது மறையும். இவ்வாறன்றி, அச்சொரூபக் காட்சியில் உயிர்நிலைநிற்றற்கு யாது உபாயம் என்பதை யாராய்வாம். ஓர் நூலை நாம் படிக்கும்போது அந்நூலிலுள்ள விஷயங்களில் நம் சிந்தனையை நிறுத்த விரும்புகின்றோம். நம்சிந்தனையோ எதனினும் இடையீடின்றி நிற்றலில்லை. ஒரோ வேளை திடீரென மாறுவதுமுண்டு. அவ்வாறு மாறவொட்டாது தடுப்பதற்கான சில உபாயங்களையுஞ் செய்கிறோம். அவ்வுபாயங்களிற் சிறந்தது, படிக்கும் விஷயங்களைச் சரிவர உணர்த்துஞ் சொல்லைத் தன் மனதினுள்ளே சொல்லுதல், அதாவது, எந்த விஷயம் நம்சிந்தனையில் நிலைபெறவேண்டுமோ அந்த விஷயத்தைச் சரிவர உணர்த்துஞ் சொல்லை நம் மனதினுள்ளே

* சூ. IX. பா. 3.

சொல்லுதலாம். சிவோகம் பாவனை செய்யும் உயிரும், அப் பாவனையிலும் அதன்கண் விளங்கும் சிவஞானக் காட்சியிலும் நிலைநிற்றற்கு, இவ்வுபாயத்தைப்போன்றதோர் உபாயத்தைச் செய்துகொள்வது அவசியம். அதாவது உயிர்க்குப் பாசப்பொருள்கள் விஷயமாகாது மறைந்தொடுங்க, அவ்வுயிர் சிவஞானக் காட்சியைப் பெறும் என்னும் உண்மை விளக்குஞ் சொல்லைத் தன்னறிவினுள்ளே கணித்தல்வேண்டும். இச்சொல் 'முத்தி பஞ்சாக்கரம்' எனப்படும். இம்மந்திரத்தின் உருவத்தையும் பொருளையும் அனுபவத்தில் உணர்ந்துள்ளார், சிவோகம்பாவனையில் மிகப்பழகிச் சிவ ஞானக் காட்சியில் அழுந்திநிற்கும் ஞானாசாரியரே. இத்தகைய ஆசிரியரிடத்தே அம்மந்திரத்தை உபதேசக்கிரமமாய்த் தெரிந்துகொள்ளல்வேண்டும். இக்கருத்துக்களையெல்லாம் உணர்த்தவே இச்சூத்திரம் 'விதியெண்ணு மஞ்செழுத்தே' என்றோதியது. ஈண்டுள்ள 'விதி' என்பதற்கு விதிப்படி என்பது பொருள். அதாவது எந்த வரிசையில் இம்மந்திரத்திலுள்ள ஐந்து அக்ஷரங்களும் தொடுக்கப்பட்டால் அம்மந்திரம் மேலே விளக்கப்பட்ட பொருளைத் தருமோ அந்த வரிசையில் என்பது பொருள். 'எண்ணும்' என்னுஞ் சொற்கு 'எண்ணுக' அதாவது அறிவினுள்ளே உச்சரிக்க என்பது பொருள்.

ஒன்பதாம் சூத்திரம் முற்றிற்று

# பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி, இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினையின்றே.

---

## முதற்பாடம்

சிவஞான சொரூபம் விளங்கப்பெற்ற உயிர் அச்சிவத்தோடு
ஒற்றித்து நிற்றல்வேண்டும்.

---

சிவோகம் பாவனை செய்யும் உயிர்க்கு, அப்பாவனைக் காலத்துச் சிவம் விளங்குமென்றோம்.* அக்காலத்து அதற்குப் பாசப்பொருள்களிலெதுவும் விளங்காதென்றுஞ் சொன்னோம்.† உயிர் பாசப்பொருளன்று. ஆதலால் சிவோகம் பாவனைசெய்யும் உயிர்க்குத் தனக்குத்தானும் விளங்காது மறையுமென்பதன்று. அசாவது சிவோகம் பாவனைக் காலத்து இவ்வுயிர்க்குத தானெனும் அறிவும் உடன் விளங்குவதாகும். எல்லாம் தானென நிற்கும் உயிர்க்குப்போலத் தன்னை வேறுகாணும் உயிர்க்கும் உயிருணர்வே முனைத்து நிற்கும். இவ்வுயிருணர்வும் சுட்டுணர்வே யென்றோம்.‡ இச்சுட்டுணர்வு முனைத்து நிற்கும்வரை, உயிர் வியாபகமாயுள்ள சிவத்தை அறிதல் முடியாது. ஆனால், சிவோகம் பாவனையின்போது உயிர்க்குச் சிவம் விளங்குமென்றோமே யெனின்?§ கூறுவோம். இப்பாவனையின்போது கிடைத்த சிவ விளக்கம் ஏகதேச விளக்கமேயன்றி வேறில்லை. என்றாலும் இப்பாவனையின்றி, உயிர்க்குச் சிவம் ஒரு சிறிதும்

* சூ. IX. பா. 3. †, சூ. IX. பா. 2. ‡ சூ. VI. பா. 3. § சூ. IX பா. 3.

விளங்காதாதலால், இப்பாவனை அவசியம் செய்துமுடிக்கற்பாலதே. ஆனால் இப்பாவனை முற்றிய உயிர் அவ்வளவில் நின்றுற்போதாது. இப்பாவனையினின்றும் நீங்கி, அதன்கண் விளங்கிய சிவத்தினைத் தனக்கு வேறு காணுதிருத்தற்கான உபாயத்தைச் செய்தலும் வேண்டும். இவ்வுபாயம் யாது? என்பதை யாராய்வாம். உயிர் கருவிகளோடுகூடி அறியுங்காலத்தும் சிவம் அவ்வுயிரினை அதிஷ்டித்து நிற்குமென்றோம்.|| ஆனால் அக்காலத்துச் சிவம் சிறிதும் உயிர்க்கு விளங்கவில்லை. சிவம் அவ்வுயிரேயாய் நின்றது. சிவோகம் பாவனையினுற் சிவ விளக்கப்பெற்ற உயிரும் இவ்வாறு நிற்றல் வேண்டும். அதாவது தானெனச் சிவமென வேறு விளங்குமாறின்றி அச்சிவமேயாய் நிற்றல்வேண்டும். அதாவது சிவோகம் பாவனையில் விளங்கிய சிவம் ஒன்றனையே சிந்தித்து வேறொன்றனையும் சிந்தியாதிருத்தல் வேண்டும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'அவனே தானேயாகிய அந்நெறி, ஏகனாகி . . . . நிற்க' என்றுணர்த்தும். ஈண்டு 'அவன்' என்றது சிவத்தையும் 'தான்' என்றது உயிரையும் உணர்த்தும். 'நெறி' உவம உருபாய்ப் 'போல' என்னும் பொருளைத்தரும். 'ஏகனுதல்' என்பதற்கு 'ஒற்றித்து நிற்றல்' என்பது பொருள். உயிரின் பெத்தகாலத்துச் சிவம் அவ்வுயிரேயாய் நிற்றல் போல, சிவோகம் பாவனையாற் சிவ விளக்கப்பெற்ற உயிரும் அச்சிவமேயாய் நிற்றல்வேண்டும்.

---

|| சூ. V பா. 3.

## இரண்டாம் பாடம்

### சிவஞான சொரூபம் விளங்கப்பெற்ற உயிர், சிவ பணியில் வழுவாது நிற்றலும் வேண்டும்.

சிவஞான சொரூபம் விளங்கப்பெற்ற உயிர் சிவத்தோ டொற்றித்து நின்று சிவ விளக்கத்தினை முழுதும் பெறுதல் வேண்டுமென்றோம்.* ஆனால் இவ்வுயிர்க்கும் உடம்புள்ளதே. இவ்வுடம்போடு கூடியுள்ள உயிர் சிவத்தோடேகமாய் நிற்றல் எப்படி? என்பதை யாராய்வாம். உயிர் சிவத்தோடொற்றித்து நிற்றற்கு உடம்பினைவிட்டு நீங்கவேண்டுமென்பதில்லை. அதன் பணியினின்றும் நீங்கினாற்போதும். அப்பணியினின்றும் நீங்கல் எவ்வாறு என்பதே நாம் ஆரா்ய வேண்டுவது. உயிர் ஒருகாலத்து ஒன்றனையே அறியுமென்றோம்.† ஒன்றனை அறிதலே மற்றொன்றனை மறத்தற்கு உபாயமாமென்றுஞ் சொன்னோம்‡. அதுபோலவே, உயிர் ஒருகாலத்து ஒன்றன் பணியில் நிற்பது, மற்றொன்றன் பணியினின்று நீங்கற்குபாயமாம். எனவே, உயிர் பாசப் பொருள்களின் பணியினின்றும் தன் பணியினின்றும் நீங்குதற்குபாயம் சிவபணியில் நிற்றலேயாகும். ஆனால் சிவம் தொழிற்படு பொருளன்றாதலால், அதன் பணியினிற்றல் எவ்வாறெனில்? கூறுதும். அது தொழிற்படவில்லை யென்றாலும் மற்றெல்லாப் பொருள்களையுந் தொழிற்படுத்துவது அதுவே. சேதன அசேதனப் பொருள்கள் யாவும் சிவத்தினருள் வழியே தொழிற்படும் என்னும் உண்மையை அனுபவத்திலுணர்தலே, அதன் பணியினிற்றல் எனப்படும். இவ்வாறு சிவபணி நிற்றலைத் தலைக்கூடப்பெற்ற உயிர், மற்றப் பொருள்களின் பணியினின்றும் நீங்குதல் மாத்திரமன்றி,

* சூ. X. பா. 1. †, ‡ சூ. VII பா. 1.

அப்பொருள்களைத் தன் பணியில் நிறுத்துதலுங்கூடும். எது போலெனில், குற்றஞ்செய்தாரைக் காவலாளர் தண்டஞ்செய்வது, அரசன் ஏவல் வழியே. இவ்வுண்மையை யுணர்ந்து குற்றவாளிகள் அரசன் பணியிற்றலைக்கூடப் பெறுவரேல், அக்காவலாளர் பணியினின்றும் நீங்குவதோடு, அவரைத் தன் பணியினிறுத்துஞ் சுதந்திரத்தையும் பெறுவர். சிவபணியினிற்கும் உயிரும் இத்தகைய சுதந்திரத்தினைப் பெறும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'இறைபணி நிற்க' என்றுணர்த்தும்.

---

## மூன்றும் பாடம்

### சிவத்தோடேகமாய் நிற்கும் உயிரை ஆணவமலம் தாக்காது

ஆணவம் உயிரினறிவைத் தடுத்து நிற்பதோர் தடையென்றோம்.* இத்தடை சிவத்தினறிவைத் தடுக்காதென்றுஞ் சொன்னோம்.† இனி யிவ்வாணவம் சிவத்தோடொற்றித்து நிற்கும் உயிரினறிவைத் தடுக்குமா? என்பதை யாராய்வாம். உயிர் சிவத்தோடேகமாய் நிற்கும்போது, அதனறிவு முனைப்பின்றிக் கீழடங்குமென்றோம். உயிரினறிவு முனைத்து நின்றால் மட்டும் ஆணவம் அதனைப் பந்தித்தல்கூடும். அம் முனைப்பில்லாத உயிரறிவின்பால், ஆணவத்தாற் செய்யக் கிடப்பதொன்றுமில்லை. அவ்வறிவை அது தாக்குதலுமில்லை. என்றால் சிவத்தோடேகமாய் நின்றறியும் உயிரை அவ்வாணவம் தாக்காதென முடியும். இதனால் அவ்வாணவம் அவ்வுயிரினைவிட்டு நீங்குமென்பதன்று. வியாபகப் பொருட்கு நீக்கமில்லையென்று முன்னமே சொன்னோம். உயிரின் வியா

* சூ. I பா. 10. † சூ. II பா. 5.

பகம் எவ்வாறாயினும். ஆணவம் எப்போதும் ஒன்றுபோல் வியாபித்துள்ளதாதலால், அது உயிரினைவிட்டு நீங்குமா றில்லை. அது உயிரினைத் தாக்சாதென்பதே கருத்து. அதாவது சிவத்தோடொற்றித்து நிற்கும் உயிரின்கண், ஆண வமலம் உடனிருப்பினும், அவ்வுயிர்க்கு அஃதின்றாய் முடி யும். இம்முடிபையே யிச்சூத்திரம் 'மலம் . . . . இன்று' என்றியைபுற உணர்த்தும்.

---

## நான்காம் பாடம்

### சிவத்தோடேகமாய் நின்று சிவபணி இயற்றும் உயிர்க்கு மாயா கன்மங்களுமில்லை.

சிவத்தோடேகமாய் நிற்கும் உயிரை ஆணவமலம் தாக் காதென்றோம்.* என்றாலும், அவ்வுயிர் உடலோடும் அதன் கூறுகளாகிய இந்திரியங்கள் முதலியவற்றோடுங் கூடியுள் ளதே. அவைகள் யாவும் மாயா காரியங்களாதலால், அம் மாயையும் அவ்வுயிரினைத் தாக்காதா? இதுவன்றி, அவ்வுட லிந்திரியங்கள் யாவும் தத்தம் தொழில்களிற் குறைவின்றி நிற்பதால், அதனறிவை, அதன்முன்வினை மேல்வினைகளாகிய கன்மமும் தாக்காவா? இவற்றை யாராய்வாம். இவ்வுயிர் சிவத் தோடேகமாய் நிற்றல் மாத்திரமின்றி, அதன் பணியில் வழு வாதும் நிற்குமென்றோம்.† அதாவது பாசப்பொருள்களா கிய உடம்பு முதலியவற்றின் தொழில்கள் யாவும் சிவத்தின் தொழிலேயென வுணர்ந்து நிற்குமென்றுஞ் சொன்னோம்.‡ இவ்வுயிர் இந்திரியங்களின் வழிநில்லாமையால், அவ்விந்திரி யங்களின் முதற்காரணமாகிய மாயையாற்றாக்குதலில்லையென்

* சூ. X. பா. 3. †, ‡ சூ. X. பா. 2.

பது பெறப்படும். இனிக் கன்மத்தாலும் தாக்குறுமா? என்பதைக் கவனிப்பாம். இவ்வுயிர் தன்னோடு கூடியுள்ள இந்திரிய முதலியவற்றின் தொழில்களைச் சிவத்தின் தொழிலென உணர்வதால், எத்தொழிலையும் விருப்பு வெறுப்போடு செய்யாது. விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்படும் தொழில்கள் யாவும் உடலினைத் தாக்குவதன்றி உயிரினைத் தாக்காவென்றுஞ் சொன்னோம்.§ எனவே இவ்வுயிர்க்குமேல் வினையேறுமாறில்லையென முடியும். முன் வினைப்பயனும, மேல்வினையை உடன்கொண்டு நிகழ்வதன்றி வேறில்லையாதலால் அதுவும் உயிரினைத் தாக்காது. என்றால், கன்மபந்தமும் இவ்வுயிர்க்கில்லையென முடியும். இக்கருத்தையே இச்சூத்திரம் 'மாயை தன்னொடு வல்வினையின்றே' என்றுணர்த்தும். முற்பாடத்தில் இவ்வுயிரை ஆணவமலம் தாக்காதென்றோம். ஆதலால் சிவத்தோடேகமாய் நின்று சிவபணியியற்றும் உயிரை மூவகைப் பாசங்களுமே தாக்காது நீங்குமென்பதாயிற்று. இதுவே பாச நீக்கமெனப்படும். இது முன் மூன்று சூத்திரங்களிற் கூறப்படும் சாதகங்களாலெய்தும் பயன்களில் முதலாவதாகவுள்ளது.

பத்தாஞ் சூத்திரம் முற்றிற்று

§ சூ. II. பா. 3.

# பதினொராம் சூத்திரம்

**காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்**
**காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,**
**அயரா அன்பின், அரன்கழல் செலுமே.**

---

## முதற்பாடம்

*சிவம் உயிர்க்கு அறிந்தும் அறிவித்தும் உபகரிக்கும்.*

சிவோகம்பாவனையிலும் உயிருணர்வு முனைத்து நிற்பதால், அப்பாவனையாற் கிடைக்கும் சிவவிளக்கம் ஏகதேச விளக்கமென்றோம்*. இவ்வுயிருணர்வு நீங்குதற்பொருட்டு உயிர் அப்பாவனையாற் கிடைத்த சிவத்தோடேகமாய்ச் சிவ பணியில் வழுவாது நிற்குமென்றுஞ் சொன்னோம்†. இவ்வாறு நிற்றலின் பலன் மலமாயா கன்மங்களின் நீக்கமாகிய பாசநீக்கமென்றுஞ் சொன்னோம்‡. இப்பாச நீக்கமொன்றே சிவவிளக்கத்தைப் பூர்த்திசெய்தற்குப் போதுமா? அன்றிப் பாசம் நீங்கிய உயிராலும் மேலுஞ் செய்யக்கிடப்பதுண்டா? என்பதையுமாராய்வாம். இப்பாசத்தைக் கண்ணோய்க்கு ஒப்பிடலாம். கண்ணோய் நீங்கியதும், அக்கண்ணுக்கு ஆதித்தன் விளங்குவதில்லை. அதன் ஒளியே விளங்கும். அவ்வொளியைக்கொண்டே கண் ஆதித்தனைக் காணும். அதுபோல, பாசம் நீங்கினதும் உயிர்க்குச் சிவம் விளங்குவதில்லை. அச்சிவத்தினருளே விளங்கும். இவ்வருள் விளக்கத்தாலேயே உயிர்க்குச் சிவம் விளங்கும். இவ்வருள் யாது?

* சூ. X. பா. 1. †, சூ. X. பா. 1, 2. ‡ சூ. X. பா. 3.

அது விளங்குமாறென்னையென்பதே ஈண்டாராயவேண்டுவது. சிவம் உயிர்கள்பால் வைத்துள்ள கருணையே 'அருள்' எனப் படும். இக்கருணையாலேயே சிவம் உயிர்கள்பால் அத்து விதமாய்க் கலந்துநின்றுபகரிக்கும். பெத்த உயிர்கள்பால் அத்துவிதமாய்க் கலந்துநின்று உபகரிப்பதை முன்னரே விளக்கினோம்§. இவ்வுயிர்கட்கு உலகப்பொருள்களை அறி தற்கண் முதல்வனது அத்துவித உபகாரம் வேண்டப்படுமா போல, பாசம் நீங்கிய முத்த உயிர்கட்கும் சிவத்தை அறிதற் கண் அச்சிவத்தினது அத்துவித உபகாரம் வேண்டப்படும். இவ்வுபகாரத்தாலேயே உயிர்கள் எவ்வகைப் பொருளையும் அறிகின்றன. இதுவே சிவத்தின் அறிவிக்கும் உபகாரம். இனி யாண்டும் வியாபகமாயுள்ள சிவம் உயிர்கள்பால்மட்டும் அத்துவிதமாய்க் கலந்துள்ளதா? அன்றிப் பாசப் பொருள் களின்பாலும் அவ்வாறு கலந்துள்ளதா? அவ்வாறு கலத்த லினால் உயிர்க்குக் கிடைக்கும் உபகாரம் யாது? என்பதையும் ஆராய்வாம்.

கண் ஒரு பொருளைக் காணுதற்கு ஆதித்தனொளி அல் லது விளக்கொளி அக்கண்ணில் மாத்திரமன்றி, அதனாற் காணப்படு பொருளிலும் கலத்தல்வேண்டும். இன்றேல், இருட்டறையிலுள்ள பொருளையும் ஒளி கலந்த கண் காணல் வேண்டும். அஃதின்றாதலால், காணப்படுபொருளிலும் ஒளி கலத்தல் வேண்டுமென்பது பெறப்படும். அப்படியே, கண் ஒரு பொருளைக் காணுதற்கு அக்கண்ணில் உயிர் உணர்வு மாத்திரமன்றி, அக்கண்ணாற் காணப்படு பொருளின் ஒளி யும் உடன் கலத்தல்வேண்டும். உயிருணர்வு அக்கண்ணிற் கலத்தலினால், அக்கண் காண்டற் சத்தியைப்பெறும். அவ்வு

§ சூ. II பா. 8.

யிர் உணர்வு அக்கண்ணாற் காணப்படு பொருளொளியிற் கலத்தலினால் அப்பொருளைக் காணுவதாகும். உயிர் கண்ணிற் கலத்தல் அதன் காட்டலுபகாரம். அவ்வுயிர் அக்கண்ணாற் காணப்படு பொருளொளியிற் கலத்தல் அதன் காண்டலுபகாரம். அதுபோல, உயிர் ஒரு பொருளை யறிதற்கும் சிவம் அவ்வுயிரின்பால் மாத்திரமன்றி, அவ்வுயிராலறியப் படுபொருளினும் கலத்தல்வேண்டும். உயிரின்பால் சிவம் கலத்தலினால் உயிர் அறியுமென்றோம்||. அச்சிவம் உயிரால் அறியப்படுபொருளினும் கலத்தலினால் அப்பொருளை உயிர் அறியும். எனவே உயிரின்பால் கலத்தலாகிய சிவ உபகாரம் அறிவிக்கும் உபகாரம் எனப்படுவதுபோல, உயிராலறியப்படு பொருளின்பாற் கலத்தலாகிய சிவ உபகாரம் அறியும் உபகாரம் எனப்படும். ஆனால் சிவம், அசத்துப் பொருளை அறியாதென்றோமேயெனின்¶, கூறுதும். அதன் கருத்து, சிவத்துக்கு அசத்துப்பொருள்களில் யாதோர் அறிவும் நிகழ்வதில்லை யென்பதன்று; அவற்றில் அனுபவ அறிவில்லை யென்பதே. என்றால், சிவம் உயிர்க்குப் பொருள்களை அறிவித்தலோடு தானும் அறியுமென்பதாய் முடியும். இவ்விருவகை யுபகாரங்களையும் சிவம் உயிர்க்குச் செய்யும் என்பதை யுணர்தலே சிவத்தினருள் விளக்கமாம். இக்கருத்தையே இச்சூத்திரம் 'காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற், காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்' என்றுணர்த்தும். ஈண்டு 'உளம்' என்றது உயிரை. 'சிவம்' தோன்றா எழுவாய். இவ்வாக்கியம் 'காணுங் கண்ணுக்குக் கண்டு காட்டும் உளம்போல், உள்ளத்தைச் சிவம் கண்டு காட்டலின்' என்றியையும். இதன் கருத்து, காணுகிற கண்ணுக்கு உயிர் காட்டித்

|| சூ. II பா. 8. ¶ சூ. VII பா. 1.

தானும் காணுவதுபோல, சிவம் உயிர்க்கு அறிவித்துத் தானும் அறியும் என்பது.

---

## இரண்டாம் பாடம்

பாசம் நீங்கிய உயிர் சிவத்தினிருவித உபகாரங்களையும் அறிந்து மறவாது அன்பு மீதூர்தல் வேண்டும்.

---

சிவம் உயிர்கட்கு அறிவித்தும் அறிந்தும் உபகரித்து வருமென்றோம்.* இவ்வுபகாரங்களை எல்லாவுயிர்கட்குஞ் செய்துவரும். பாசம் நீங்காத உயிர்க்கும் அது நீங்கிய உயிர்க குஞ் செய்துவரும். பாசம் நீங்காத உயிர்க்கு அப்பாசப் பொருள்களை யறிவித்தும், அறிந்தும் உபகரிக்கும். பாசம் நீங்கிய உயிர்க்கோ, அப்பாசப்பொருள்கள் விஷயமாகா.† அவைகளை இவ்வுயிர்களும் அறியா. இவ்வுயிர்களின் பொருட்டுச் சிவமும் அறியாது. இவ்வுயிர்கள் தம்மையும் அறியாவென்றோம்‡. என்றால் இவைகளின் பொருட்டுச் சிவமும் இவற்றினை யறியாதென்பது பெறப்படும். இனி இவ் வுயிர்களாலறிய நிற்பதுதான் எது? சிவம் ஒன்றே. இச் சிவம் உயிர்க்குத் தன்னை யறிவிப்பதோடு தானும் தன்னை யறியுமென்றால், தன்னைப் பற்றுதலாகிய ஆன்மாச்சிரய தோஷம் வருமன்றோ? எனின், அன்று. தன்னையே தானறிதல் எக்காலத்தும் தோஷமாவதன்று. அசாத்தியமானவிடத்தே, தோஷமாய் முடியும். அத்தோஷம் 'ஆன்மாச்சிரய தோஷம்' எனப்படும். இதுவன்றி எதனாலும் எக்காலத்தும் தன்னை அறி யமுடியாதென்பதன்று. நம்முடைய கண்ணின் விம்பத்தைக் கண்ணாடியினுதவியின்றி நம்மாற் சிறிதுங் காணமுடியாது.

* சூ. XI. பா. 1. † சூ. X. பா. 1. ‡ சூ. XI பா. 1.

என்றாலும், அக்கண்ணாடியினுதவி கிடைத்தபோது, நம்முடைய கண் விம்பத்தையே நம்முடைய கண் காணுகின்றது. அப்படிக் காணுவது நம்முடைய உடம்பிலுள்ள கண் விம்பமே. வேறோர் விம்பமன்று. வெறுந் தோற்றமுமன்று. கண்ணாடியில்லாதபோது நம்முடைய கண் விம்பம் நம்முடைய கண்ணிந்திரியத்திற்கு எதிர்ப்படுவதில்லையாதலால்; அவ்விம்பத்தினொளி நம்முடைய கண்ணிந்திரியத்திற் கூடுமாறில்லை. அவ்வொளி, நம்முடைய கண்ணிந்திரியத்திற் கூடும் பொருட்டே கண்ணாடியினுதவி வேண்டப்படுகின்றது. இவ்வுதவி கிடைத்ததும் நம்முடைய கண் விம்பத்தின் ஒளியானது, அக்கண்ணாடியிற்பட்டுத் திரும்பி நமது கண்ணிந்திரியத்தில் வந்து கூடுகின்றது. எனவே, ஓர் கண் தன்னையும் காணுதல் கூடுமென்பதாய் முடியும். அப்படியே சிவமும் தன்னையறிதல் கூடும். அப்படியறிவதில் 'ஆன்மாச்சிரய தோஷ'மில்லை. ஆகவே, உயிர் பாசப்பொருள்களை யறிதற்கண் சிவம அறிவித்தல் அறிதலாகிய இருவித உபகாரங்களைச் செய்தல்போல, அச்சிவம் தன்னை யறிதற்கண்ணும் உயிர்க்கு அவ்விருவித உபகாரங்களைச் செய்யும். இவ்விருவித உபகாரங்களையும் சிவம் எல்லா உயிர்கட்கும் செய்து வருதலைப் பாசநீக்கம் பெற்று சிவத்தினருள் விளங்கிய உயிர்கள் யாவும் 'உணருமென்றோம்.‡ ஆனால் இவ்வுபகாரங்களை ஒரோபொழுது அறிந்தால்மட்டும் போதாது. இவற்றை மறக்கும் உயிர்கட்கு இவற்றின் காரணமாகிய அருள் விளக்கமும் இன்றாய் முடியும். ஆதலால் இவ்வுபகாரங்களைப் பாசம் நீங்கிய உயிர்கள் அறிந்து மறவாதிருத்தல் வேண்டும். இதுவன்றி இவ்வுபகாரங்களை யறிந்த உயிர்கள் அவ்வறிதலின் பலனாக அவற்றினைச் செய்த சிவத்தின்

‡ சூ. XI பா. 1

பால் இச்சை மீதூர்தலும் வேண்டும். யாரானும் ஒருவனால் நமக்குச் செய்யப்படும் உபகாரத்தை நாம் உண்மையிலறி வோமானால், நமக்கு அவன்பால் இச்சையுண்டாவது நிச்சயம். அப்படியே, சிவத்தின் இருவித உபகாரங்களையும் உண்மை யிலறியும் உயிர்கட்கு, அச்சிவத்தின் மீது இச்சை மென் மேலும் பெருகுவதும் வேண்டும். பாசம் நீங்கிய உயிர், இவ் வாறு சிவத்தினிருவித உபகாரங்களை யறிந்து, மறவாது அதன்பாலிச்சைபெருகி, மீதூரநிற்கும் நிலையே 'சிவநிஷ்டை' எனப்படும். இந்நிஷ்டையில் நிற்பார்க்கு உடம்பிருப்பதால், இவர் 'ஜீவன் முத்தர்' எனப்படுவர். இந்நிலையில் பாசம் நீங்கிய உயிர்கள் நிற்கவேண்டுமென்னுங் கருத்தையே, இச்சூத்திரம், 'அயரா அன்பிற் செல்லும்' என உணர்த்தும். ஈண்டு 'அயராமை'யாவது மறவாதிருத்தல். அன்பிற் செல் லுதலாவது, இச்சை மீதூர்தல், அதாவது பத்திசெய்தல்.

---

## மூன்றும் பாடம

சிவநிஷ்டையில் உறைத்து நிற்பவரே சிவத்தின் சீபாதமடைவர்.

பாசம் நீங்கிய உயிர்கள் சிவத்தின் இருவித உபகாரங் களை யறிந்து, மறவாது, அதன்பால் இச்சை மீதூர நிற்றலே சிவநிஷ்டை என்றோம்.* இனி இச்சிவநிஷ்டையின் பலன் தான் யாது? என்பதை யாராய்வாம். எல்லா உயிர்கள்பா லும் அன்னியமின்றிக் கலந்து நிற்கும் சிவம் இந்நிஷ்டை யில் உறைத்து நிற்கும் உயிர்கள்பாலும் அவ்வாறு கலந்து நிற்கும். ஆனால் மற்ற உயிர்களுக்கு அச்சிவத்தின்பால் இச்சை இன்றாதலால் அவ்வுயிர்கள் சிவத்தை அனுபவித்த

* சூ. XI பா. 2.

வில்லை. ஒருவன் நாவில் சர்க்கரை யிருப்பினும், அவனுக்கு அந்நாவிலுள்ள நோய் முதலிய காரணத்தால் அதன்பால் இச்சையின்றேல், அவன் அதன் ரசத்தை அனுபவியான். அதுபோல, சிவம் ஓர் உயிர்பால் கலந்திருப்பினும், அவ்வுயிர்க்கு அச்சிவத்தின்பால் இச்சை மீதூராதவரை சிவானுபவம் எய்தாது. சிவானுபவத்திற்குச் சிவத்தின்பாலுள்ள இச்சையின் பெருக்கமே காரணமாம். இவ்விச்சைப் பெருக்கத்திலழுந்தி நிற்பவரே சிவானுபவத்தைப் பெறுவர். இச்சிவானுபவமே சிவவிளக்கமாம். இதுவன்றிச் சிவத்தை வசன மாத்திரையால் அறிதல் சிவவிளக்கமன்று. இதுவே சிவப்பேறு என்று சொல்லப்படும். சிவம் யாண்டும் வியாபித்து நிற்கும் பொருளாதலால் அதனைத் தன் அனுபவத்தில் விளங்கப்பெறுதலே அதனைப் பெறுதலாம். இச்சிவ விளக்கமே சிவத்தின் சீபாதமடைதலுமாகும். ஈண்டுச் சீபாதமென்றது சிவத்தாலெய்தும் பரமசுகம். இச்சிவப்பேறுடையார் அதனால் வரும் சுகப்பேறுமுடையார். ஆதலால், இப்பேறு சீபாதப்பேறு எனப்படும். இப்பேறு உடம்புள்ள போதே அடையப்பெறுதலால், சீவன் முத்தி என்று சொல்லப்படும். இக்கருத்துக்களையே, இச்சூத்திரம் 'அரன் கழல் செலுமே' என்றுணர்த்தும். ஈண்டு உணர்த்தப்படும் 'அரன் கழல் செலுமே' என்பதற்கும், எட்டாஞ் சூத்திரத்து உணர்த்திய 'அரன் கழல் செலுமே' என்பதற்கும் பேதமுண்டு. அச்சூத்திரத்து 'அரன் கழல் செலுமே' என்பதற்கு, அன்னிய மின்மையின் என்பது ஏதுவாய் நின்றது. அதாவது சிவம் குருவுமாய் உணர்த்தக் கருவிகளைவிட்டு நீங்கிய உயிரால் நாட நிற்பது, அதனோடு அன்னியமின்றி நிற்கும் 'அரன் கழல்' என்பது கருத்து. இச்சூத்திரத்து

'அரன் கழல் செலுமே' என்பதற்கு ஏதுவாய் நிற்பது 'அபரா அன்பின்' என்பது. அதாவது சிவத்தின் உபகாரங்களை அறிந்து மறவாது அதன்மீது காதல்பெருக நிற்குமுயிர் அச்சிவத்தினை அடைந்து அனுபவிக்குமென்பது கருத்து. அதாவது எட்டாஞ் சூத்திரத்து கூறப்படும் 'அரன் கழல்' சிவரூபத்தினையும், ஈண்டுக் கூறப்படும் 'அரன் கழல்' சிவபோகத்தினையும் உணர்த்தும்.

பதினொராம் சூத்திரம் முற்றிற்று

# பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

---

## முதற்பாடம்

*சிவப்பேற்றினை யடைந்த ஜீவன்முத்தன் மும்மலங்களையும் அறக்களைவன்.*

சிவத்தோடு ஏகமாய் நின்று சிவபணி இயற்றுமுயிர்கள் மும்மலங்களினின்றும் நீங்குவரென்றோம்*. என்றாலும் அவர்கட்கு உடம்பிருப்பதால், பரமுத்தரெனப்படாது ஜீவன்முத்தரெனப்படுவரென்றும் சொன்னோம்†. இவர்க்கு உடம்பிருப்பதால் வரும் கேடென்னை? அக்கேட்டை நீக்குமா றெங்ஙனம்? என்பதையும் ஆராய்வது அவசியம். ஓர் கலத்தில் காயம் வைக்கப்பட்டிருப்பின், அது நீக்கப்பட்டபின்னும் அக்கலத்தில் ஒரோவேளை அக்காய வாசனை கந்திப்பதை நாம் அறிவோம். அதுபோலவே உடம்புள்ளளவும் பிராரத்தவினை அவ்வுடம்பினை ஒட்டி நிற்பதால் அவ்வுடம்பினையுடைய சீவன்முத்தன் அவ்வினையினின்றும் நீங்கினானாயினும், அவனையும் ஒரோவேளை அவ்வினை வாதனை வயத்தால் தாக்கலாமென்பது பெறப்படும். இதுவுமன்றி முன்வினை அனுபவத்தின்கண் தற்போதமும் கூடுமேல் விருப்பு வெறுப்

* சூ. X பா. 4. † சூ. XI பா. 3.

புக்களுண்டாகி ஆகாமிய வினையும் தாக்குவதாகும். அக்காலத்தில் நிலமுதலாம் பொருள்கள் அச்சீவன்முத்தனுக்குக் காட்சியாகி மாயையால் தாக்குறுதலும், அக்காட்சியால் சுட்டறிவு மேற்பட்டு வியாபக அறிவு கீழ்ப்பட்டு ஆணவமலத்தால் தாக்குறுதலும் கூடுமென்பதும் பெறப்படும். பெறப்படவே, இச்சீவன்முத்தன் சிவபோகவாழ்வை ஒரோவழி இழக்க நேருமாதலால், இம்மூன்று மலங்களில் எதுவும் தன்னை ஒரு காலத்தும் தாக்குறாதவாறு, அவற்றை அறக்களைவதற்கான உபாயத்தை இச்சீவன்முத்தன் தேடிக்கொள்ளல் வேண்டும். அவ்வுபாயம் யாது? என்பதை யாராய்வாம்.

நாம் முன் கூறியபடி இச்சீவன்முத்தனை இம்மலங்கள் தாக்குவதற்குக் காரணமாய் நிற்பது இவனது தற்போதமே. இத்தற்போதமே இவன்பால் விருப்பு வெறுப்புக்களையும் அதுபற்றி பிராரத்த ஆகாமிய வினைகளையும் அதுபற்றி மாயை ஆணவங்களையும் ஒரோவழி தாக்கும்படி செய்யும். இதனையே சீவன்முத்தன் தனக்கு மேற்கூறியபடி கிடைத்துள்ள சிவஞானத்தினால் களைவன். அதாவது காயமிருந்த கலத்தைச் சுத்தநீரால் கழுவக் கழுவ, அக்காயவாதனை ஒருகாலத்தும் கிளம்பாது அடங்குதல்போல இச்சீவன்முத்தனும் தன்மாட்டுண்டாந் தற்போதத்தைச் சிவஞானம் என்னும் நீரால் சுத்திகரிக்கச் சுத்திகரிக்க, அத்தற்போதம் ஒரு காலத்தும் கிளம்பாதபடி அடங்கும். சிவஞானத்தால் சுத்திகரித்தலாவது அதன்கண் உறைத்து நிற்றலேயாகும். இவ்வாறு சீவன்முத்தன் மும்மலங்களையும் களைவன் என்னும் கருத்தையே 'செம்மலர்நோன்றாள் சேரலொட்டா அம்மலம் கழீஇ' என்று இச்சூத்திரம் உணர்த்தும். ஈண்டு 'நோன்றாள்' என்றதற்கு நோற்கும் அல்லது பொறுக்குந்தாள்

அதாவது சகல சராசரங்களையும் தாங்கும் திருவடி யென்பது பொருள். அம்மலம் என்பதற்கு அவ்வியல்பினையுடைய மலம் அதாவது செம்மலர்நோன்றாளைச் சேரவொட்டாத வியல்பினையுடைய மலம் என்பது பொருள்.

---

## இரண்டாம் பாடம்

ஜீவன்முத்தன் சிவபத்தர்களோடு இணங்கி நிற்பன்.

ஜீவன்முத்தன் தன்னை மும்மலங்களும் ஒரோவழி தாக்காதபடி அவற்றை அறக்களைவன் என்றோம்*. ஆனால், இம்மலங்கள் ஒரோவழி தாக்குதல் அதற்குரிய இலக்கு வாய்த்துழி ஏறுவாதல் மாத்திரையாம். இதுவன்றி இலக்கு இல்லாதவழியும் தாக்கா. சிவபத்தரல்லாத அஞ்ஞானிகளின் கூட்டம் இவ்வாறன்று. இலக்குவாயாத வழியும் அவ்வஞ்ஞானிகள் இலக்குவாய்க்குமாறு செய்துகொண்டு பல உபாயங்களாலும் தம்முடைய விபரீத உணர்வைச் சீவன்முத்தர்பால் செலுத்தி அவரை மலங்களானுய பிறவிக்குழியில் வீழ்த்தித் துயருறுத்துவர். அதலால் ஜீவன்முத்தன் இவரது இணக்கம் மும்மலங்களினும் மிகக்கொடியதென்றுணர்ந்து அதனினின்றும் அஞ்சி ஒதுங்குவன். ஆனால், பரமுத்தனையும் இவரது இணக்கம் பாதிக்குமோவெனின், அன்று. இவனுக்குச் சரீரமின்றாதலால் அஞ்ஞானிகளின் கூட்டுறவு இவனை ஒரு சிறிதும் பாதியாது. ஆகவே சீவன்முத்தரே இவ்வஞ்ஞானிகளின் கூட்டத்தினின்றும் ஒதுங்குவர். ஆனால் இவரது இணக்கத்தினின்று ஒதுங்கினால் மாத்

* சூ. XII. பா. 1.

திரம் போதாது. அக்கூட்டத்தில் தொன்றுதொட்டு வந்த பயிற்சியும் இச்சீவன்முத்தனைவிட்டொழியவேண்டும். இன்றேல் இச்சீவன்முத்தன் இவரது கூட்டத்தினின்று எத்துணை ஒதுங்கினும், அவராக வலிந்து கூடின், பண்டைப் பயிற்சி வயத்தால் அவரது கூட்டத்திலிணங்க நேரும். அக்காலத்தும் அவரது கூட்டத்தைத் தவிர்த்தற்கான உபாயத்தைச் செய்வன். இவ்வுபாயம் சிவபத்தர்களாகிய மெய்ஞ்ஞானிகளின் இணக்கமே. தீயாரிணக்கத்தைத் தவிர்த்தற்கு நல்லாரிணக்கம் உபாயமாவதுபோல அஞ்ஞானிகளின் இணக்கத்தைத் தவிர்த்தற்கு மெய்ஞ்ஞானிகளாகிய சிவபத்தரிணக்கம் உபாயமாம். கழி காமத்தன் ஒருவனுக்கு அத்தொடர்புடையாரிணக்கம் காமப்பயிரை வளர்த்து அத்தொடர்பற்றார் இணக்கத்தைப் பாறச்செய்வதுபோல், சிவத்தின்பால் இச்சைமீதூர்ந்த சீவன்முத்தனுக்கு அச்சிவத்தின்பால் தொடர்புடைய சிவபத்தரிணக்கம் சிவானுபவமாகிய பயிரை வளர்த்து அஞ்ஞானிகளின் இணக்கத்தைப் பாறச் செய்யும். இதுபற்றியே ஜீவன்முத்தன் சிவபத்தரோடு எஞ்ஞான்றும் இணங்கி அவர்பால் மிகுந்த அன்புடையனாய் ஒழுகுவன். இக்கருத்தையே இச்சூத்திரம் 'அன்பரொடு மரீஇ' என்றுணர்த்தும். ஈண்டு 'மரீஇ' என்பதற்கு இணங்கி என்பது பொருள்.

---

## மூன்றும் பாடம்

ஜீவன்முத்தன் பத்தரதுவேடத்தைச் சிவமெனக்கண்டு வழிபடுவன்.

---

ஜீவன்முத்தன் பத்தர்களோடிணங்கி பத்தரல்லாத அஞ்ஞானிகளிணக்கத்தையும் அதுபற்றிவரும் மும்மல வாத

ளையையும் ஒழிப்பனென்றோம்.* பத்தரிணக்கம் ஜீவன் முத்தனுக்கு எல்லா இடங்களினும் எல்லாக் காலங்களினும் கிடைக்கற்பாலதன்று. ஆதலால் ஜீவன்முத்தன் வேறோர் உபாயத்தாலும் பலவாதனையை ஒழிப்பன். அவ்வுபாயம் யாது? என்பதையுமாராய்வாம். பத்தர்கள் தமது திருமே னிகளில் சிவத்தின் அருட்குணங்களைச் சிந்தனையுறுத்தும் சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷ முதலிய சிவ வேடங்களைத் தரித்துக்கொள்ளுவர். இவ்வேடங்கள் அவற் றைத் தரித்துக்கொள்ளுவார்க்கும் பிறர்க்கும் சிவசிந்தனை யைப் பயப்பித்துச் சிவஞானப்பயிரை வளர்க்குமென்பதை நாமனுபவத்திலறிவோம். இவ்வேடங்கள் யாவர்மாட்டுக் காணப்படினும் அத்தன்மைத்தேயாம். சிவபத்தர்கள்மாட் டுக் காணப்படினும் அல்லாதார்மாட்டுக் காணப்படினும் அத் தன்மைத்தேயாம். இவ்வேடத்தைச் சிவபத்தரல்லாதார் சில ரும், சிவபத்தர்போலக் காணப்படுமாறு தரித்துலவுவதை அறிவோம். ஆனால் இவரதிணக்கம் முன்னர்க் கூறியாங்கு தள்ளற்பாலதேயாயினும், இவரது வேடம் சிவசிந்தனை உறுத் துதற்கு உதவுதலால் கொள்ளற்பாலதேயாம். இவ்வேடங் களைச் சிந்திப்பார்க்கும் மெய்வேடங்களைச் சிந்திப்பார்க்குப் போலச் சிவம் விளங்கி அவரது மும்மலவாதனை நீங்குவதிற் றடையில்லை. இதனாலேயே சீவன்முத்தன் எவரிடத்தே னும் இலாடத்திட்ட திருநீறு சாதனம் முதலிய சிவவேடங் களைக் காண்புழி அவரைச் சிவமெனவே வழிபட்டுச் சிவஞா னத்தை வளர்ப்பன். இக்கருத்தையே இச்சூத்திரம் 'மாலற நேயம் மலிந்தவர் வேடமும்........அரனெனத் தொழுமே' என்றுணர்த்தும். மயக்கமற்று சிவபத்தி மலிந்தவர்களது

* சூ. XII பா. 2.

வேடத்தைத் தாங்கிய ஜீவர்களை ஜீவன்முத்தன் சிவமெனவே பாவித்து வழிபடுவனென்பது இவ்வாக்கியத்தின் கருத்து. இவ்வழிபாடு சிவாகமங்களில் கூறப்படும் மூவகை வழிபாடுகளில் குருசங்கம வழிபாடுகளாம். இது ஜீவன் முத்தர்களுக்கு மாத்திரம் பயன் தருமென்பது அன்று. ஜீவன் முத்தற்கும் பயன்தரும் இவ்வழிபாடு ஏனையோர்க்கும் பயன் தருமென்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் இவ்வழிபாட்டின் ஒரு சிறிதே, ஜீவன் முத்தனுக்குப் பெரிதும் பயனைத்தரும். ஏனையோர்க்கு அதுபோலன்று. அவர் இவ்வழிபாட்டில் நெடுங்காலம் பயின்றுவரவே, படிக்கிரமமாய்ச் சிறிது சிறிதாய்ப் பாசம் நீங்கப்பெற்று, ஜீவன் முத்தனாகி, மலவாதனையும் அற நீங்கி சிவனது சீபாதத்தை அணைவனென்பது கருத்து.

---

## நான்காம் பாடம்.

ஜீவன்முத்தன் சிவலிங்கங்களையும் சிவமென வழிபடுவன்.

ஜீவன்முத்தன் சிவவேடங்களைச் சிவமென வழிபட்டு மலவாதனையை ஒழிப்பனென்றோம்* சிவபத்தரிணக்கம் எக்காலத்தும் கிடையாதாதலால் அவரது வேடங்களை வழிபட்டு மலவாதனை நீங்கப்பெறுவரென்றும் சொன்னோம்†. என்றால், சிவபத்தர் ஒரோ காலத்து கிடையாது போவது போல் சிவவேடமுடையாரும் கிடையாது போகலாம். ஆதலால் ஜீவன்முத்தன் மற்றுமோர் உபாயத்தாலும் மலவாதனையை ஒழிப்பன். அவ்வுபாயம் யாது? என்பதையும் ஆராய்வாம். இச்சீவன்முத்தன்பால் சிவஞானத்தை வளர்த்து

*, †, சூ. XII பா. 3.

மலவாதனையை நீக்கி உதவுவது சிவவேடமுடையார் மாட்டுள்ள வேடமன்றி அவ்வேடமுடைய ஜீவனேயன்று. என்றால், அவ்வேடம் சித்துப்பொருள்களின்பால் காணப்பட்டால் மாத்திரம், அவ்வாறுதவுமென்பதன்று. ஜடப்பொருள்களின்பால் காணப்படினும் அவ்வாறுதவுவதிற் றடையில்லை. இச்சிவவேடங்களையுடைய ஜடப்பொருள்களே சிவலிங்கங்களெனப்படும். இச்சிவவேடங்களை ஒவ்வொருவரும் தத்தம் மனம்போனவாறு எண்ணுதபடி அவ்வேடங்கள் யாவை? அவற்றால் உணர்த்தப்படும் சிவகுணங்கள் யாவை? என்பதைச் சிவாகமங்கள் செவ்வனே விளக்கியுள்ளன. அவற்றில் சொல்லியபடி ஜீவன்முத்தன் தாவரசங்கமங்களில், சிவவடிவங்களாகிய சிவவேடங்களை அமைத்துக்கொண்டு அவற்றைச் சிவமெனவே பாவித்து வழிபட்டு மலவாதனையினின்றும் நீங்குவன். இக்கருத்தையே இச்சூத்திரம் 'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே' என்றுணர்த்தும். ஈண்டு ஆலயமென்றது ஏற்புழிக்கோடலால், சிவாலயத்தையுணர்த்தி ஆகுபெயராய் நின்று சிவாலயங்களில் அமைக்கப்பட்ட சிவமூர்த்தங்களை யுணர்த்தும். இவ்வழிபாடு இலிங்க வழிபாடு அல்லது சிவலிங்க வழிபாடு எனப்படும். குருசங்கம வழிபாடுகளைப்போலவே இவ்வழிபாடும், ஜீவன்முத்தர்க்கு மாத்திரமன்றி ஏனை எத்திறத்தோர்க்கும் பயன் தருவதாகும். இவ்வழிபாட்டில நாம் ஒரு சிறிதும் சலிப்பின்றிநின்று எவ்வகைப் பாசங்களினின்றும் நீங்கி சிவபோக வாழ்வுபெற்று இன்புறுவோம்.

திருச்சிற்றம்பலம்

**பன்னிரண்டாம் சூத்திரம் முற்றிற்று**

# முடிவுரை

இதுகாறும் சிவஞானபோதப் பன்னிரு சூத்திரங்களையும் பற்பல பாடங்களாகப் பிரித்தும், அவற்றையொரு சிறிது விரித்தும் ஆராய்ச்சி செய்தோம். இனிப் பன்னிரு சூத்திரங்களாலும் பெறப்படும் முக்கிய கருத்துக்களை மாத்திரம் எடுத்து ஒருவாறு சுருக்கியும் ஆராய்வாம். இச்சிவஞானபோதம் நம்மாற் பிரத்தியட்சத்திலறியக் கிடக்கும் இவ்வுலகப்பொருள்களை யுணர்த்த வெழுந்ததன்று. நம்மால் பிரத்தியக்ஷத்திலறிய வாராதனவும், பிரத்தியக்ஷத்திலறிய வரும் உலகப் பொருள்களினின்று ஊகித்தறியப்படுவனவுமான பொருள்களை யுணர்த்த வெழுந்தது. அவை கடவுள், உயிர், மலம் என்பன. பதி, பசு, பாசம் என்றுஞ் சொல்லப்படும். இம்மூவகைப் பொருள்கட்கும் தனித்தனி இருவகையியல்புகள் உள. அவ்வியல்புகள் பொது சிறப்பு எனப்படும். தடத்தம், சொரூபமென்றுஞ் சொல்லப்படும். இவைகள் முறையே, அயலிடத்து விளங்குவது, தன்பால் விளங்குவது எனப்பொருள்படும். எனில், மேற்கூறிய முப்பொருள்கட்கும் இவ்விருவகையியல்புகள் எவ்வாறு கூடுமென்பதை யாராந்து, இச்சிவஞான போதத்தில் அவைகட்குண்டெனக் கூறப்பட்ட இயல்புகள் யாவை யென்பதையும் ஆராய்வாம்.

கடவுளியல்புகள் யாவும் உயிர்கட்கு உபகாரமாவனவன்றித் தனக்குபகாரமாவனவல்ல. இவ்வுபகாரம் பெத்த உயிர்கட்கும் வேண்டப்படும். முத்த உயிர்கட்கும் வேண்டப்படும். ஆனால், இவ்விருதிறத்துபகாரங்களும் வேறு வேறே. பெத்த உயிர்கட்கு வேண்டப்படும் உபகாரம்

முத்த உயிர்கட்கு வேண்டப்படுவதில்லை. செய்யப்படுவது மில்லை. இவ்வுபகாரங்கள் வேறுதல்போல, இவற்றிற்கு ஏதுவாய் விளங்கும் கடவுளியல்புகளும் வேறு வேறும். பெத்த உயிர்கட்கு உபகாரமாய் விளங்கும் கடவுள் இயல்பு, கடவுளின் பொது வியல்பு. முத்த உயிர்கட்கு உபகாரமாய் விளங்கும் இயல்பு, சிறப்பியல்பு. பெத்த உயிர்கள் என்றும் பெத்தமாயிரா. எல்லாப் பெத்த உயிர்களும் யாதானும் ஓர் காலத்து முத்த உயிர்களாய் மாறுவனவே. என்றால், பெத்த உயிர்கட்குக் கடவுளாற்செய்யப்படும் உபகாரங்களும், அவற்றிற்கு ஏதுவாய் விளங்கும் கடவுளியல்புகளும் அத்தன்மையனவே. இவ்வுயிர்கட்குக் கடவுள் விளங்காதாதலால், இவ்வுயிர்கட்குபகாரமாய் விளங்கும் கடவுளியல்புகளும் அக்கடவுள்பால் விளங்கா. பிறபொருள்களாகிய பசு பாசப்பொருள்களின்பாலே விளங்குவன. இதனாலேயே இவ்வியல்புகள் தடத்தவியல்புகள் எனப்படும். இவையன்றி, முத்த உயிர்கட்குக் கடவுள் விளங்குமாதலால் அவ்வுயிர்கட்குபகாரமாய் விளங்கும் கடவுளியல்புகளும் அக்கடவுள்பாலே விளங்கும். இதுபற்றியே இவ்வியல்புகள் சொரூப வியல்புகள் எனப்படும். இம்முத்த உயிர்கள் என்றும் முத்த உயிர்களாயிருப்பதன்றி பெத்த உயிர்களாய் மாறுவாதலால் இச்சொரூபவியல்புகளும் என்றும் மாறு. இதனாலேயே, இவ்வியல்பு உண்மையியல்பென்றுஞ் சொல்லப்படும். உயிர் மலங்களின் பொது சிறப்பியல்புகளும் இவ்வாறே. உயிர்களின் பெத்த நிலையில் அவற்றிற்குபகாரமாய் அவற்றோடு கூட்டப்பட்ட கருவி கரணாதிகளில் விளங்குமியல்பு, அவைகளின் பொதுவியல்பு. அக்கருவி கரணாதிகளைவிட்டு நீங்கிய முத்திநிலையில், அவ்வுயிர்களின்பாலே விளங்குமியல்பு அவைகளின் சிறப்பியல்பு. அப்படியே மலங்கள் பெத்த உயிர்களைத் தாக்கியபோது அவ்வுயிர்களின்பால்

விளங்குமியல்பு அவைகளின் பொதுவியல்பு. அம்மலங்கள் முத்த உயிர்களைத் தாக்கும் வலியிழந்து நின்றபோது, அவைகளின்பாலே விளங்குமியல்பு அவைகளின் சிறப்பி யல்பு. இத்தகைய பொது சிறப்பியல்களையே இச்சிவஞான போதச் சூத்திரங்கள் விளக்கும்.

இவ்வியல்புகளில், மேற்கூறிய முப்பொருள்களின் பொது வியல்புகளை முன்னுறு சூத்திரங்களும், அவற்றின் சிறப்பியல்புகளைப் பின்னுறு சூத்திரங்களும் பெரும்பாலும் விளக்கும். இவ்வாறு விளக்குவதான உண்மையை இச்சிவ ஞானபோதத்து 1–ம் சூத்திரத்திறுதிக்கண் கடவுள் 'ஆதி' என்னும் பொதுப்பெயராலும், ஆறுஞ் சூத்திரத்து இறு திக்கண் அக்கடவுள் 'சிவம்' என்னும் சிறப்புப் பெயராலும் வழங்கப்படுவதால் அறியலாம். இனிப் பொதுவியல் ஆறு சூத்திரங்களும், முப்பொருள்களின் பொது வியல்புகளை ஒரே விதமாய் விளக்கவில்லை. முன் மூன்று சூத்திரங்கள், அம்மூன்று பொருள்களும் உளவென்று விளக்கு முகத்தால் அவற்றின் பொதுவியல்புகளை விளக்கும். பின் மூன்று சூத் திரங்கள், அவ்வியல்புகளைத் தனித்தெடுத்து விளக்கும். ஆனல், சிறப்பியலிலுள்ள சூத்திரங்கள், முப்பொருள்களின் சிறப்பியல்புகளைத் தனித்தெடுத்து விளக்கா. முப்பொருள் களின் பொதுவியல்புகள் தனித்தறியப்படுமாபோல, அவற் றின் சிறப்பியல்புகள், முத்தர்களாலன்றி நம்மால் தனித்த றியப்படா. ஆதலால், நமக்குணர்த்தவெழுந்த சிவஞான போத நூல் அச்சிறப்பியல்புகளைப் பிறிதொன்றை யுணர்த்து முகத்தாலுணர்த்தும். அதாவது சிறப்பியலின் முன்மூன்று சூத்திரங்கள் முத்தராதற்கு நாஞ் செய்யவேண்டிய சாதனங் களை யுணர்த்து முகத்தாலும், அவ்வியலின் பின் மூன்று

சூத்திரங்கள், முத்தரானார் அனுபவிக்கும் பயன்களை யுணர்த்து முகத்தாலு முணர்த்தும். இக்காரணத்தால், சிவஞான போதப் பன்னிரு சூத்திரங்களும், பிரமாணவியல், இலக்கணவியல், சாதனவியல், பயனியல் என நான்கு பிரிவிலும் அடங்கும். இயல்பு என்றாலும் இலக்கணம் என்றாலும் ஒன்றே. இரண்டாவது இயல், முப்பொருள்களின் இயல்புகளைத் தனித்தெடுத்து விளக்குவதால், அஃதொன்றே, இலக்கணவியலெனப்படும். இந்நான்கியல்களுள் முதலாவதான பிரமாணவியலைச் சுருக்கி யாராய்வாம்.

பிரமாணவியல், கடவுள், உயிர், மலம் எனப்படும் முப்பொருள்களுமுளவென்பதை யுணர்த்தும் ஏதுக்களை வெளிப்படையாயும் குறிப்பாயும் விளக்கவெழுந்தது. இதன் முதற் சூத்திரத்தில், கடவுள், மாயை, ஆணவம் இவைகள் உள என்பதை யுணர்த்தும் ஏதுக்களும், இவைகளுள் கடவுளின் பொதுவியல் பொன்றும் விளக்கப்பட்டுள்ளன. இதன் 1-வது பாடம் சிவஞானபோதத்தில், பொருளியல்புகள் ஏதுக்களால் விளக்கப்பட்டுள்ளன வென்பதையும்; 2 முதல் 4வரைப் பாடங்கள் கடவுள் உண்டென்பதை யுணர்த்தும் பிரத்தியட்ச ஏதுக்களையும்; 5—6 பாடங்கள் அம்மூன்று பிரத்தியட்ச ஏதுக்களினின்று ஊகிக்கப்படும் இரண்டனுமான ஏதுக்களையும்; 7-வது பாடம் அவ்விருதிறத்தேதுக்களாலும் கடவுள் உண்டென்று ஊகிக்கப்படுதலையும் விளக்கியுள்ளன. ஆனால் கடவுள் உண்டெனத் தெரிந்தவர்க்கு, யாதானும் ஒரு கடவுள் உண்டெனத் தெரிந்தால் மட்டும் போதாது, அக்கடவுள் யாவர் என்பதுந் தெரிதல்வேண்டும். ஆதலால், இச்சூத்திரத்து ஒன்பதாம் பாடம் அக்கடவுள் அரனே யென்பதையும்; 8-வது பாடம் அதனை உணர்த்தும் ஏது

வினையும்; 12-வது பாடம் அவ்வரசன் முழுமுதற் கடவுளா தலையும் விளக்கியுள்ளன. இனிக் கடவுள் உண்டென்பதற்கு ஏது உலகத் தொழிற்பாடேயாதலால், இவ்வுலகின் முதற் காரணம் யாது என்பதும், அதன் தொழிற்பாடு எதன் பொருட்டென்பதும், இச்சூத்திரத்து அவாவி நிற்கும். அவற்றையும் இதன் 10, 11 பாடங்கள் விளக்கும். 10-ம் பாடம் உலகின் முதற்காரணமாகிய மாயை உண்டென்பதைக் குறிப்பேதுவாலும்; 11-ம் பாடம், உலகத்தொழிற்பாட்டுக்குக் காரணமான ஆணவம் உண்டென்பதைக் குறிப்பேது வானும் விளக்கும். இடையே கடவுளின் முத்தொழில் புரிவதான பொதுவியல்பும் விளக்கப்பட்டுள்ளது. கடவுளும் இருவகை மலங்களும் உளவென்பது இச்சூத்திரத்தில் விளக்கப்படவே, மூன்றாவது மலமாகிய கன்மமும் உளவென்பதும், அதன் பொதுவியல்பும், கடவுள் உயிர்களின் பொதுவியல் புகளும் இரண்டாஞ் சூத்திரத்தில் விளக்கப்படுள்ளன. இதன் 1-ம் பாடம் கன்மம் உளதென்பதை யுணர்த்தும் பிரத்தியட்ச ஏதுவினையும்; 2ம் பாடம் அவ்வேதுவினின்று ஊகிக்கப்படும் அனுமான ஏதுவினையும்; 3-ம் பாடம் அவ்விரு ஏதுக்களாலும் கன்மம் உளதென்று பெறப்படுதலையும் விளக்கியுள்ளன. இம்மூன்று பாடங்களால் உயிர்களின் இறத்தல் பிறத்தல் புரிவதாகிய பொதுவியல்பும், அவ்விறத்தல் பிறத்தலை நியதிப்படுத்துவதாகிய கன்மத்தின் பொதுவியல்பும் விளக்கப்பட்டுள்ளன. இச்சூத்திரத்து நாலாம் பாடம் மேற்கூறிய கன்மத்தளவில், உயிர்க்கு இறத்தல் பிறத்தல்களைச் செய்யும் கடவுளின் பொதுவியல்பையும்; 5 முதல் 8 வரைப் பாடங்கள் அவ்விறத்தல் பிறத்தல்களைச் செய்தற் பொருட்டு அவ்வுயிர்களோடு இரண்டற நிற்பதாகிய கடவுளின் பொதுவியல்பையும்; 9-ம் பாடம் அவ்வாறு இரண்டற

நின்று உபகரிக்கும்பொருட்டுத் தன் சத்தியோடு நீக்கமின்றி நிற்றலாகிய கடவுளின் பொதுவியல்பையும் விளக்கியுள்ளன.

இனி மூன்றாம் சூத்திரம் உயிர் உண்டென்பதையும், அதன் வசிப்பிடத்தையும், அது யாது என்பதையும் உணர்த்தியது. இதன் 1-ம் பாடம் உயிர் உண்டென்பதை யுணர்த்தும் ஏதுவை வெளிப்படையாய் விளக்கியது. 2-ம் பாடம் அவ்வுயிர் வசிப்பது உடலினுள் என்பதை விளக்கியது. 3 முதல் 7 வரைப் பாடங்கள் அவ்வுயிர் யாது என்பதை விளக்கியது. ஆனால், கடவுள் யாவர் என்பதை முதற் சூத்திரம் உடன்பாட்டால் விளக்கியதுபோல், இச்சூத்திரம் உயிர் யாது என்பதை விளக்கவில்லை. கன்மேந்திரியங்களின் வேறு, ஞானேந்திரியங்களின் வேறு, சூக்குமவுடம்பின் வேறு, பிராணவாயுவின் வேறு, கடவுளின் வேறு என எதிர்மறை முகத்தால் விளக்கியது. இவையன்றி, உயிர் அந்தக்கரணங்களினும் வேறு என்பது இச்சூத்திரத்து விளக்கப்படவில்லை. அடுத்த இலக்கணவியலில் உயிரிலக்கணத்தோடு சேர்த்து விளக்கப்பட்டுள்ளது. அவ்விலக்கணவியலை ஆராய்வாம்.

இலக்கணவியல் மேற்கூறிய முப்பொருள்களின் பொதுவியல்புகளை விளக்கவெழுந்தது. ஆனால், கன்மத்தினியல்பு 2-ம் சூத்திரத்து 1 முதல் 3 வரைப் பாடங்களில் முற்றும் விளக்கப்பட்டிருப்பதால், இவ்வியலில் விளக்கப்படவில்லை. இதன் முதற் சூத்திரமாகிய நான்காஞ் சூத்திரம், உயிர் உண்டென விளக்கவெழுந்த மூன்றாஞ் சூத்திரத்தை யடுத்துநிற்பதால், அதில் உயிரின் பொதுவியல்புகளே முக்கியமாய் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை விளக்குமுன் உயிர் அந்தக்கரணங்களின் வேறு என்பது இச்சூத்திரத்து 1-ம் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது. இச்சூத்திரத்தில் விளக்கப்படும் உயி

ரின் பொது வியல்புகளாவன; யாதொரு அறிவு நிகழ்ச்சியுமின் றிக்கிடந்த உயிர் அந்தக்கரணங்களின் உதவியைக்கொண் டறிதல், அவ்வாறறிவதில் ஐந்தவத்தையுறுதல் ஆகிய விரண் டுமே. இவ்விருவியல்புகளும் இச்சூத்திரத்து 3 முதல் 5 வரை பாடங்களில் விளக்கப்பட்டுள்ளன. இவையன்றி, ஆணவத் தின் பொதுவியல்பும் இச்சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வியல்பு உயிரறிவை மறைப்பதான இயல்பு. இது இச் சூத்திரத்து 2-ம் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது. இனி இச்சூத்திரத்தில் மாயையின் பொதுவியல்புகள் கூறப்பட வில்லை. அது அந்தக்கரணங்களாகக் காரியப்பட்ட காலத் துள்ள இயல்புகளே கூறப்பட்டுள்ளன. அந்தக்கரணங்க ளன்றி, வேறு கருவிகளாகக் காரியப்படுவதும் மாயையே. மாயையின் அவ்வியல்புகளும், கடவுளின் சில பொதுவியல்பு களும், அடுத்த சூத்திரமாகிய ஐந்தாஞ் சூத்திரத்திற் கூறப் பட்டுள்ளன. இச்சூத்திரத்திற் கூறப்பட்ட மாயையினியல்பு கள், கருவிகளாகக் காரியப்பட்டு உயிராலதிஷ்டிக்கப்பட்ட போது பொருள்களை அளவினுட்பட்டறிதலும், அக்காலத் தும் தன்னை யதிஷ்டிக்கும் உயிரை யறியாமையுமாகிய இரண் டாம். இவ்விரண்டியல்புகள் இச்சூத்திரத்து 1, 2 பாடங்க ளில் விளக்கப்பட்டுள்ளன. இவையன்றி இச்சூத்திரத்துக் கூறப்பட்டுள்ள கடவுளினியல்புகள் கருவிகளைக் கொண் டறியுமுயிரை யதிஷ்டித்தலும், அக்காலத்தும் தான் அவ்வு யிராலறியப்படாமையும் எக்காலத்துந் தான் யாதொரு விகா ரமுமின்றி நிற்றலும் ஆகிய மூன்றுமே. இம்மூன்றியல்பு களும் இதன் 3, 4 பாடங்களில் விளக்கபபட்டுள்ளன. இச் சூத்திரமன்றி, இதனடுத்த சூத்திரமாகிய ஆறும் சூத்திரத்தி திலும், கடவுளின் பொதுவியல்பு கூறப்பட்டுள்ளது. இவ் வாறுஞ் சூத்திரம் சிறப்பியலை யடுத்து நிற்பதால் இதில் கடவு

ளின் பொதுவியல்பு மாத்திரமன்றிச் சிறப்பியல்புங் கூறப்பட்டுள்ளது. இதன் 3-ம் பாடத்தில் சுட்டறிவினலறியப்படாமையாகிய கடவுளின் பொதுவியல்பும், 1-ம் பாடத்தில் அதனை விளக்குமேதுவும்; இதன் 4-ம் பாடத்தில் வியாபக அறிவினல் அறியப்படுவதாகிய கடவுளின் சிறப்பியல்பும், 2-ம் பாடத்திலதனை விளக்குமேதுவும், இதன் 5-ம் பாடத்தில் மேற்கூறிய இயல்புகள் கடவுள்பால் ஒருங்கு கூடியுள்ளன என்பதும் விளக்கப்பட்டுள்ளன. சுட்டறிவாலறியப்படாமையாகிய கடவுளினியல்பு, உயிரின் சுட்டறிவில் விளங்குவதாதலால் கடவுளின் பொதுவியல்பெனப்படும். வியாபக அறிவினலறியப்படுவதாகிய இயல்பு கடவுளின் வியாபகஅறிவில் விளங்குவதாதலால் கடவுளின்சிறப்பியல்பு எனப்படும். முப்பொருள்களின் பொதுவியல்புகள் இவ்வாருக, அவற்றின் சிறப்பியல்புகளை யுணர்த்தும் முதலியலாகிய சாதனவியலையாராய்வாம்.

மூன்ருவதியலாகிய இவ்வியல் உயர் கடவுளை யறிதற் பொருட்டுச் செய்யவேண்டிய சாதனங்களை விளக்குவதால் சாதனவியலெனப்பட்டது. இவ்வியலில் விளக்கப்படும் சாதனங்கள்:—தவமியற்றல், சிவத்தைத் தன்னுள்ளே சிவோகம் பாவனைசெய்து நாடுதல், ஐந்தெழுத்தை அறிவினுள் உச்சரித்தல் ஆகிய மூன்றுமாம். இச்சாதனங்கள் படிக்கிரமமாய் அனுட்டிக்கப்படவேண்டியவைகள். இவற்றுள், தவமியற்றுதல் 8-ம் சூத்திரத்து 4-ம் பாடத்திலும்; சிவோகம் பாவனை செய்தலும் ஐந்தெழுத்தோதலும் 9-ம் சூத்திரத்து 1, 4 பாடங்களிலும் விளக்கப்பட்டுள்ளன. ஆனல் இச்சாதனங்களை விளக்கலே இவ்வியலின் முக்கிய கருத்தன்று. இவற்றை விளக்கு முகத்தால், முப்பொருள்களின் சிறப்பியல்புகளை விளக்கலே இதன் கருத்தாம். இப்பொருள்களுள், ஆணவம் கன்மம் இரண்டும் மேற்கூறிய சாதனங்கட்குப்

பயனிலவாய் அவை முற்றியபின் நீங்குவனவாதலால், அவை கள் இச்சாதனவியலிற் கூறப்படவில்லை. என்றாலும், மாயை மேற்கூறிய சாதனங்கட்கும் பயன்படுவதாதலால், அதன் சிறப்பியல்பு, இச்சாதனவியலில் விளக்கப்படும். அதனோடு சாதனஞ்செய்யும் உயிர், அச்சாதனத்தால் வெளிப்படும் சிவம், இவ்விரண்டின் சிறப்பியல்புகளும் இவ்வியலில் விளக்கப்படும். இம்மூன்று பொருள்களின் சிறப்பியல்புகளும், இவ்வியல் ஒவ்வொரு சூத்திரத்திலும் விளக்கப்பட்டுள்ளன. இதன் முதற் சூத்திரமாகிய 7-ம் சூத்திரத்து 1-ம் பாடத்தில், அசத்துப் பொருள்களை அனுபவத்திலறியாமையாகிய கடவுளின் சிறப் பியல்பும் அதனை விளக்குமேதுவும், இதன் 3 முதல் 5 வரைப் பாடங்களில் சத்தோடு தொடர்புவதுவாய் நின்று சத்தின் உதவியைக் கொண்டு சத்தினையறிவதாகிய உயிரின் சிறப்பியல்பும், 6-ம் பாடத்தில் சத்துமின்றி அசத்துமின்றி நிற்றலாகிய உயிரின் மற் றொரு சிறப்பியல்பும் விளக்கப்பட்டுள்ளன. உயிரின் இச்சிறப்பி யல்புகளை உணர்தற்பொருட்டு அசத்தோடுதுவதுவாய் நின்று அசத்தின் உதவியைக்கொண்டு அசத்தினையறிவதாகிய உயி ரின்மேற்கூறிய பொதுவியல்புகளும் மேற்சொன்ன 3 முதல் 5 வரைப் பாடங்களிலேயே சேர்த்து விளக்கப்பட்டுள்ளன. இவையன்றி ஒன்றையுமறியாமையாகிய அசத்தினியல்பு இயைபுபற்றி இதன் 2-ம்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது. இவ் வியல் 8, 9 சூத்திரங்களும் இம்மூன்று பொருள்களின் சிறப் பியல்புகளை விளக்குகின்றன. 8-ம் சூத்திரத்து 2, 3, 4 பாடங் களில், தவமுற்றிய உயிர்க்கு அதன் உண்மை இயல்பைக் குருவுமாயுணர்த்துதலாகிய சிவத்தின் சிறப்பியல்பும்; 5-ம் பாடத்தில் அவ்வாறுணர்த்தப்பெற்ற உயிர் பாசப்பொருள் களைத் தனக்கு வேறாகக்கண்டு சிவத்தை நாடுவதாகிய உயி ரின் சிறப்பியல்பும்; அப்பாடத்திலேயே அவ்வுயிர்க்கு வேறு

காணப்படுவதாகிய பாசத்தின் சிறப்பியல்பும் விளக்கப்பட்டுள்ளன. இவையன்றி யிச்சூத்திரத்து 1-ம் பாடத்தில் உயிரினை மயக்குமியல்பாகிய பாசத்தின் மேற்கூறிய பொதுவியல்பும், அவ்வுயிர் பாசங்களின் சிறப்பியல்புகளை விளக்குமுகத்தால் விளக்கப்பட்டுள்ளது. இனி 9-ம் சூத்திரத்து 2-ம் பாடத்தில் சிவோகம் பாவனை செய்யும் உயிர்முன் காட்சிப்படாது விரைவில் மறைவதாகிய பாசத்தின் சிறப்பியல்பும்; 3-ம் பாடத்தில் அவ்வுயிர்க்குத் தன்னருளை விளக்குவதாகிய சிவத்தின் சிறப்பியல்பும்; அவ்விரண்டு பாடங்களிலும் அவ்வுயிர் பாசப்பொருட் காட்சியினின்று நீங்குதலும் சிவத்தினருட்காட்சியினைப் பெறுதலுமாகிய உயிரின் சிறப்பியல்புகளும் விளக்கப்பட்டுள்ளன. இனி இறுதி யியலாகிய பயனியலை யாராய்வாம்.

இவ்வியல், மேலியலிற் கூறப்பட்ட சாதனங்களாற் பெறப்படும் முடிந்த பலன்களைக் கூறுவதால் பயனியல் எனப்பட்டது. என்றாலும், இவ்வியலில் சாதனங்கள் கூறப்படவில்லை என்பதன்று. உயிர்கள் செய்யவேண்டிய எல்லாச் சாதனங்களும் சாதன வியலிலே கூறப்பட்டுள்ளன வென்பதுமன்று. அவ்வியலில், சிவஞானக் காட்சி பெறுதற்கு வேண்டப்படும் சாதனங்களும், அக்காட்சியில் நிலைபெறுதற்கு வேண்டப்படும் சாதனங்களுமே கூறப்பட்டுள்ளன. அவையன்றி, உடம்புள்ளபோதே யடையப்பெறும் முத்திப்பேருகிய ஜீவன் முத்திக்கு வேண்டப்படுஞ் சாதனங்கள் கூறப்படவில்லை. அவைகள் இவ்வியலிலேயே கூறப்பட்டுள்ளன. இதிற் கூறப்படுஞ் சாதனங்கள்:—சிவத்தோடு சிவமெனத் தானென வேறு விளங்குமாறின்றி நிற்றல், அச்சிவத்தின் பணியில் வழுவாது நிற்றல், அச்சிவத்தின்பா லயராது அன்பு

மீதூர்தல், ஜீவபோதத்தினை யறக்களைதல், சிவனடியார்க ளோடு கூடிவாழ்தல், சிவவேடங்களைச் சிவமெனக் கண்டு வழிபடுதல், சிவலிங்கங்களைச் சிவமெனக்கண்டு வழிபடுதல் ஆக எழாம். இவற்றுள் முதல் மூன்றும் ஜீவன் முத்தி பெறு தற்குமுன் அம்முத்தி பெறுதற்பொருட்டுச் செய்யவேண்டி வைகள். எஞ்சிய நான்கும் ஜீவன்முத்தி பெற்றபின் அப்பேற் றில் நிலைநிற்றற்பொருட்டுச் செய்யவேண்டியவைகள். இச்சா தனங்களில் முதலிரண்டும் 10-ம் சூத்திரத்து 1, 2 பாடங்களி லும் மூன்றுவது சாதனம் 11-ம் சூத்திரத்து 2-ம் பாடத்தி லும், மற்றைய நான்கு சாதனங்களும் 12-ம் சூத்திரத்துப் பாடங்களிலும் விளக்கப்பட்டுள்ளன. இச்சாதனங்கள் 7. முன்னியலிற் கூறப்பட்ட சாதனங்கள் 3. ஆகப் பத்தில் எல்லாச் சாதனங்களும் முடிந்த பலன்களைத் தருவன வல்ல. 12–ம் சூத்திரத்திற் கூறப்பட்ட சாதனங்களின் பலன் பர முத்தியாதலாலும், அப்பரமுத்தி விளக்கற்பாலதன்றாதலா லும், அவற்றின் பலன்கள் சிவஞானபோதத்திற் கூறப்பட வில்லை. இவையன்றிச் சாதனவியலிற் கூறப்படுஞ் சாதனங்கள் மூன்றும் ஆரம்பத்திற் செய்யப்படுவனவாய் மேற்சொல்லிய மற்றைச் சாதனங்களோடு சேர்ந்தே பலன் றருவன வாதலால் அவைகட்குத் தனிப்பலன்களும் இவ்வியலிற் கூறப்படவில்லை. எனில் இவ்வியலிற் கூறப்பட்டுள்ள முதல் மூன்று சாதனங் கட்கே பலன்களும் விளக்கப்பட்டுள்ளன. அவை பாச நீக்கம், சிவப்பேறு என இரண்டாம். மலம், மாயை, கன்மம் எனும் மூன்றும் உயிரினைத் தாக்கும் வலியின்றாதலே அதன் பாச நீக்கமாம். இதுவன்றி 8, 9 சூத்திரங்களில் உயிர் பாசக் காட்சியினின்றும் நீங்குவதாகக் கூறப்பட்டுள்ளது, பாச நீக் கமன்று. இப்பாச நீக்கம், சிவத்தோடேகமாய் நிற்றல், அச்சிவபணியில் வழுவாது நிற்றல் ஆகிய இரண்டு சாதனங்

களாலும் பெறப்படுவது. இது 10-ம் சூத்திரத்து 3, 4 பாடங்களில் விளக்கப்பட்டுள்ளது. இதுவன்றி மற்றொரு பலனாகிய சிவப்பேறு 11-ம் சூத்திரத்து 3-ம் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது. இது ஜீவன் முத்தி என்றும், சிவநிஷ்டை என்றுஞ் சொல்லப்படும். இவ்விருபலன்களை விளக்குமுகத்தால் முப்பொருள்களின் சிறப்பியல்களும் கூறப்படுமென்றோம். இம் முப்பொருள்களுள், பாசம், உயிர் இவற்றின் சிறப்பியல்கள் மேற்கூறிய இருவகைப் பலன்களோடு சேர்த்துக் கூறப்பட்டுள்ளன. அவை, சிவத்தோடேகமாய்ச் சிவபணியினின்ற உயிர்முன் வலியின்றாதலாகிய பாசத்தின் சிறப்பியல்பும்; சிவத்தின்பால் அயராத அன்புமீதூர்ந்த உயிர், சிவத்தின் சீபாதம் மணைதலாகிய உயிரின் சிறப்பியல்புமே. இவையன்றி, உயிர்களின் பொருட்டுச் சிவம் சத்து அசத்துப்பொருள்களை யறிந்தும் அறிவித்தும் உபகரித்தலாகிய சிவத்தினியல்பும் 11-ம் சூத்திரத்து 1-ம் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது. இவற்றுள், சிவம் அசத்தினை யறிந்தும் அறிவித்தும் உபகரித்தலாகிய உபகாரம் பெத்த உயிர்கட்கே செய்யப்படுவதால், அது சிவத்தின் பொது வியல்பே. இப்பொது இயல்பு, 2-ம் சூத்திரத்து 8-ம் பாடத்து விளக்கப்பட்டுள்ளது. என்றாலும் தன்னையறிந்தும் அறிவித்தும் முத்த உயிர்கட்கு உபகரிப்பதாகிய சிவத்தின் சிறப்பியல்பினை விளக்குதற்பொருட்டு அஃது இச்சூத்திரத்தும் உடன் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே முப்பொருள்களின் பொது சிறப்பியல்புகள் இச்சிவஞானபோதத்து விளக்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகளின் எல்லா இயல்புகளும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன என்பதன்று. எவ்வெவ்வியல்புகள் இவ்வுலகப் பொருள்களிற் காணும் ஏதுக்களால் விளங்கற்பாலனவோ, எவ்வெவ்

வியல்புகள் பெத்தர்களாகிய நம்முடைய சிற்றறிவிற்கு விளங் கற்பாலனவோ, அவைகளே இந்நூலில் விளக்கப்பட்டுள் ளன. இவ்வியல்புகளும், இச்சிவஞானபோதத்தின் துணை வலியின்றி நம்மாலறியமுடியா. இத்துணைவலிகொண்டு இவ்வியல்களையறிவார், கேவலம் வசனமாத்திரமாக அறி யாது, உண்மையிலறிவாராவர். அதாவது அவற்றின்பால் அனுபவ அறிவுடையாராவர். இவ்வனுபவ அறிவே முத் திப்பேறும். இம்முத்திப்பேற்றினை யடைதற்கு இச்சிவ ஞானபோத ஆராய்ச்சியே முன்னின்றுதவும். இவ்வாராய்ச்சி நமக்குக் கைகூடுமாறு நாம் திருவருளைப் பன்முறையும் பிரார்த்திப்போம்.

திருச்சிற்றம்பலம்.

# பிழை திருத்தம்

| லக்கம் | பக்கம் | | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | முன்னுரை | 8 | 17 | விசேஷக் கல்வியறிவு | ... இத்தகைய விசேஷக் கல்வியறிவு |
| 2. | ,, | 9 | 11 | திருஷ்டாங்கள் | ... திருஷ்டாந்தங்கள் |
| 3. | ,, | 11 | 20 | முடித்ததற்கண் | ... முடித்தற்கண் |
| 4. | நூல் | 6 | 6 | ஈண்டேப் | .. ஈண்டு |
| 5. | ,, | 8 | 21 | மேற்கூறிய | ... மேற்கூறியபடி |
| 6. | ,, | 16 | 19 | ஒடுக்கமாவது என்பது | ... ஒடுக்கமாவது யாது என்பது |
| 7. | ,, | 23 | 2 | உணத்தும் | ... உணர்த்தும் |
| 8. | ,, | 32 | 23 | சொல்வோம் | ... சொல்லோம்[று |
| 9. | ,, | ,, | ,, | கொடுக்குமென்றும் | ... கொடுக்குமென் |
| 10. | ,, | 33 | 5 | நியதிப் | ... நியதிப்படிப் |
| 11. | ,, | 40 | 24 | பிரம்ம | ... பிரமம் |
| 12. | ,, | 44 | 20 | பெரிய | ... பெருகிய |
| 13. | ,, | 45 | 21 | சிறிய | ... குறுகிய |
| 14. | ,, | 52 | 18 | காரண பூதமாகிய | ... காரணமாகிய |
| 15. | ,, | 54 | 16 | கனவற் | ... கனவிற் |
| 16. | ,, | 55 | 5 | இலதாக்குத | ... இலவாக்குத |
| 17. | ,, | ,, | 6 | உளதாக்குத | ... உளவாக்குத |
| 18. | ,, | 58 | 21 | வேரேருன்றன் | ... வேறொன்றன் |
| 19. | ,, | 59 | 12 | போவதையமறிவோம் | ... போவதையுமறிவோம் |
| 20. | ,, | ,, | 17 | அறவைக் | ... அறிவைக் |
| 21. | ,, | 60 | 21 | தூலமமான | ... தூலமுமான |
| 22. | ,, | 61 | 1 | முடிவையை | ... முடிவை |

| லக்கம் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 23. | ,, ,, | 20 | அவசியறி | ... அவசியம் |
| 24. | ,, 63 | 23 | தலையாதி | ... கலையாதி |
| 25. | ,, 68 | 13 | விளக்குமு | ... விளக்கமு |
| 26. | ,, 72 | 3 | வியாக | ... வியாபக |
| 27. | ,, 77 | 9 | மலறைப்புள்ள | ... மலமறைப்புள்ள |
| 28. | ,, 79 | 13 | பாசாஞான | ... பாசஞான |
| 29. | ,, 84 | 13 | அறிவதனுல் | ... அறிவதானுல் |
| 30. | ,, 94 | 10 | வகுப்பினுக்கு | ... வகுப்பினர்க்கு |
| 31. | ,, 106 | 6 | உண்மை | ... உண்மையை |
| 32. | முடிவுரை 130 | 19 | யிருப்பதன்றி | ... யிருப்பனவன்றி |
| 33. | ,, 131 | 4 | சிறப்பியல்களை | ... சிறப்பியல்புகளை |